குருபாத தாசர்

பாடிய

குமரேச சதகம்

மூலமும் உரையும்

உரையாசிரியர்:

திரு. புலவர் 'அரசு' அவர்கள்

கழக வெளியீடு

குமரேச சதகம்

- மூலமும் உரையும் -

உரையாசிரியர் :
திரு. புலவர் 'அரசு' அவர்கள்

கழக வெளியீடு : கூ௫௩

குமரேச சதகம்

மூலமும் உரையும்

உரையாசிரியர் :

திரு. புலவர் ‘அரசு’ அவர்கள்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை-1.

First Edition: April, 1953

Published by :

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., 1/140, BROADWAY :: MADRAS-1.

Head Office :

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1

பதிப்புரை

நம் செந்தமிழ்மொழி பழங்காலத்து மொழிகளுள் ஒன்றாகப் பண்பட்டுச் சிறந்த மொழி. இதன்கண் காலத்துக்கேற்ப எழுந்த இலக்கியச் செல்வங்கள் பல. அவைகளுள் 'சதகம்' என்னும் வகையும் ஒன்று. சதம் என்னும் சொல் வடசொல். அது ககரம் பெற்று சதகம் என்றாயிற்று. சதகமாவது நூறு என்னும் பொருளது. **குமரேசசதகம்** என்பது குமரேசர்மீது நூறு செய்யுட்களால் ஆக்கப்பட்ட நூல் எனப் பொருள் தரும்.

பிற்காலப் புலவர்கள் சதகவகை நூல்கள் யாத்து அதன்கண், மக்கட்கு மக்களாக வாழவேண்டிய உலகியல் நெறி அறம் முதலியவற்றைச் செம்பாகமான எளிய இனிய தொடர்களைக் கொண்டமைத்து விளக்கி வருவாராயினர்.

அதுபோன்றே இந்நூலும் திருப்புல்வயலில் எழுந்தருளியிருக்கின்ற குமரேசர்மீது வாழ்த்தாகப் பாடி இறுதி யடிகளில் இறைவன் பெயரை ஒரே மகுடமாக அமைத்து மேல் அடிகளிலெல்லாம் அறனும் மறனும் பண்பும் பழக்கவழக்க ஒழுக்க முறைகளும் பொதுள அமைத்துப் பாடப்பெற்றிலகுறுகின்றது.

இத்தகைய அரிய நூலுக்கு எல்லோரும் நன்கு பொருள் தெரிந்து பயிலும்பொருட்டு **திரு. புலவர் அரசு** அவர்களால் நன்முறையில் உரையெழுதுவித்துச் செப்பமுற வெளியிட்டுள்ளோம். தமிழ்மக்கள் வாங்கிக் கற்று நற்பயன் எய்துவார்களென நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உ

முருகன் துணை

திருப்புல்வயல்

குமரேசசதகம்

மூலமும் உரையும்

தொடருரை

குமரேச சதகம் என்பது மூன்று சொற்களாலும் இரண்டு சந்திகளாலும் ஆன தொடர். முன்னது இரு பெயரொட்டுப் பண்புத்தொகை. பின்னது ஆறும் வேற்றுமைத்தொகை. (குமரனாகிய ஈசன், குமரேசனது சதகம்).

சதகம் என்பது நூறு செய்யுட்களால் உலகியல்பற்றி வரும் ஒருவகை நூல். சதம் - நூறு. சதகம்—நூறு செய்யுட்களைக் கொண்டது.

"விளையு மொருபொருள் மேலொரு நூறு
தளைய வுரைத்தல் சதகம் என்ப." —(இலக்கண விளக்கம்.)

ஒருபொருளென்பது அகம் புறம் என்னும் இருவகைகளில் ஒன்றைப்பற்றியது. இந்நூல் புறப்பொருள் பற்றியது. குமரேசனைத் தலைவனாக அமைத்து இந்நூலைச் செய்திருப்பதாற் குமரேசசதகம் எனப்பட்டது. அதாவது குமரக் கடவுளை வாழ்த்தும் முறையிலே எழுதப் பெற்றதென்க.

'திருப்புல்வயல் புதுக்கோட்டை வட்டத்தைச் சார்ந்த ஓரூர். அங்கே ஒரு மலையின்மீது குமரக்கடவுள் திருக்கோயிலுள்ளது. அதற்கு அருணகிரிநாதர் திருப்புகழும் உளது' என்பர்.

இச்சதகத்தின் இறுதியிலே, 'பன்னிய புல்வயலில் வாலகுமரேசர்மேற் பரிந்து **குரு பாததாசன்**' எனவருவதாலே இந் நூலாசிரியர் பெயர் குருபாததாசர் என அறியலாம். இவரது இயற்பெயர் முத்துமீனாட்சிக் கவிராயரென்று கூறுகிறார்கள். வேளாளர் குலம் என்பர்.

காப்பு

பூமேவு புல்லைப் பொருந்துகும ரேசர்மேல்
தேமே வியசதகம் செப்பவே—கோமேவிக்
காக்கும் சரவணத்தான் கம்பகும்பத் தைந்துகரக்
காக்குஞ் சரவணத்தான் காப்பு.

(**இதன் பொருள்**) பூமேவு புல்லைப் பொருந்து குமரேசர் மேல் - புவியிலே சிறப்புற்ற திருப்புல்வயலில் எழுந்தருளிய குமரக் கடவுள்பால், தேன்மேவிய சதகம் செப்ப - இனிமை பொருந்திய சதகத்தைக் கூற, கோமேவிக் காக்கும் சரவணத்தான் - தலைமையாக இருந்து காப்பாற்றும் சரவணத்திலே தோன்றிய முருகனும், கம்பம் - (அடியவருடைய அன்பாகிய) கட்டுத்தறியிலே பிணிப்புண்ட, கும்பத்து ஐந்துகரம் கா குஞ்சர வணத்தான் - குடம் போன்ற மத்தகத்தினையும் ஐந்து திருக்கைகளையும் உடைய, காட்டில் உறையும் யானையின் வடிவத்தையுடைய மூத்த பிள்ளையாரும், காப்பு - காவலாகும்.

(**விளக்கவுரை**) புல்லை - திருப்புல் வயல் (மரூஉ). ஒரு சொல் தன் வடிவம் திரிந்து மருவிவருவது மரூஉ. மருவுதல்—பல நாள் பழகி வருதல். சென்னபட்டினம் என்பது சென்னை எனவும், கோயம்புத்தூர் கோவை யெனவும், பூவிருந்தவல்லி பூவையெனவும் வருவனவும் மரூஉ ஆகும்.

(கருத்து) குமரேச சதகத்திற்கு மூத்தபிள்ளையாரும் (விநாயகரும்) முருகனும் அருள் புரிவார்கள்.

(வடசொல்) குமரன் - இளையோன், ஈசன் - தலைவன், சரவணம்- நாணல், கரம் - கை, குஞ்சரம் - யானை, வணம் (வர்ணம்) - வடிவு (அழகு).

அவையடக்கம்

ஆசிரிய விருத்தம்

மாரிக்கு நிகர்என்று பனிசொரிதல் போலவும்,
மனைக்குநிகர் என்றுசிறு பெண்
மணல்வீடு கட்டுவது போலவும், சந்த்ரன்முன்
மருவும்மின் மினிபோல வும்,
பாருக்குள் நல்லோர் முனேபித்தர் பலமொழி
பகர்ந்திடுஞ் செயல்போல வும்,
பச்சைமயில் ஆடுதற்(கு) இணையென்று வான்கோழி
பாரில்ஆ டுதல்போல வும்,
பூரிக்கும் இனியகா வேரிக்கு நிகர்என்று
போதுவாய்க் கால்போல வும்,
புகல்சிப்பி முத்துக்கு நிகராப் பளிங்கைப்
பொருந்தவைத் ததுபோல வும்,
வாரிக்கு முன்வாவி பெருகல்போ லவும்,இன்சொல்
வாணர்முன் உகந்துபுல் லை
வாலகுமரேசர்மேற் சதகம் புகன்றனன்
மனம்பொறுத்(து) அருள்புரிக வே.

(இ - ள்.) மாரிக்கு நிகரென்று பனிசொரிதல் போலவும் - மழைக்குச் சமமாகப் பனி பெய்தல் போலவும், மனைக்கு நிகர் என்று சிறுபெண் மணல்வீடு கட்டுவது போலவும் - வீட்டுக்கு ஒப்பாகும்படி ஒரு சிறுமி மணலாலே வீடு கட்டுவது போலவும், சந்த்ரன் முன் மருவும் மின்மினி போலவும் - திங்களுக்குச் சமமாகப் பொருந்தும்(படி) மின்

மினி (ஒளிவிடுதல்) போலவும், பாருக்குள் நல்லோர்முனே பித்தர் பல மொழி பகர்ந்திடும் செயல் போலவும் - உலகில் நல்லவர்கள் பேசுவதைப் போலப் பித்தர்கள் பலசொற்கள் பிதற்றுவது போலவும், பாரில் பச்சை மயில் ஆடுதற்கு இணையென்று வான்கோழி ஆடுதல்போலவும் - உலகத்தில் அழகிய பசுமையான மயில் ஆடுவதற்கு ஒப்பாக வான் கோழி ஆடுவது போலவும், பூரிக்கும் இனிய காவேரிக்கு நிகரென்று போது வாய்க்கால் போலவும் - பெருகிச் செல் லும் அழகிய காவேரி யாற்றுக்குச் சமமாகச் செல்லும் சிறு வாய்க்கால் போலவும், புகல்சிப்பி முத்துக்கு நிகராப் பளிங்கைப் பொருந்த வைத்தது போலவும் - புகழ்ந்து சொல்லப்படும் சிப்பியின் முத்துக்குச் சரியாகப் பளிங் கைப் பொருத்துவது போலவும், வாரிக்குமுன் வாவி பெருகல் போலவும் - கடலுக்கு நிகராப் பொய்கை நிறைந்து காட்டுதல் போலவும், இன்சொல் வாணர்முன் - இனிய மொழிகளையுடைய கவிஞருக்குச் சமமாக (எண்ணி), புல்லை வால குமரேசர் மேல் உகந்து சதகம் புகன்றனன் - திருப்புல்வயலில் எழுந்தருளிய குமரக் கடவுளைத் தலைவராக வைத்து விருப்பத்துடன் சதகம் என்னும் நூலை எழுதினேன்; மனம் பொறுத்து அருள் புரிக - (கவிவாணர்கள்) முழுமனத்துடன் பொறுத்துக் கொண்டு (இச்சதகத்தை) ஏற்று அருள்வாராக.

(கருத்து) 'என் சொற்கள் புலவர் சொற்களைப் போல இனிமையாக இல்லாவிடினும் பொறுத்து, இந்த நூலை ஏற்றுக் கொள்க' என்பதாம்.

(அருஞ்சொற்கள்) மாரி - மழை. மருவுதல் - பொருந்துதல். பார் - உலகம். நிகர்ஆ - சமம் ஆக. வாரி - கடல். வாவி - குளம். வாழ்நர் என்பது வாணர் எனஆயிற்று. உகப்பு - விருப்பம். சிப்பியிலிருந்து முத்துப்பிறக்கும்.

(வடசொல்) சந்திரன் - திங்கள், பித்தர் - அறிவு மயங்கியவர்.

நூல்

க. முருகன் திருவிளையாடல்

பூமிக்(கு)ஓ ராறுதலை யாய்வந்து சரவணப்
  பொய்கைதனில் விளையா டியும்,
புனிதற்கு மந்த்ரவுப தேசமொழி சொல்லியும்,
  போதனைச் சிறையில் வைத் தும்,
தேமிக்க அரியரப் பிரமாதி கட்கும்
  செகுக்கமுடி யாஅசு ரனைத்
தேகம் கிழித்துவடி வேலினால் இருகூறு
  செய்(து)அமரர் சிறைதவிர்த் தும்,
நேமிக்குள் அன்பரிடர் உற்றசம யந்தனில்
  நினைக்குமுன் வந்துதவி யும்,
நிதமும்மெய்த் துணையாய் விளங்கலால் உலகில்உனை
  நிகரான தெய்வம்உண் டோ?
மாமிக்க தேன்பருகு பூங்கடம்(பு) அணியும்மணி
  மார்பனே! வள்ளிகண வா!
மயிலேறி விளையாடு குகனே!புல் வயல்நீடு
  மலைமேவு குமரே சனே!

(இ - ள்.) மிக்க தேன் மா பருகு பூ கடம்பு அணியும் அணி மார்பனே—மிகுந்த தேனை வண்டுகள் அருந்தும் அழகிய கடப்பமாலை புனைந்த அழகிய மார்பனே!, வள்ளி கணவா—வள்ளியம்மையார் கணவனே!, மயிலேறி விளையாடு குகனே—மயிலில் அமர்ந்து திருவிளையாடல் புரியும் குகனே!, புல்வயல்நீடு மலை மேவு குமரேசனே! - திருப் புல் வயலில் உயர்ந்த மலையின்மேல் எழுந்தருளிய குமரக் கடவுளே!, பூமிக்கு ஓர் ஆறுதலையாய் வந்து - உலகிற்கு ஒரு அமைதியை உண்டாக்க எழுந்தருளி, சரவணப் பொய்கைதனில் விளையாடியும் - நாணல் நிறைந்த குளத் திலே திருவிளையாடல் புரிந்தும், புனிதர்க்கு மந்திர

உபதேசமொழி சொல்லியும் - குற்றமற்றவரான சிவபிரானுக்குப் பிரணவ மந்திரத்தைச் சொல்லியருளியும், போதனைச் சிறையில் வைத்தும் - நான்முகனைச் சிறையிலே அடைத்தும், தே மிக்க அரி அரப் பிரமாதிகட்கும் செகுக்க முடியா அசுரனை - தேவர்களிற் சிறந்த திருமாலும் சிவனும் நான்முகனும் போன்றவர்களாலே அழிக்க முடியாத சூரபதுமனை, வடிவேலினால் தேகம் கிழித்து இரு கூறு செய்து அமரர் சிறை தவிர்த்தும் - கூரிய வேலினாலே உடலைப் பிளந்து இரு கூறாக்கி வானவருடைய சிறையை விடுவித்தும், நேமிக்குள் அன்பர் இடர் உற்ற சமயந்தனில் நினைக்குமுன் வந்து உதவியும் - உலகத்தில் அடியவர்கள் துன்பம் அடைந்தபோது (அவர்கள்) நினைப்பதற்கு முன் வந்து அருள்புரிந்தும், நிதமும் மெய்த்துணையாய் விளங்கலால் உலகில் உனை நிகர் ஆன தெய்வம் உண்டோ? - எப்போதும் உண்மையான ஆதரவாக இருப்பதால் உலகத்தில் உனக்குச் சமமான தெய்வம் உண்டோ? (இல்லை).

(விளக்கவுரை) ஆறு தலையாய் என்பதற்கு ஆறு தலைகளுடன் என்றும் பொருள் கூறலாம்.

கதை க. ஆறு முகங்களுடன் முருகக் கடவுள் பிறந்த வரலாறு:—வானவர்கள் சூரபதுமனால் அடைந்த துன்பத்தை நீக்கச் சிவபிரான் விரும்பினார். அவருக்கு ஐந்து முகங்களுண்டு. அவற்றோடு கீழ்நோக்கும் முகம் ஒன்றை அமைத்துக்கொண்டு ஆறு முகமானார். அவருக்கு ஒவ்வொரு நெற்றியிலும் கண்கள் இருந்தன. அவை நெருப்புக் கண்கள். மற்றஇரண்டு கண்களும் ஞாயிறும் திங்களும் ஆகும். அந்த நெற்றிக்கண்களிலிருந்து ஆறுபொறிகளை உண்டாக்கினார். அவைகள் கங்கையிலே மிதந்து சென்று நாணற் பொய்கை ஒன்றிலே தங்கின. அவை அங்கே ஆறு குழந்தைகளாக விளையாடின. அக்குழந்தைகளை உமையம்மையார் ஒன்றாக அணைத்தவுடன் ஆறுமுகமும் பன்னிரண்டுகைகளுமுள்ள ஒரு குழந்தையாக அவைகள்மாறின.

கதை: உ. நான்முகனைச் சிறையில் அடைத்தது:—முருகக் கடவுள் திருக்கைலையிலே குழந்தையாக விளையாடிக்கொண்டிருந்த போது நான்முகன் சிவபிரானை வணங்க அவ்வழியே வந்தான். அவன் தம்மை வணங்காமல் இறுமாப்புடன் செல்வதைக் கண்ட முருகக் கடவுள் அவனைக் கூப்பிட்டு, 'உனக்கு மறைகள் தெரி

யுமா?' என்று வினவினர். அவன் தெரியும் என்றான். 'பிரணவத்திற்குப் பொருள் தெரியுமா?' என்றார். தெரியாமையால் அவன் விழித்தான். 'பிரணவத்தின் பொருள் தெரியாத நீயா உலகைப் படைக்கும் பெரிய தொழிலுக்கு ஏற்றவன்?' என்று கூறி அவன் தலைகளிலே குட்டினர். பிறகு சிறையிலடைத்து விட்டார்.

கதை: ௩. சிவபிரானுக்குப் பிரணவத்தைக் கூறியது:— நான்முகன் சிறையில் அடைபட்டதை அறிந்த வானவர்கள் சிவபிரானிடம் முறையிட்டனர். அவர் எழுந்தருளி வந்து முருகக் கடவுளிடமிருந்து நான்முகனை விடுவித்தார். பிறகு, 'நீ பிரணவத்தின் பொருளை அறிவையோ?' என்று வினவினர். அவர், 'அறிவேன்' என்றார். 'அங்ஙனமாயின் கூறுவாயாக!' என்றார். 'அது மறை ஆகையால் ஆசிரியனிடம் மாணவன் பெற்றுக்கொள்வதுபோல ஏற்றுக்கொள்வதானுற் கூறுகிறேன்' என்று குமரக் கடவுள் கூறினர். சிவபிரான் அவ்வாறே அவரை உயர்ந்த இருக்கையில் எழுந்தருளச் செய்து, தாம் மாணவர்போல எதிரே நின்றார். முருகக் கடவுள் சிவபிரான் திருச்செவியிலே பிரணவ மந்திரத்தைக் கூறியருளினர்.

கதை: ௪. சூரபதுமன் இரு கூறானது:—சூரபதுமன் அழியா வரம் பெற்றவன். ஆகவே, அவனை வடிவேலால் இரண்டாகப் பிளந்தவுடன் சேவலும் மயிலுமாக மாறினன். சேவலைக் கொடியாகவும் மயிலை ஊர்தியாகவும் முருகக் கடவுள் கொண்டார்.

(அருஞ்சொற்கள்) புனிதம் (வடமொழி) தூய்மை (குற்றமின்மை) உபதேசம் (வடசொல்) - சொல்லிக் கொடுத்தல், போதம் - அறிவு. தே (வடமொழி) - தெய்வம். செகுத்தல் - வீழ்த்துதல், தேகம் (வடமொழி) - உடம்பு, அமரர் (வடமொழி) - இறவாதவர், நேமி (வடமொழி) - உலகம், இடர் - துன்பம், நிதம் : நித்தம் என்னும் வடமொழி திரிந்து நின்றது, நித்தம் - அன்றாடம், மா - வண்டு, பருகுதல் - குடித்தல், பூ - அழகு.

(கருத்து) குமரக்கடவுளே சிறந்த தெய்வம். (௧)

உ. அந்தணர் இயல்பு

குறையாத காயத்ரி யாதிசெப மகிமையும்,
கூறுசுரு திப்பெருமை யும்,
கோதிலா ஆகம புராணத்தின் வளமையும்,
குலவுயா காதிபல வும்,

முறையா நடத்தலால் சகலதீ வினைகளையும்
முளரிபோ லேதகிப் பார்
முதன்மைபெறு சிலைசெம்பு பிருதுவிகளில் தெய்வ
மூர்த்தம்உண் டாக்குவிப் பார்
நிறையாக நீதிநெறி வழுவார்கள் ஆகையால்,
நீள்மழை பொழிந் திடுவதும்,
நிலமது செழிப்பதும், அரசர்செங் கோல்புரியும்
நிலையும்,மா தவர்செய்த வழும்,
மறையோர்க ளாலே விளங்கும்; இவ்வுலகத்தின்
மானிடத் தெய்வம்இவர் காண்
மயிலேறி விளையாடு குகனே!புல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே!

(இ - ள்.) குறையாத காயத்திரி ஆதி செபமகிமையும் - குற்றமில்லாத காயத்திரி முதலானவற்றை ஓதும் பெருமையையும், கூறு சுருதிப் பெருமையும் - சொல்லப்படும் மறையின் சிறப்பையும், கோதுஇலா ஆகம புராணத்தின் வளமையும் - பிழையில்லாத ஆகமங்களின் சிறப்பையும் புராணங்களின் சிறப்பையும், குலவு யாகாதி பலவும் - விளங்கும் வேள்வி முதலான யாவற்றையும், முறைஆ நடத்தலால் - ஒழுங்காக நடத்துவதனுல், சகல தீவினைகளையும் - எல்லா வகையினுமுள்ள கொடிய வினைகளையெல்லாம், முளரி போல தகிப்பார் - நெருப்பைப் போலே நீக்கிக் கொள்வார், முதன்மை பெறு சிலை செம்பு பிருதுவிகளில் - சிறப்புப் பெற்ற கல்லினுஞ் செம்பினும் மண்ணினும், தெய்வ மூர்த்தம் உண்டாக்குவிப்பார் - தெய்வத் தன்மையை ஏற்றிவைப்பார், நிறையாக நீதிநெறி வழுவார்கள் - நன்னெறியிலிருந்து வழுவாமல் ஒழுங்காக இருப்பார்கள், ஆகையால் - ஆதலினுலே, நீள் மழை பொழிந்திடுவதும் - மிகுதியாக மழைபெய்வதும், நிலமது செழிப்பதும் - மண் வளம் பெறுவதும், அரசர் செங்கோல் புரியும் நிலையும் - மன்னவர்கள் நல்ல அரசாட்சி நிலையாகச் செய்

வதும், மாதவர் செய்தவமும் - பெரிய தவசிகள் செய்யும் தவமும், மறையோர்களாலே விளங்கும் - மறையை ஓதும் அந்தணர்களாலே விளக்கமுறும், இவர் மானிடத் தெய்வம் - இவர்கள் மக்களிலே சிறந்தவர்கள்.

(விளக்கவுரை) காயத்திரி (வடமொழி) - ஞாயிற்றை வழிபடும் மந்திரம், சுருதி (வடமொழி) - கேட்கப்படுவது, கோது - பிழை, ஆகமம் (வடமொழி) - மறையின் அங்கம், புராணம் - பழமை. யாகம் (வடமொழி) - வேள்வி, முளரி (வடமொழி) - நெருப்பு, தகிப்பார் (வடமொழி) - அழிப்பார், மூர்த்தம் (வடமொழி) - நிலை.

(கருத்து) அந்தணர்கள் முறையாகக் குலமுறைப்படி நடந்தால் நாட்டுக்கு நன்மை யுண்டாகும். (௨)

௩. அரசர் இயல்பு

குடிபடையில் அபிமானம், மந்திரா லோசனை,
குறிப்பறிதல், சத்யவச னம்,
கொடைநித்தம் அவரவர்க் கேற்றமரி யாதைபொறை,
கோடாத சதுருபா யம்,
படிவிசா ரணையொடு ப்ரதானிகள கர்த்தரைப்
பண்(பு)அறிந் தேயமைத் தல்,
பல்லுயி ரெலாந்தன் உயிர்க்குநிக ரென்றே
பரித்தல்,குற் றங்கள் களைதல்,
துடிபெறு தனக்குறுதி யானநட்(பு) அகமின்மை,
சுகுணமொடு, கல்வியறி வு,
தோலாத காலம்இடம் அறிதல்,வினை வலிகண்டு
துட்டநிக் ரகசௌ ரியம்,
வடிவுபெறு செங்கோல் நடத்திவரும் அரசர்க்கு
வழுவாத முறைமையிது காண்
மயிலேறி விளையாடு குகனே!புல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே!

(இ - ள்.) குடி படையில் அபிமானம் - குடிகளிடத்தும் படை வீரரிடத்தும் பற்றும், மந்திர ஆலோசனை - நுண் கருத்துக்களைத் தானே ஆழ்ந்து ஆராயும் திறமையும், குறிப்பு அறிதல் - மற்றவர் மனத்திலுள்ளதை முகக் குறிப்பால் அறிதலும், சத்திய வசனம் - உண்மையான பேச்சும், கொடை - மனமுவந்து கொடுத்தலும், நித்தம் - எப்போதும், அவரவர்க்கு ஏற்ற மரியாதை - அவரவர்கட்குத் தக்கவாறு மதிப்பளித்தலும், பொறை - பொறுமையும், கோடாத சதுர் உபாயம் - தவறாத நால்வகைச் சூழ்ச்சிகளும், படி விசாரணையொடு - நாட்டின் நிலையை வினவி அறிதலும், பிரதானி தளகர்த்தரைப் பண்பு அறிந்தே அமைத்தல் - தன் கீழ் உள்ள அலுவலாளரையும் படைத் தலைவரையும் அவர்களுடைய தகுதி அறிந்து வேலையில் அமைத்தலும், பல் உயிர் எலாம் தன் உயிர்க்கு நிகரென்றே பரித்தல் - பலவகை உயிர்களையும் தன்னுடைய உயிர்க்கு ஒப்பாகக் காப்பாற்றுதலும், குற்றங்கள் களைதல் - (அரசாட்சியில் நேரும்) பிழைகளை உடனே நீக்குதலும், தனக்கு உறுதியான துடி பெறு நட்பு - தனக்கு நன்மையை நாடும் சுறுசுறுப்பான நட்பைத் தேடிக்கொள்வதும், அகம் இன்மை - செருக்கு இல்லாமையும், சுகுணமொடு கல்வி அறிவு - நல்ல பண்புடன் கற்றுத் தேர்ந்த அறிவும், தோலாத காலம் இடம் அறிதல் - தோல்வியடையாதவாறு காலத்தையும் இடத்தையும் அறிதலும், வினை வலி கண்டு துட்ட நிக்கிரகம் - இருவருடைய போர்த் தொழிலின் வலிமையையும் அறிந்து தீயவர்களை அழிக்கின்ற, சௌரியம் - திறமையும், இது - இவை போன்றவைகளும், வடிவு பெறு செங்கோல் நடத்தி வரும் அரசர்க்கு - செம்மையான சிறந்த ஆட்சியைப் புரியும் மன்னவர்கட்கு, வழுவாத முறைமை - தவறாத நெறிகளாகும்.

(விளக்கவுரை) நால்வகைச் சூழ்ச்சி: இனிமையாகப் பேசுதல் (சாமம்) வேறுபடுத்தல் (பேதம்) பொருள் கொடுத்தல் (தானம்) ஒறுத்தல் (தண்டம்) பகைவரை இந்த நால்வகையுள் ஒன்றால் ஏற்ற வகையில் வெல்வது அரசர் கடமை.

(அருஞ்சொற்கள்) கோடுதல் - மாறுபடுதல். படி - உலகு; இங்கு அவன் ஆளும் நாட்டை மட்டும் குறிக்கிறது. தளம் - படை. கர்த்தர் (வடமொழி) - தலைவர். அகம் - மனம்; இங்கே தற்பெருமையைக் குறிக்கிறது. சுகுணம் (வடமொழி) - நற் பண்பு. துட்டர் (வடமொழி) - கயவர். நிக்கிரகம் (வடமொழி) - நீக்குதல். சௌரியம் (வடமொழி) - வீரம். காண்: முன்னிலை அசைச்சொல்.

(கருத்து) அரசர்கள் குடிகளிடம் அன்பாகவும், தரம் அறிதலும் குறிப்பறிதலும் நல்ல நட்புடன் செருக்கின்றி யிருத்தலும், காலம் இடம் வலியறிந்து பகைவரை வெல்வதும், கயவரை ஒறுத்தலும் உடையவர்களாக இருத்தல் வேண்டும். (௩)

௪. வணிகர் இயல்பு

கொண்டபடி போலும்விலை பேசிலா பம்சிறிது
கூடிவர நயமுரைப் பார்;
கொள்ளுமொரு முதலுக்கு மோசம்வ ராதபடி
குறுகவே செலவுசெய் வார்;
வண்டப் புரட்டர்தாம் முறிதந்து, பொன்அடகு
வைக்கினும் கடன்ஈந் திடார்:
மருவுநா ணயமுளோர் கேட்டனுப் புகினுமவர்
வார்த்தையில் எலாம் கொடுப்பார்;
கண்டெழுது பற்றுவர வினின்மயிர் பிளந்தே
கணக்கில்அணு வாகிலும் விடார்;
காசுவீ ணிற்செல விடார்உசித மானதிற்
கனதிர வியங்கள்விடு வார்;
மண்டலத் தூடுகன வர்த்தகம் செய்கின்ற
வணிகர்க்கு முறைமையிது காண்
மயிலேறி விளையாடு குகனே! புல்வயல்நீடு
மலைமேவு குமரேசனே!

(இ - ள்.) கொண்ட படிபோலும் விலைபேசி லாபம் சிறிது கூடிவர நயம் உரைப்பார் - வாங்கிய (விலைப்) படியில் உள்ளவாறு விலை கூறிச் சிறிது ஊதியம் வரும்படி இனிமையாகப் பேசுவார்; கொள்ளும் ஒரு முதலுக்கு மோசம்

வராதபடி குறுகவே செலவு செய்வார் - தாங்கள் வைத்துக் கொண்ட முதலுக்குக் கேடு வராவண்ணம் செட்டாகச் செலவு செய்வார்கள் ; வண்டப் புரட்டர்தாம் முறிதந்து பொன் அடகு வைக்கினும் கடன் ஈந்திடார்-இழிந்த பொய் வஞ்சகம் முதலான குணமுள்ளவர்கள் ஒப்பந்தச் சீட்டு எழுதிக் கொடுத்து பொன்னை ஈடாக வைத்தாலும் கடன் கொடார் ; மருவு நாணயம் உளோர் கேட்டு அனுப்பு கினும் அவர் வார்த்தையில் எலாம் கொடுப்பார் - பொருந் திய ஒழுங்குள்ளவர்கள் சொல்லி விட்டாலும் அவர்கள் சொல்லுக்கே கேட்டவற்றை யெல்லாம் கொடுப்பார்கள் ; கண்டு எழுது பற்று வரவினில் மயிர் பிளந்தே கணக்கில் அணுவாகிலும் விடார் - பார்த்து எழுதுகின்ற பற்றிலும் வரவிலும் மயிரளவாகினும் பிரித்தறிந்து பார்த்து அணு வாகிலும் கணக்குப் பிறழ விடமாட்டார் ; காசு வீணில் செலவிடார் - வீண் வழிகளிலே காசைச் செலவழியார் ; உசிதமானதில் கன திரவியங்கள் விடுவார் - நல்ல நெறியில் மிகுந்த பொருளைச் செலவிடுவார் ; மண்டலத்தூடு கன வர்த்தகம் செய்கின்ற வணிகர்க்கு இது முறைமை - நாட் டிலே பெருவணிகம் செய்கின்ற வணிகருக்கு இவை இயல் பாகும்.

(**அருஞ்சொற்கள்**) படி - பிரதி. கொண்டபடி - வாங்கிய விலையைக் குறித்திருக்கும் பிரதி. வண்டர் - இழிந்தவர். புரட்டர் - புரட்டுச் செய்வோர், பொய்யர், வஞ்சகர். முறி - ஒப்பந்தச் சீட்டு. உசிதம் (வடமொழி) - தக்கது.

(**கருத்து**) வணிகர் மிக்க ஊதியம் விரும்பாமலும், வரவுக் கேற்ற செலவு செய்தும், நாணயத்துடனும், கணக்குப் பிறழாமலும் ஈட்டியபொருளை நல்லவழியிற் செலவிட்டும் வாழ வேண்டும். (௪)

௫. வேளாளர் இயல்பு

நல்லதே வாலயம் பூசனை நடப்பதும்,
நாள்தோறும் மழைபொழிவதும்,
நாடிய தபோதனர்கள் மாதவம் புரிவதும்,
நவில்வேத வேதியரெலாம்

சொல்லரிய யாகாதி கருமங்கள் செய்வதும்,
தொல்புவி செழிக்கும் நலமும்,
சுபசோப னங்களும், கொற்றவர்கள் செங்கோல்
துலங்கும்மனு நெறிமுறைமை யும்,
வெல்லரிய சுகிர்தமொடு வர்த்தகன் கொள்விலையும்,
விற்பனையும், அதிகபுக ழும்,
மிக்கஅதி காரமும், தொழிலாளர் சீவனமும்,
வீரரண சூரவலி யும்,
வல்லமைகள் சகலமும், வேளாளர் மேழியின்
வாழ்வினால் விளைவ அன்றோ?
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே!

(இ - ள்.) நல்ல தேவாலயம் பூசனை நடப்பதும் - நன்மையைத் தரும் தெய்வக் கோயில்களில் வழிபாடு நடைபெறுவதும், நாள்தோறும் மழை பொழிவதும் - காலம் தவறாமல் மழை பெய்வதும், நாடிய தபோதனர்கள் மாதவம் புரிவதும்-தவத்தை நாடியவர்கள் பெரிய தவம் செய்வதும், வேதம் நவில் வேதியரெலாம் சொல்லரிய யாகாதி கருமங்கள் செய்வதும் - மறையை ஓதும் மறையவர்களெல்லோரும் கூறுதற்கியலாத வேள்வி முதலிய தொழில்களைப் புரிவதும், தொல்புவி செழிக்கும் நலமும் - பழமையான உலகம் வளம்பெறுதற்குரிய நன்மையும், சுப சோபனங்களும் - நல்ல மங்கலத் தொழில்களும், கொற்றவர்கள் செங்கோல் துலங்கும் மனுநெறி முறைமையும் - அரசர்களுடைய நல்ல ஆட்சி விளக்கமுறும் மனுநெறி தவறாமையும், வெல்லரிய சுகிர்தமொடு வர்த்தகன் கொள்விலை விற்பனையும் - கெடாத நன்மையுடன் வணிகன் பொருளை வாங்கி விற்பதும், அதிக புகழும் - பெரும் பேரும், மிக்க அதிகாரமும் -பெரிய ஆட்சியும், தொழிலாளர் சீவனமும் - தொழிலாளர் வாழ்க்கையும், வீர ரண சூர வலியும் - போர்க்களத்திலே பகைவர் அஞ்சிப் போர்புரியும் ஆற்றலும், வல்லமை

கள் சகலமும் - எவ்வகை வலிமைகளும், வேளாளர் மேழியின் வாழ்வினால் விளைவது அன்றோ - வேளாளர்களின் உழவுத் தொழிலால் உண்டாவன அல்லவா?

(விளக்கவுரை) தேவ+ஆலயம்: தேவாலயம்: வடமொழித் தீர்க்கசந்தி; தேவாலயம் (வட) - கடவுள் கோயில். தபோதனர்கள் (வட) - தவச் செல்வர். நவிலுதல் - சொல்லுதல். தொன்மை+புவி: தொல்புவி. தொன்மை - பழமை. மனு: மானிடரின் முதல்வர். மனுவின் வழிவந்தவர்கள் மானிடர். சுகிர்தம் (வட)-நன்மை. இரணம் - புண். புண்படப் போர் செய்யுமிடம் இரணகளம். இரணசூரர் - இரணகளத்திலே அஞ்சாதவர். சூர் - அச்சம். இரணம் (வடமொழி). 'மேழிச் செல்வம் கோழை படாது'. 'உழுவாருலகத்துக் காணி' என்பனபோல வருவன வேளாண்மையின் சிறப்பைக் குறிக்கும். வேள் - உபகாரம். (கொடை) வேளாளர் - உபகாரிகள். வேளாண்மை - கொடைத்தன்மை. வேள் என்பதற்கு மண் என்றும் வேளாளர் என்போர் மண்ணை உழுது உண்போர் எனவும் உரைப்பதும் உண்டு.

(கருத்து) வேளாளரே உலகத்தைக் காப்பவர். (௫)

௬. பிதாக்கள்

தவமதுசெய் தேபெற்(று) எடுத்தவன் முதற்பிதா,
　　தனைவளர்த் தவன்ஒரு பிதா,
　தயையாக வித்தையைச் சாற்றினவன் ஒருபிதா,
　　சார்ந்தசற் குருவொரு பிதா,
அவம் அறுத்(து) ஆள்கின்ற அர(சு)ஒரு பிதா, நல்ல
　　ஆபத்து வேளைதன் னில்
　அஞ்சல்என்(று) உற்றதுயர் தீர்த்துளோன் ஒருபிதா,
　　அன்புள முன்னோன் ஒரு பிதா,
கவளம்இடு மனைவியைப் பெற்றுளோன் ஒருபிதா,
　　கலிதவிர்த் தவன்ஒரு பிதா,
　காசினியில் இவரைநித் தம்பிதா என்றுளம்
　　கருதுவது நீதியா கும்

மவுலிதனில் மதியரவு புனைவிமலர் உதவுசிறு
மதலையென வருகுரு பரா!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே!

(இ - ள்.) தவமது செய்தே பெற்றெடுத்தவன் முதற் பிதா - தவம் புரிந்து ஈன்றெடுத்தவன் முதல் தந்தை, தன்னை வளர்த்தவன் ஒரு பிதா - தன்னை வளர்த்தவன் மற்றொரு தந்தை, தயையாக வித்தையைச் சாற்றினவன் ஒரு பிதா - அருளுடன் கல்வியைக் கற்பித்தவன் ஒரு தந்தை, சார்ந்த சற்குரு ஒரு பிதா - உயிர் நன்னிலை அடைய மறையை ஓதிக்கொடுத்தவன் ஒரு தந்தை, அவம் அறுத்து ஆள்கின்ற அரசு ஒரு பிதா - துன்பத்தை நீக்கிக் காப்பாற்றுகிற அரசன் ஒரு தந்தை, நல்ல ஆபத்து வேளை தன்னில் அஞ்சல் என்று உற்ற துயர் தீர்த்துளோன் ஒரு பிதா - கொடிய இடையூறு வந்த காலத்தில் அஞ்சாதே என்று ஆதரவு கூறி நேர்ந்த வருத்தத்தை நீக்கியவன் ஒரு தந்தை, அன்பு உள முன்னோன் ஒரு பிதா - அன்புடைய தமயன் ஒரு தந்தை, கவளம் இடும் மனைவியைப் பெற்றுளோன் ஒரு பிதா - உணவு ஊட்டும் மனைவியை ஈன்றவன் ஒரு தந்தை, கலி தவிர்த்தவன் ஒரு பிதா-வறுமையைப் போக்கியவன் ஒரு தந்தை, காசினியில் இவரை நித்தம் பிதா என்று உளம் கருதுவது நீதியாகும் - உலகில் இவர்களை எப்போதும் தந்தையர் என்று உள்ளத்திற் கொள்வது அறம் ஆகும்.

(விளக்கவுரை) முன்னோன் என்பது முனோன் என்று இடையில் எழுத்துக் குறைந்து வந்தது. கவளம் - ஒரு பிடி. யானைக்கிடும் உணவையே கவளமென்று கூறுவது முன்னாள் வழக்கம். நாளடைவில் நாம் உண்ணும் உணவில் ஒருபிடிக்கும் வந்து வழங்கி விட்டது. கலி - வறுமை. மவுலி (வட) - முடி. மதலை - மகன். குருபரன் - முருகன்: பரமனுக்கும் குருவாக இருந்ததனால் குருபரன் ஆனார். உலகியல் கற்பிப்பவன் ஓராசிரியன்; ஆன்மவியல் கற்பிப்பவன் மற்றோராசிரியன்; இவர்களைப் போதகாசிரியன் எனவும் ஞானாசிரியன் எனவும் கூறுவர்.

(கருத்து) பெற்றவனைப் போலவே வளர்த்தவன், கல்வி கற்பித்தவன், மறை சொல்லிக் கொடுத்தவன், அரசன், உற்ற இடத்தில் துணை செய்தவன், தமையன், மனைவியின் தந்தை, வறுமையை நீக்கியவன் ஆகிய இவர்களும் ஒருவனுக்குத் தந்தை முறையில் வைத்து எண்ணத்தக்கவர்கள். (சு)

எ. ஒன்றையொன்று பற்றியிருப்பவை

சத்தியம் தவறு(து) இருப்பவ ரிடத்தினிற்
சார்ந்துதிரு மா(து) இருக்கும்;
சந்ததம் திருமா(து) இருக்கும் இடந்தனில்
தனதுபாக் கியம் இருக்கும்;
மெய்த்துவரு பாக்கியம் இருக்கும் இடந்தனில்
விண்டுவின் களையிருக்கும்;
விண்டுவின் களைபூண்(டு) இருக்கும் இடந்தனில்
மிக்கான தயை இருக்கும்;
பத்தியுடன் இனியதயை உள்ளவர் இடந்தனிற்
பகர்தருமம் மிக இருக்கும்;
பகர்தருமம் உள்ளவர் இடந்தனிற் சத்துரு
பலாயனத் திறல்இருக் கும்;
வைத்திசை மிகுந்ததிறல் உள்ளவர் இடத்தில்வெகு
மன்னுயிர் சிறக்கும் அன்றோ?
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே!

(இ - ள்.) சத்தியம் தவறுது இருப்பவரிடத்தினில் திருமாது சார்ந்து இருக்கும் - உண்மை வழுவாமல் நடப்பவரிடத்தில் திருமகள் அடைந்திருப்பாள், திருமாது இருக்கும் இடந்தனில் சந்ததம் தனது பாக்கியம் இருக்கும் - திருமகள் வாழும் இடத்திலே எப்போதும் அவளாற் கொடுக்கப்பெறும் செல்வம் இருக்கும், மெய்த்துவரு பாக்கியம் இருக்கும் இடந்தனில் விண்டுவின் களையிருக்கும் - உண்மையாக வருகின்ற செல்வம் இருக்குமிடத்திலே திருமா

லின் அருள் இருக்கும், விண்டுவின் களைபூண்டிருக்கும் இடந்தனில் மிக்கான தயை இருக்கும் - திருமாலின் அருளைப் பெற்றிருக்கும் இடத்திலே பெருமைமிக்க இரக்கம் இருக்கும், பத்தியுடன் இனிய தயை உள்ளவரிடந்தனில் பகர் தருமம் மிக இருக்கும் - திருமாலிடம் அன்பும் இனிய இரக்கமும் உள்ளவரிடத்திலே சிறப்பித்துக் கூறப்படும் ஈகை யென்னும் அறம் இருக்கும், பகர்தருமம் உள்ளவரிடந்தனில் சத்துரு பலாயனத்திறல் இருக்கும் - கூறப்படும் ஈகையுள்ளவரிடத்திலே பகைவரை வெல்லும் வலிமை யிருக்கும், இசை வைத்து மிகுந்த திறல் உள்ளவரிடத்தில் வெகு மன் உயிர் சிறக்கும் அன்றோ - புகழ் பெற்று உயர்ந்த வலிமை பெற்றவரிடத்திலே மிகுதியான நிலைபெற்ற உயிர்கள் சிறப்புறும் அல்லவா?

(அருஞ் சொற்கள்) விண்டு - திருமால். திருமாது - இலக்குமி. பகர்தல் - சொல்லுதல்; விலை கூறுதலுக்கே பகர்தல் என்று பெயர். நாளடைவிற் சொல்லுதல் என்பதற்கும் வந்து விட்டது. தருமம் - அறம்; இங்கே கொடுத்தலுக்கு மட்டும் வழங்கியது. பலாயனம் (வட) - வலிமை. திறல் - வலிமை. மன்னுதல் - எப்போதும் நிலையாக இருத்தல்.

(கருத்து) உண்மையாக நடப்பதாற் செல்வமும், செல்வத்தாலே அருளும், அருளாலே ஈகையும், ஈகையாலே வெற்றியும், வெற்றியாலே அரசும் உண்டாகும். (எ)

அ. இவர்க்கு இவர் தெய்வம்

ஆதுலர்க்(கு) அன்னம் கொடுத்தவர்களேதெய்வம்;
அன்பான மாணுக்கருக்(கு)
அரியகுருவேதெய்வம் அஞ்சினோர்க்(கு) ஆபத்(து)
அகற்றினோனேதெய்வமாம்;
காதல்உறு கற்புடைய மங்கையர் தமக்(கு) எலாம்
கணவனே மிக்கதெய்வம்
காசினியில் மன்னுயிர் தமக்(கு) எலாம் குடிமரபு
காக்கும்மன்னவர்தெய்வமாம்

ஓதரிய பிள்ளைகட்(கு) அன்னை தந் தையர்தெய்வம்
 உயர்சாதி மாந்தர் யார்க்கும்
உறவின்முறை யார்தெய்வம் விசுவாசம் உள்ள
 உற்றசிவ பக்தர் தெய்வம் [பேர்க்(கு)
மாதயையி னாற்சூர் தடிந்தருள் புரிந்ததால்
 வானவர்க் குத்தெய்வம் நீ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
 மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) ஆதுலர்க்கு அன்னம் கொடுத்தவர்களே தெய்வம்-இரப்பவர்க்கு உணவு கொடுத்தவர்களே தெய்வம், அன்பான மாணுக்கருக்கு அரிய குருவே தெய்வம் - அன்புடைய மாணவர்க்கு அருமையான ஆசிரியரே தெய்வம், அஞ்சினோர்க்கு ஆபத்து அகற்றினேனே தெய்வம் ஆம் - அச்சமுற்றவர்கட்கு அந்த அச்சத்தை நீக்கியவனே தெய்வம் ஆவான், காதல் உறு கற்பு உடைய மங்கையர் தமக்கெலாம் கணவனே மிக்க தெய்வம் - அன்பும் கற்பும் உடைய மாதர்களெல்லோருக்கும் அவரவர்களுடைய கணவரே சிறந்த தெய்வம், காசினியில் மன்னுயிர் தமக்கெலாம் குடிமரபு காக்கும் மன்னவர் தெய்வம் ஆம் - உலகில் நிலையான உயிர்களுக்கெல்லாம் அவர்களுடைய குடியை வழிவழியாகக் காக்கும் அரசர்கள் தெய்வம், ஓதஅரிய பிள்ளைகட்கு அன்னை தந்தையர் தெய்வம் - சொல்லுதற்கு முடியாத (சிறப்புடைய) சிறுவர்களுக்குத் தாயுந் தந்தையும் தெய்வம், உயர் சாதி மாந்தர் யார்க்கும் உறவின்முறையார் தெய்வம் - உயர்குடி மக்களெல்லோருக்கும் உறவினர்கள் தெய்வம், விசுவாசம் உள்ளபேர்க்கு உற்ற சிவபத்தர் தெய்வம் - சிவபிரானிடம் அன்புடையவர்களுக்குச் சிவனடியவர்கள் தெய்வம், மாதயையினால் சூர் தடிந்து அருள் புரிந்ததால் வானவர்க்கு நீ தெய்வம் - வானவரிடம் பேரருளினாலே சூரனைப் பிளந்து அருள் செய்ததால் வானவர்க்கு நீயே தெய்வம்.

(அருஞ் சொற்கள்) ஆதுலர்(வட) - பிச்சையெடுப்பவர்கள். தடிந்து - பிளந்து. சூர் - சூரபதுமன்.

(கருத்து) பிச்சை யெடுப்பவருக்கு உணவளிப்பவரும், மாணவர்கட்கு ஆசிரியரும், அச்சமுற்றவர்களுக்கு அந்த அச்சத்தைப் போக்கினவரும், பெண்களுக்குக் கணவரும், குடிகளுக்கு மன்னவரும், மக்களுக்குப் பெற்றோரும், மாந்தர்களுக்கு உறவினரும், சிவநெறியிற் செல்வோருக்குச் சிவனடியாரும், வானவருக்கு முருகனும் தெய்வமாவர். (அ)

௰. இவர்க்கு இதில் நினைவு

ஞானநெறி யாளர்க்கு மோட்சத்தி லேநினைவு
நல்லறிவு ளோர் தமக்கு
நாள்தொறும் தருமத்தி லேநினைவு மன்னர்க்(கு)
ராச்சியந் தன்னில் நினைவு
ஆனகா முகருக்கு மாதர்மே லேநினைவு
அஞ்சாத திருடருக் கிங்(கு)
அனுதினம் களவிலே நினைவு தன வணிகருக்(கு)
ஆதாய மீதுநினை வு
தானமிகு குடியாள ருக்(கு)எலாம் வேளாண்மை
தனில் நினைவு கற்பவர்க்குத்
தருகல்வி மேல்நினைவு வேசியர்க்(கு) இனியபொருள்
தருவோர்கள் மீது நினைவு
மானபர னுக்குமரி யாதைமேல் நினை(வு)எற்கு
மாறு(து) உன் மீது நினைவு
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) ஞானநெறியாளர்க்கு மோட்சத்திலே நினைவு- ஆன்மநெறியிலே செல்கின்றவர்களுக்கு வீடுபேற்றிலே எண்ணம், நல் அறிவுளோர்க்கு நாள்தொறும் தருமத்திலே

நினைவு - சிறந்த அறிவாளிகளுக்கு எப்போதும் அறத்திலே எண்ணம், மன்னர்க்கு இராச்சியந்தன்னில் நினைவு - அரசர்களுக்கு அரசியலிலே எண்ணம், ஆன காமுகருக்கு மாதர் மேலே நினைவு - காமம் கொண்டவர்களுக்குப் பெண்களின் மேலே எண்ணம், அஞ்சாத திருடருக்கு இங்கு அனுதினம் களவிலே நினைவு - அச்சமற்ற கள்ளர்களுக்கு இவ்வுலகிலே எப்போதும் திருடுவதிலேயே எண்ணம், தனவணிகருக்கு ஆதாயம்மீது நினைவு - செல்வமுடைய வணிகர்களுக்கு ஊதியத்திலே எண்ணம், தானம் மிகு குடியாளருக்கெலாம் வேளாண்மைதனில் நினைவு - ஈகையிலே சிறந்த குடிகளுக்கெல்லாம் பயிரிடுவதிலே எண்ணம், கற்பவர்க்குத் தரு கல்விமேல் நினைவு - படிப்பவர்களுக்குத் தாங்கள் கற்கும் கல்வியின்மேல் எண்ணம், வேசியர்க்கு இனிய பொருள் தருவோர்கள்மீது நினைவு - வேசைத் தொழில் புரிவோர்களுக்கு மனமினிக்கப் பொருள் கொடுப்பவர்கள்மேல் எண்ணம், மானபரனுக்கு மரியாதை மேல் நினைவு - மானமுடையவனுக்குத் தன்மதிப்பின் மேல் எண்ணம், எற்கு உன்மீது மாறாது நினைவு - எனக்கு உன்மேல் எப்போதும் நீங்காத எண்ணம்.

(விளக்கவுரை) மோட்சமென்பது உலகிலே உள்ள பொருள்கள் மேல் தனக்குண்டாகும் ஆசையை விடுவதாகும். 'அற்றது பற்று எனில் உற்றது வீடு', 'இம்மூன்றும் விட்டதே பேரின்ப வீடு' - என வருவன காண்க. மானபரன் - மானத்தை யுடையவன்.

(கருத்து) ஞானிகளுக்கு வீடு பேற்றிலும், அறிவாளிகளுக்கு அறத்திலும், அரசர்களுக்கு அரசியலிலும், காமுகருக்குப் பெண்கள் மீதும், கள்ளர்க்குக் களவிலும், வணிகருக்கு ஊதியத்திலும், குடிகளுக்கு வேளாண்மையிலும், மாணவர்க்குக் கல்வி மீதும், வேசிகட்குப் பொருளளிப்போரிடத்திலும், மானிக்கு மானத்திலும் ஒரே நினைவாயிருக்கும். (௬)

௧௦. இவர்க்கு இது இல்லை

வேசைக்கு நிசமில்லை திருடனுக்(கு) உறவில்லை
வேந்தர்க்கு நன்றியில்லை
மிடியர்க்கு விலைமாதர் மீதுவங்கணம்இலை
மிலேச்சற்கு நிறைய(து) இல்லை
ஆசைக்கு வெட்கம் இலை ஞானியா னவனுக்(கு)உள்
அகம் இல்லை மூர்க்கன்தனக்(கு)
அன்(பு) இல்லை காமிக்கு முறையில்லை குணம்
அழகில்லை சித்தசுத்தன் [இலோர்க்(கு)
பூசைக்கு நவில்அங்க சுத்தியிலை யாவும்உணர்
புலவனுக்(கு) அயலோர் இலை
புல்லனுக்(கு) என்றும் உசி தஅனுசிதம் இல்லைவரு
புலையற்(கு) இரக்கமில்லை
மாசைத் தவிர்த்தமதி முகதெய்வ யானையொடு
வள்ளிக்(கு) இசைந்தஅழ கா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மாசைத் தவிர்த்த மதிமுகம் தெய்வயானை யொடு-களங்கமில்லாத் திங்கள் போன்ற முகத்தை யுடைய தெய்வயானையுடன், வள்ளிக்கு இசைந்த அழகா - வள்ளிக் கும் விருப்பமான அழகனே! மயிலேறி........குமரேசனே!- வேசைக்கு நிசமில்லை - வேசிக்கு உண்மையிராது, திருட னுக்கு உறவு இல்லை - கள்வனுக்கு உறவினர் என இல்லை, வேந்தர்க்கு நன்றியில்லை - அரசர்களுக்குத் (தமக்குத் துணை புரிந்தோரிடம்) நன்றியறிதல் இராது, மிடியர்க்கு விலை மாதர்மீது வங்கணம் இல்லை - வறியவருக்கு வேசியர்மேல் நட்புக் கிடையாது, மிலேச்சற்கு நிறையது இல்லை - இழிந் தவர்களுக்கு ஒழுக்கம் இல்லை, ஆசைக்கு வெட்கம் இலை - அதிக விருப்ப முடையவனுக்கு நாணம் இல்லை, ஞானியான வனுக்கு உள் அகம் இல்லை - அறிவாளிக்கு நான் என்னும்

செருக்கு இல்லை, மூர்க்கன் தனக்கு அன்பு இல்லை - கொடிய வனுக்குப் பிறரிடம் அன்பு இல்லை, காமிக்கு முறையில்லை - காமத்தாலே அறிவு மயங்கியவனுக்கு முறை தெரியாது, குணம் இலோர்க்கு அழகு இல்லை - நல்ல பண்பு இல்லாத வர்க்கு அழகினாலே பயன் இல்லை, சித்த சுத்தன் பூசைக்கு நவில் அங்க சுத்தி இல்லை - மனத்திலே தூய்மை யுடைய வன் செய்யும் தெய்வ வழிபாட்டுக்கு நூல்களிற் கூறப்படும் உடல் தூய்மை செய்தல் வேண்டியதில்லை, யாவும் உணர் புலவனுக்கு அயலோன் இலை - எல்லா நூல்களையும் அறிந்த அறிவாளிக்கு அயலார் யாரும் இலர் (யாவரும் உறவினர்), புல்லனுக்கு என்றும் உசித அநுசிதம் இல்லை - அற்பனுக்கு எப்போதும் தக்கதும் தகாததும் இல்லை, வருபுலையற்கு இரக்கம் இல்லை - கொலைத்தொழிலைச்செய்து வரும் புலையனுக்கு (உயிர்களிடம்) அருள் இல்லை.

(அருஞ்சொற்கள்) மிடி - வறுமை. உசிதம் × அநுசிதம். உசிதம் - தகுதி. வங்கணம் - நட்பு.

(கருத்து) வேசைக்கு உண்மையும், திருடனுக்கு உறவினரும், அரசர்களுக்கு நன்றியறிதலும், வறியவனுக்கு விலைமாதர் மீது நட்பும், இழிந்தவனுக்கு ஒழுக்கமும், ஆசைக்கு வெட்கமும், அறிஞனுக்குச் செருக்கும், கொடியவனுக்கு அன்பும், காமுகனுக்கு முறையும், குணமில்லாதவனுக்கு அழகும், உளத்தூய்மை யுடையவனுக்கு உடல் தூய்மையும், அறிஞனுக்கு உறவாகாதவரும், கயவனுக்கு நன்மைதீமையும், புலையனுக்கு இரக்கமும் இல்லை. (கய)

கக. இப்படிப்பட்டவர் இவர்

ராயநெறி தவறாமல் உலகபரி பாலனம்
நடத்துபவ னேயரசன் ஆம்,
ராசயோ சனைதெரிந்(து) உறுதியா கியசெய்தி
நவிலுமவ னேமந் திரி,
நேயமுட னேதன் சிரத்தை எண்ணாத
நிர்வாகி யேசூரன் ஆம்,
நிலைபெறும் இலக்கணம் இலக்கியம் அறிந்துசொலும்
நிபுணகவி யேகவிஞன் ஆம்,

ஆய(து)ஒரு வாகடம் தாதுவின் நிதானமும்
அறியும்மதி யோன்வைத் தியன்,
அகம்இன்றி மெய்யுணர்ந்(து) ஐம்புலன் ஒழித்துவிட்
டவனேமெஞ் ஞானியென லாம்
மாயவர் சகோதரி மனோன்மணிக்(கு) அன்பான
வரபுத்ர வடிவே லவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மாயவர் சகோதரி மனோன்மணிக்கு அன்பான வரபுத்திர - திருமாலின் தங்கையான உமையம்மைக்கு அன்புடைய நல்ல மகனே!, வடிவேலவா - வடிவேலேந்திய கையனே!, மயிலேறி........குமரேசனே! ராய நெறி தவறாமல் உலகபரிபாலனம் நடத்துபவனே அரசனும் - அரச நெறி மாறாமல் உலகைக் காப்பாற்றுவோனே மன்னவனாவான், இராச யோசனை தெரிந்து உறுதியாகிய செய்தி நவிலுமவனே மந்திரி - அரசியல் சூழ்ச்சியறிந்து நன்மைதரும் பொருளைக் கூறுவோனே அமைச்சன், நேயமுடனே தன் சரீரத்தை யெண்ணாத நிர்வாகியே சூரன் ஆம் - தன் உடல்மேல் பற்று வைக்காத தலைவனே வீரனாவான், நிலைபெறும் இலக்கணம் இலக்கியம் அறிந்து சொலும் நிபுண கவியே கவிஞன் ஆம் - நிலையான இலக்கண இலக்கிய முறையறிந்து கூறும் வல்லமையுள்ள கவியே கவியெனத் தக்கவன், ஆயதொரு வாகடம் தாதுவின் நிதானமும் அறியும் முதியோன் வைத்தியன் - நன்மையைத் தரும் மருத்துவ நூல்களையும் எழுவகைத் தாதுக்களின் நிலையையும் அறிந்த (அறிவால்) முதியவனே மருத்துவன், அகமின்றி மெய் உணர்ந்து ஐம்புலன் ஒழித்து விட்டவனே மெய்ஞ்ஞானி யெனலாம் - நானெனும் செருக்கின்றி உண்மையறிந்து ஐந்து பொறிகளையும் அடக்கிவிட்டவனே உண்மை யறிஞன் எனப்படுவான்.

(விளக்கவுரை) உறுதி - நன்மை. மந்திரம் கூறுவோன் மந்திரி. மந்திரம் - ஆராய்ச்சி. வீரனுக்குத் தன் மெய்யின்மேற்

பற்று இராது. அதாவது அச்சமற்றவன் என்பதாகும். நிபுணன் (வடமொழி) - நுண்ணுணர்வினன். வாகடம் - மருத்துவ நூல்.

(கருத்து) செங்கோல் நடத்துவோன் அரசன். அரசிய லுணர்ந்து கூறுவோன் அமைச்சன். அச்சமற்றவன் வீரன். இலக்கண இலக்கிய மறிந்த கவிஞனே கவிஞன். மருத்துவநூலும் உடற்கூறும் உணர்ந்தவனே மருத்துவன். தற்பெருமையின்றி உண்மைப் பொருளை யறிந்து ஐம்புலனையும் அடக்கியவனே அறிஞன். (கக)

கஉ. விரைந்து அடக்குக

அக்கினியை, வாய்முந்து துர்ச்சனரை, வஞ்சமனை
யாளை, வளர் பயிர்கொள் களையை,
அஞ்சா விரோதிகளை, அநியாயம் உடையோரை,
அகிர்த்தியப் பெண்கள்ஆர்ப் பைக்,
கைக்கினிய தொழிலாளி யைக், கொண்ட அடிமையைக்
களவுசெய் யுந்திருட ரைக்,
கருதிய விசாரத்தை, அடக்கம்இல் பலிசையைக்,
கடி(து)ஆன கோபந் தனை,
மெய்க்(கு) இனி(து) அலாப்பிணியை, அவைஉதா
வினைமூண் டிடுஞ்சண் டையை, [சீனத்தை,
விடமேறு சோரத்தை அன்(று)அடக் குவதலால்
மிஞ்சவிட லாகாது காண்
மைக்(கு)இனிய கண்ணிகுற வள்ளிதெய் வானையை
மணம்செய்த பேரழ கனே
மயிலேறி விளையாடு குகனே!புல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மைக்கு இனிய கண்ணி குறவள்ளி தெய்வானையை மணம்செய்த பேரழகனே - மைதீட்டிய அழகிய கண்களையுடைய குறக்குடியிலே பிறந்த வள்ளியையும் தெய்வயானையையும் திருமணம்புரிந்த அழியா அழகனே!

மயிலேறி..........குமரேசனே! அக்கினியை - நெருப்பையும், வாய்முந்து தூர்ச்சனரை - வாய்ப்பேச்சிலே முந்திவரும் தீயவரையும், வஞ்ச மனையாளை - கெட்ட நினைவுடைய மனைவியையும், வளர்பயிர்கொள் களையை - வளரும் பயிரிலே இருக்கும் களையையும், அஞ்சா விரோதிகளை - அச்சமற்ற பகைவரையும், அநியாயம் உடையோரை - நன்னெறி நில்லாதவரையும், அகிர்த்தியப் பெண்கள் ஆர்ப்பை - தீய தொழில் செய்யும் பெண்களின் ஆரவாரத்தையும், கைக்கு இனிய தொழிலாளியை - நல்ல கைத்தொழிலுடையவனையும், கொண்ட அடிமையை - பணங்கொடுத்து வாங்கிய அடிமையையும், களவுசெய்யுந் திருடரை - திருடும் திருடரையும், கருதிய விசாரத்தை - உள்ளக் கவலையையும், அடக்கம் இல் பலிசையை - அடங்கியிராத பருவப்பெண்ணையும், கடிதான கோபந்தனை - வெறுக்கத்தக்க சினத்தையும், மெய்க்கு இனிது அலாப்பிணியை - உடலுக்கு நன்மை தராத நோயையும், அவை உதாசீனத்தை - அவையிலுள்ளவர்கள் பழிப்பதையும், வினை மூண்டிடும் சண்டையை - கெடுதியை வளர்க்கும் போரையும், விடம் ஏறு கோரத்தை - துடுக்குப்புரியும் குதிரையையும், அன்று அடக்குவதலால் - அப்போதே அடக்குதல் இன்றி, மிஞ்சவிடலாகாது - மீறிப் போகவிடுதல் தவறு.

(**விளக்கவுரை**) இந்நூலாசிரியர் காலத்தே அடிமை முறையுந் தொழிலாளிகளை அடக்கியாளுஞ் செருக்குமுறையும் இருந்ததால் அவர்களை மீறவிடலாகாதென்றார். அகிர்த்தியம் (வட) - தீய தொழில். கோரம் - குதிரை.

(**கருத்து**) நெருப்பு முதலாகக் கூறப்பட்டவற்றை அடக்காவிட்டாற் கெடுதிவரும். (கஉ)

கங. இவர்க்கு இது துரும்பு

தாராள மாகக் கொடுக்குந் தியாகிகள்
 தமக்குநற் பொருள்துரும் பு,
தன்னுயிரை யெண்ணாத சூரனுக்(கு) எதிராளி
 தளமெலாம் ஒருதுரும் பு,

பேரான பெரியருக்(கு) அற்பரது கையினிற்
    பிரயோச னந்துரும் பு,
  பெரிதான மோட்சசிந் தனையுள் ளவர்க்கெலாம்
    பெண்போகம் ஒருதுரும் பு,
தீராத சகலமும் வெறுத்ததுற விக்குவிறல்
    சேர்வேந்தன் ஒருதுரும் பு,
  செய்யகலை நாமகள் கடாட்சமுள் ளோர்க்கெலாஞ்
    செந்தமிழ்க் கவிதுரும் பாம்,
வாராரும் மணிகொள்முலை வள்ளிதெய் வானையை
    மணம்புணரும் வடிவே லவா
  மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
    மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) வார்ஆரும் மணிகொள்முலை வள்ளி தெய்வானையை மணம்புணரும் வடிவேலவா - கச்சிணலிறுக்கப்பெற்ற மணிமாலையணிந்த முலைகளையுடைய வள்ளிக்குந் தெய்வயானைக்குங் கணவனே ! தாராளமாகக் கொடுக்குந் தியாகிகள் தமக்கு நற்பொருள் துரும்பு - அளவு செய்யாமல் வழங்கும் வள்ளல்களுக்கு நல்ல பொருள்கள் துரும்பு போலாகும்; தன் உயிரை யெண்ணாத சூரனுக்கு எதிராளி தளமெலாம் ஒரு துரும்பு - தன்னுடைய உயிரைப் பொருளாக நினையாத வீரனுக்குப் பகைவரின் படைகளெல்லாம் ஒரு துரும்புக்குச்சமம், பேரான பெரியருக்கு அற்பரது கையினில் பிரயோசனம் துரும்பு - புகழ்பெற்ற பெரியோர்களுக்குத் தாழ்ந்த மக்கள் கையாற் பயன்பெறுதல் துரும்புக்கு நிகராகும், பெரிதான மோட்சசிந்தனை யுள்ளவர்க்கெலாம் பெண்போகம் ஒரு துரும்பு - உயர்ந்த வீடுபேற்றிலே நினைவுள்ளவர்களுக்குப் பெண்களாற் பெறும் இன்பம் துரும்புக்கு நேராகும், தீராத சகலமும் வெறுத்த துறவிக்கு விறல்சேர் வேந்தன் ஒரு துரும்பு - நீக்கமுடியாத எல்லாவற்றையும் வெறுத்துவிட்ட துறவிக்கு வெற்றியையுடைய அரசன் ஒரு துரும்புக்கொப்பாவான்,

செய்யகலை நாமகள் கடாட்சமுள்ளோர்க்கெலாம் செந்தமிழ்க்கவி தூரும்புஆம் - நன்மைதருங் கலை வடிவமான நாமகளின் அருள்பெற்றவர்கட்கெல்லாம் செந்தமிழிலே செய்யுள் செய்தல் தூரும்பெனலாகும்.

(**விளக்கவுரை**) சூர் - அச்சம். சூரன் - அஞ்சத்தகுந் தோற்றமும் செயலும் உடையவன். வீரன் - அஞ்சாதவன், தன் உயிரைப் பொருட்படுத்தாதவனை வீரனென்றே விளம்புதல் வேண்டும். தியாகி (வட) - வள்ளல். தனக்கென ஒன்றையும் விரும்பாது மற்றோர்க்குத் துணைபுரியும் பேரருளாளனே துறவி. அவனே வீடு பெற்றவன். பெண்களையும் இன்பந்தரும் (அஃறிணைப்) பொருள் போலவே நினைக்கும் தவறான நெறிபற்றிப் பெண்போகம் வீடு பேற்றிற்குத் தடையெனக் கூறிவிட்டார். 'அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை' என்னும் வள்ளுவர் கருத்தை நோக்கின் இக் கொள்கை மிகப்பெருந் தவறானதென்று விளங்கும்.

(**கருத்து**) வள்ளலுக்குப் பொருளும், வீரனுக்குப் பகைவர் படையும், பெரியோருக்குச் சிறியோர் உதவியும், வீட்டை விரும்பினவனுக்குப் பெண்ணின்பமும், பெருந்துறவிக்கு வேந்தனும், கலைமகளருள் பெற்றவனுக்குச் செய்யுளியற்றலும் தூரும்புபோல எண்ணத்தக்கவையாகும். (கரு)

கசு. இதனை விளக்குவது இது

பகல்விளக் குவ(து)இரவி, நிசிவிளக் குவ்துமதி,
பார்விளக் குவதுமேகம்,
பதிவிளக் குவதுபெண், குடிவிளக் குவ(து)அரசு,
பரிவிளக் குவதுவேகம்,
இகல்விளக் குவதுவலி, நிறைவிளக் குவதுநலம்,
இசைவிளக் குவதுசுதி, ஊர்
இடம்விளக் குவதுகுடி, உடல்விளக் குவ(து)உண்டி,
இனியசொல் விளக்குவது அருள்,
புகழ்விளக் குவதுகொடை, தவம்விளக் குவ(து)அறிவு,
பூவிளக் குவதுவாசம்,
பொருள்விளக் குவதுதிரு, முகம்விளக் குவதுநகை
புத்தியை விளக்குவது நூல்,

மகம்விளக் குவது மறை, சொல்விளக் குவது நிசம்,
வாவியை விளக்குவது நீர்,
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) பகல் விளக்குவது இரவி - பகற்பொழுதை விளக்குவது ஞாயிறு; நிசி விளக்குவது மதி - இரவை ஒளிசெய்வது திங்கள்; பார் விளக்குவது மேகம் - நிலத்தைச் செழிப்பாக்குவது முகில்; பதி விளக்குவது பெண் - கணவனை விளக்கமுறச் செய்பவள் பெண்ணாவாள்; குடி விளக்குவது அரசு - குடிகளைத் தெளிவுறக் காப்பவன் அரசனாவான்; பரி விளக்குவது வேகம் - குதிரைக்கு விளக்கந்தருவது அதனுடைய விரைவு; இகல் விளக்குவது வலி - பகைமைக்கு விளக்கந்தருவது வலிமை; நிறை விளக்குவது நலம் - ஒழுக்கம் விளக்குவது அழகு; இசை விளக்குவது சுதி - இசைக்கு இனிமைதருவது சுருதி யெனும் இசைக்கருவி; ஊர் இடம் விளக்குவது குடி - ஊரை அழகுறச்செய்வது குடிவளம்; உடல் விளக்குவது உண்டி - உடம்பை அழகுபடுத்துவது உணவு; இனிய சொல் விளக்குவது அருள் - இனிய சொல்லால் ஒளி பெறுவது அருள்; புகழ் விளக்குவது கொடை - புகழைப் பரப்புவது கொடுத்தலென்னும் பண்பு; தவம் விளக்குவது அறிவு - தவத்தைச் சிறப்புறக் காண்பிப்பது அறிவு; பூவிளக்குவது வாசம் - மலரை விளக்குவது மணம்; பொருள் விளக்குவது திரு - செல்வத்தை எடுத்துக்காட்டுவது செல்வரின் அழகு; (செல்வத்தை விளக்கமுறச் செய்வது திருமகளின் அருள் என்றுங் கூறலாம்.) முகம் விளக்குவது நகை - முகத்தை அழகாக்குவது மகிழ்ச்சி; புத்தியை விளக்குவது நூல் - அறிவை யுண்டாக்குவது நூலைக் கற்றல்; மகம் விளக்குவது மறை - வேள்வியை ஒளிபெறச்செய்வது மறையோதுதல்; சொல் விளக்குவது நிசம் - சொல்லுக்கழகு உண்மை; வாவியை விளக்குவது நீர் - பொய்கைக்கழகு நீர்நிறைவு.

(கருத்து) ஞாயிறு இல்லாத பகலும், திங்களில்லாத இரவும், மழையல்லாத நிலமும், மனைவியில்லாத கணவனும், குடிகளில்லாத ஆட்சியும், வேகமில்லாத குதிரையும், வலிமையில்லாத பகையும், ஒழுக்கமில்லாத அழகும், சுருதியில்லாத இசையும், குடிகளில்லாத ஊரும், உணவில்லாத உடம்பும், இன்சொலில்லாத அருளும், கொடையில்லாத புகழும், அறிவில்லாத தலைமும், மணமற்ற மலரும், செல்வமில்லாத அழகும், மகிழ்ச்சியற்ற முகமும், அறிவை விளக்காத நூலும், மறைவழி செய்யாத வேள்வியும், உண்மையற்ற சொல்லும், நீரற்ற குளமும் விளக்கமுறாதன. (கசு)

கரு. பிறப்பினால் மட்டும் நன்மையில்லை

சிங்கார வனமதில் உதிப்பினும் காகமது
 தீஞ்சொல்புகல் குயிலாகு மோ?
திரையெறியும் வாவியிற் பூத்தாலு மேகொட்டி
 செங்கஞ்ச மலராகு மோ?
அங்கான கத்திற் பிறந்தாலும் முயலான(து)
 ஆனையின் கன்றாகு மோ?
ஆண்மையா கியநல்ல குடியிற் பிறந்தாலும்
 அசடர்பெரி யோராவ ரோ?
சங்(கு)ஆடு பாற்கடல் பிறந்தாலும் நத்தைதான்
 சாலக்கி ராமமா மோ?
தடம்மேவு கடல்நீரி லேயுப்பு விளையினும்
 சாரசர்க் கரையாகு மோ?
மங்காத செந்தமிழ்க் குறுமுனிக்(கு) உபதேசம்
 வைத்தமெய்ஞ் ஞானகுரு வே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
 மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மங்காத செந்தமிழ்க் குறுமுனிக்கு உபதேசம்வைத்த மெய்ஞ்ஞான குருவே - மாசுபடாத தூய தமிழை அகத்திய முனிவருக்கு கற்பித்த உண்மை யாசிரியனே! மயிலேறி...........குமரேசனே! காகமது சிங்கார

வனமதில் உதிப்பினும் தீஞ்சொல்புகல் குயிலாகுமோ - காகம் அழகிய மலர்ப்பொழிலிற் பிறந்தாலும் இனிமையாகக்கூவும் குயிலாய்விடுமோ? கொட்டி திரைவெறியும் வாவியிற் பூத்தாலும் செங்கஞ்சமலர் ஆகுமோ - கொட்டி மலர் அலைவீசும் பொய்கையிலே மலர்ந்தாலும் செந்தாமரை மலரைப்போற் சிறப்புறுமோ? மூயலானது அம் கானகத்தில் பிறந்தாலும் ஆனையின் கன்று ஆகுமோ - முயல் அழகிய காட்டிலே பிறந்தாலும் யானைக்கன்றைப்போல் மதிக்கப்படுமோ? அசடர் ஆண்மையாகிய நல்ல குடியில் பிறந்தாலும் பெரியோர் ஆவரோ - பேதைகள் வீரம் பொருந்திய உயர்ந்த மரபிலே பிறந்தாலும் பெரியோராக நினைக்கப்படுவரோ? சங்கு ஆடு பாற்கடல் பிறந்தாலும் நத்தைதான் சாலக்கிராமமாமோ - சங்குகள் உலாவும் பாற்கடலிலே தோன்றினும் நத்தையைச் சாலக்கிராமம் என்பார்களோ? தடம் மேவு கடல்நீரிலே உப்பு விளையினும் சாரசர்க்கரை ஆகுமோ - பரவிய கடலிலே உப்புத் தோன்றினும் இனிய சர்க்கரைபோல் இனிக்குமோ?

(விளக்கவுரை) சிங்காரம் (வட) - அழகு. 'தீஞ்சொல் புகல் குயில்' என்பதைவிடத் 'தீங்குரற்குயில்' எனக்கூறுவது சிறப்பாகும். குயில் கூவுமேயொழியப் பேசாது. சாலக்கிராமம் என்பது திருமாலடியார்க்கு விருப்பமான ஒரு பொருள். அது கருமையாகக் கூழாங்கல்லைப்போல் இருக்கும். அது திருமாலின் நிறத்தை நினைப்பிப்பதாற் சிறப்புற்றிருக்கலாம். அது தெய்வத்தன்மையுடையதென்பர். தடம் - விரிவு. இந்நூலாசிரியர்க்குச் சர்க்கரையின்மேற் சால விருப்பம்போலும். உப்புப் பயன்படும் நிலையையும் அதனால் உளதாகும் நன்மையையும் சர்க்கரை பயன்படும் நிலையையும் நன்மையையும் ஒப்பிட்டோர் உப்பைச் சர்க்கரையினும் இழிவாகக் கூறார். உப்பில்லாமல் உண்ணவே இயலாது. எளியோர்க்குக் கிடைப்பதும் அதுவே. சர்க்கரையில்லாமல் ஒருவன் வாழ்க்கையையே நடத்திவிடலாம். அகத்தியருக்கு முருகக்கடவுள் செந்தமிழ அறிவித்ததாகப் புராணம் புகலும்.

(கருத்து) பிறப்பினால் மட்டும் ஒருபொருள் மேன்மையுறாது; தன் செயலினாலேதான் மேன்மையுறும். (கரு)

௩௩. பலர்க்கும் பயன்படுவன

கொண்டல்பொழி மாரியும், உதாரசற் குணமுடைய
கோவும்,ஊ ருணியின்நீ ரும்,
கூட்டமிடும் அம்பலத்(து) உறுதருவின் நீழலும்,
குடியாளர் விவசாய மும்,
கண்டவர்கள் எல்லாம் வரும்பெருஞ் சந்தியிற்
கனிபல பழுத்தமர மும்,
கருணையுட னேவைத் திடுந்தணீர்ப் பந்தலும்,
காவேரி போலூற்ற மும்,
விண்டலத்(து) உறைசந்தி ராதித்த கிரணமும்,
வீசும்மா ருதசீத மும்,
விவேகியெனும் நல்லோ ரிடத்திலுறு செல்வமும்,
வெகுசனர்க்(கு) உபகார மாம்,
வண்(டு)இமிர் கடப்பமலர் மாலையணி செங்களப
மார்பனே வடிவே லவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) வண்டு இமிர் கடப்ப மலர்மாலை அணி செங்களப மார்பனே - வண்டுகள் முரலும் கடப்பந்தாரணிந்த சிவந்த கலவைச் சந்தனங்கமழும் மார்பனே! வடிவேலவா - வடிவேற் கையனே! மயிலேறி........... குமரேசனே! -, கொண்டல் பொழி மாரியும் - முகில் பெய்யும் மழையும்; உதார சற்குணம் உடைய கோவும் - வண்மையும் நற்பண்பும் உடைய அரசனும்; ஊருணியின் நீரும் - ஊராருக்குப் பொதுவான நீர்நிலையிலுள்ள தண்ணீரும்; கூட்டமிடும் அம்பலத்து உறுதருவின் நீழலும் - ஊர்ப் பொதுக்கூட்டங்கள் கூடும் மேடையான மன்றிலே தழைத்த மரத்தின் நிழலும்; குடியாளர் விவசாயமும் - குடிகள் இடும் பயிரும்; கண்டவர்கள் எல்லாம் வரும்

பெருஞ்சந்தியிற் பலகனி பழுத்த மரமும் - எல்லோரும் வரக்கூடிய பெரிய சந்திப்பான இடத்திலே பல பழங்க ளுடன் நிற்கும் மரமும்; கருணையுடனே வைத்திடும் தணீர்ப்பந்தலும் - அருளுடன் அமைக்கப்பெற்ற தண் ணீர்ப்பந்தலும், காவேரிபோல் ஊற்றமும் - காவிரியைப் போல வற்றாது சுரக்கும் நீரூற்றும், விண்தலத்து உறை சந்திர ஆதித்த கிரணமும் - வானிலே உலவும் திங்கள் ஞாயிறுகளின் ஒளியும்; வீசும் மாருத சீதமும் (சீத மாரு தமும் என்று மாற்றுக) - வீசுகின்ற குளிர்ந்த காற்றும்; விவேகியெனும் நல்லோரிடத்தில் உறுசெல்வமும் - அறி வாளிகளான நல்லவரிடத்திலே உண்டாயிருக்கும் செல்வ மும்; வெகுசனர்க்கு உபகாரம் ஆம் - பல மக்களுக்கு ஆதர வாகும்.

(விளக்கவுரை) ஊருணி - ஊரரால் உண்ணப்படும் நீர்நிலை. முற்காலத்திலே ஊருக்குப் பொதுவான இடத்திலே பெரிய மரத் தடியிலே உள்ள மேடையே பொதுக்கூட்டங்கள் நடைபெறும் இடம். சனர் (வட) - மக்கள். விவேகி (வட) - அறிவாளி. விவேகி : ஒருமை; நல்லோர் : பன்மை. ஆகையால், 'விவேகி யெனும் நல்லோர்' என்பது ஒருமை பன்மை மயக்கம். களபம் - கலவைச்சந்தனம். குங்குமப்பூ கலப்பதாற் 'செங்களபம்' ஆயிற்று.

(கருத்து) முகில்பொழியும் மழையும் அதனுடன் கூறப் பெற்ற மற்றவைகளும் எல்லோருக்கும் பயன்படுவன. (கசு)

கஎ. தாம் அழியினும் தம் பண்பு அழியாதவை

தங்கம்ஆனதுதழலில் நின்(று)உருகி மறுகினும்
தன்ஒளி மழுங்கி டாது,
சந்தனக் குறடுதான் மெலிந்துதேய்ந் தாலுமே
தன்மணம் குன்றி டாது,
பொங்கம்மித சங்குசெந் தழலில்வெந் தாலுமே
பொலிவெண்மை குறைவுறா து,
போதவே காய்ந்துநன் பால்குறுகி னாலும்
பொருந்துசுவை போய்வி டாது,

துங்கமணி சாணையில் தேய்ந்துவிட் டாலும்
துலங்குகுணம் ஒழியாது பின்
தொன்மைதரு பெரியோர் மடிந்தாலும் அவர்களது
தூயநிறை தவறு குமோ
மங்களகல் யாணிகுற மங்கைசுர குஞ்சரியை
மருவுதிண் புயவா சனே
மயிலேறி விளையாடு குகனே புல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மங்கள கல்யாணி குறமங்கை சுரகுஞ்சரியை மருவு திண்புயவாசனே - அழகிய நலம்பெற்ற வேடர்குல வள்ளியும் வானவர் குடிவிளங்குந் தெய்வயானையும் தழுவும் வலிமைமிக்க தோள்களை யுடையவனே! மயிலேறி........குமரேசனே! -, தங்கமானது தழலில் நின்று உருகி மறுகினும் தன் ஒளி மழுங்கிடாது - நெருப்பிலே பொன்கிடந்து உருகித் துன்புற்றாலும் அதன் ஒளியிலே குறையாது; சந்தனக் குறடுதான் மெலிந்து தேய்ந்தாலும் தன்மணம் குன்றிடாது - சந்தனக்கட்டை தேய்ந்து மெலிந்தாலும் அதன் மணத்திலே மாறாது; பொங்கமிகு சங்கு செந்தழலில் வெந்தாலுமே பொலிவெண்மை குறைவுஉறாது - உயர்வுபெற்ற சங்கு சிவந்த நெருப்பில் வெந்தாலும் அழகிய வெண்மை விலகாது; போதவே காய்ந்து நன்பால் குறுகினாலும் பொருந்துசுவை போய்விடாது - நல்ல பால் மிகவும் காய்ந்து குறைந்தாலும் அதனிடமுள்ள இனிமை குறையாது; துங்கமணி சாணையில் தேய்ந்துவிட்டாலும் துலங்கு குணம் ஒழியாது - உயர்ந்த மாணிக்கம் சாணையிலே தேய்வுற்றாலும் ஒளிமிகும் பண்பு விலகாது; தொன்மைதரு பெரியோர் மடிந்தாலும் அவர்களது தூயநிறை பின் தவறு ஆகுமோ - பழமையான சான்றோர்கள் இறக்கநேர்ந்தாலும் அவர்களது நல்லொழுக்கம் இழிவுற்றுக் கெடுமோ?

(அருஞ்சொற்கள்) திண்மை - உறுதி. தழல் - நெருப்பு. மறுகுதல் - துன்புறுதல். குறடு - கட்டை. பொங்கம் - உயர்ச்சி.

பொலிவு - அழகு. போத - மிக. துங்கம் - உயர்ச்சி. தொன்மை - பழமை. மடிந்தாலும் - இறக்கநேர்ந்தாலும்; 'இறந்தாலும் பொய் தன்னைச் சொல்லவேண்டாம்' என்பதுபோல. சுரர் - வானவர்.

(கருத்து) பொன்னும் சந்தனக்கட்டையும் சங்கும் பாலும் மணியும் துன்புற்றாலும் தம் பண்பு மாறாததுபோலப் பெரியோர்கள் இறக்கநேர்ந்தாலும் ஒழுக்கந்தவறார். (கஎ)

கஅ. நரகில் வீழ்வோர்

மன்னரைச் சமரில் விட்(டு)ஓடினவர், குருமொழி
மறந்தவர், கொலைப்பா தகர்
மாதா பிதாவைநிந் தித்தவர்கள் பரதாரம்
மருவித் திரிந்தபேர்கள்
அன்னம் கொடுத்தபே ருக்(கு)அழிவை யெண்ணினோர்
அர(சு)அடக் கியஅமைச் சர்
ஆலயம் இகழ்ந்தவர்கள் விசுவாச காதகர்
அருந்தவர் தமைப்பழித் தோர்
முன்னுதவி யாய்ச்செய்த நன்றியை மறந்தவர்
முகத்துதி வழக்குரைப் போர்
முற்றுசிவ பத்தரை நடுங்கச்சி னந்தவர்கள்
முழுதும்பொய் உரைசொல்லு வோர்
மன்னொருவர் வைத்தபொருள் அபகரித் தோர்இவர்கள்
மாநரகில் வீழ்வர்அன் றே
மயிலேறி விளையாடு குகனே புல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மயிலேறி........குமரேசனே! - , மன்னரைச் சமரில்விட்டு ஓடினவர் - அரசர்களைப் போரிலே கைவிட்டு ஓடிய கோழைகளும், குருமொழி மறந்தவர் - ஆசிரியர் ஆணையை மறந்தவர்களும், கொலைப்பாதகர் - கொலைசெய்த பாவிகளும், மாதா பிதாவை நிந்தித்தவர்கள் - பெற்றோரைப் பழித்தவர்களும், பரதாரம் மருவித் திரிந்த பேர்கள் -

அயலார் மனைவிகளைக் கலந்து திரிகின்றவர்களும், அன்னம் கொடுத்தபேருக்கு அழிவை எண்ணினோர் - உணவளித் தவர்கட்குக் கெடுதி நினைத்தவர்களும், அரசு அடக்கிய அமைச்சர் - அரசர்களை அழித்த மந்திரிகளும், ஆலயம் இகழ்ந்தவர்கள் - இறைவர் திருக்கோயிலைப் பழித்தவர் களும், விசுவாச காதகர் - நட்பைக் கெடுத்தவர்களும், அருந்தவர் தமைப் பழித்தோர் - உயர்ந்த துறவிகளை இகழ்ந் தவர்களும், முன் உதவியாய்ச்செய்த நன்றியை மறந்தவர் - துன்பமுற்ற காலத்திலே துணைபுரிந்த நன்றியை மறந்து விட்டவர்களும், முகத்துதி வழக்குரைப்போர் - தம்மைப் புகழ்ந்து கூறுவோர் சார்பாக (ஓரவஞ்சகமாக) வழக்குக் கூறுகின்றவர்களும், முற்று சிவபத்தரை நடுங்கச் சினந்த வர்கள் - முதிர்ந்த சிவனடியவரை மனம் கலங்கக் கோபித் தவர்களும், முழுதும் பொய் உரை சொல்லுவோர் - முழுப் பொய் கூறுவோர்களும், மன் ஒருவர்வைத்த பொருள் அபகரித்தோர் - (தம்மிடம்) நிலையாக ஒருவர்வைத்த பொருளைக் கவர்ந்தவர்களும், இவர்கள் மாநரகில் வீழ்வர் அன்றோ - ஆகிய இவர்கள் கொடிய நரகில் வீழ்வார்கள் அல்லவா?

(கருத்து) அரசரைப் போர்க்களத்தில் விட்டு ஓடினவர்கள் முதலாகக் கூறப்பட்ட இவர்கள் நரகத்தை இருப்பிடமாகக் கொள் வார்கள். (கஅ)

கசு. உடல்நலம்

மாதத்(து) இரண்டுவிசை மாதரைப் புல்குவது,
மறுவறு விரோசனந் தான்
வருடத்(து) இரண்டுவிசை தைலம் தலைக்(கு)இடுதல்
வாரத்(து) இரண்டுவிசை யாம்
மூதறிவி னுடுதனது வயதினுக்(கு) இளையவொரு
மொய்குழ லுடன்சை யோகம்
முற்றுதயிர் காய்ச்சுபால் நீர்மோர் உருக்குநெய்
முதிரா வழுக்கையிள நீர்

சாதத்தில் எவள(வு) ஆனுலும்பு சித்தபின்
 தாகந் தனக்குவாங் கல்
தயையாக உண்டபின் உலாவல்இவை மேலவர்
 சரீரசுகம் ஆமென்பர் காண்
மாதவகு மாரிசா ரங்கத்(து) உதித்தகுற
 வள்ளிக்(கு) உகந்தசர சா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
 மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மாதவகுமாரி சாரங்கத்து உதித்த குற வள்ளிக்கு உகந்த சரசா - பெருந்தவம்புரிந்த மங்கையும் மான் வயிற்றிலே பிறந்தவளுமான வேடர்குல வள்ளி யம்மையின் மனத்திற்கிசைந்த இனிய மணவாளனே! மயிலேறி........குமரேசனே! - , மாதத்து இரண்டுவிசை மாதரைப் புல்குவது - திங்களுக்கு இருமுறை பெண்களைக் கூடுவது, மறுஅறு விரேசனந்தான் வருடத்து இரண்டு விசை - குற்றமற்ற வயிற்றுக்கழிவு மருந்து ஆண்டுக்கு இருமுறை, தைலம் தலைக்கு இடுதல் வாரத்து இரண்டுவிசை ஆம் - எண்ணெய் தலையில் தேய்த்து முழுகுவது வாரத் துக்கு இருமுறை, மூதறிவினொடு தனது வயதினுக்கு இளைய ஒரு மொய்குழலுடன் சையோகம் - பேரறிவு கொண்டு தன் வயதினும் இளைய அடர்த்தியான கூந்தலை யுடைய ஒரு பெண்ணுடன் சேர்க்கை, முற்று தயிர் - முதிர்ந்த தயிர், காய்ச்சு பால் - காய்ச்சிய பால், நீர்மோர் - நீர்மிகுந்த மோர், உருக்குநெய் - உருக்கிய நெய், முதிரா வழுக்கை இளநீர் - முற்றாத வழுக்கையை உடைய இளநீர், சாதத்தில் எவ்வளவு ஆனுலும் புசித்தபின் தாகம் தனக்கு வாங்கல் - எவ்வளவு உணவானுலும் உண்டபிறகே நீர் பருகுதல், தயையாக உண்டபின் உலாவல் - (உடம்பின் மேல்) இரக்கம்வைத்து உண்டபிறகு உலாவுதல், இவை - இவற்றை, மேலவர் சரீரசுகம் ஆம் என்பர் - பெரியோர் உடல்நலந் தருபவையாகும் என்று கூறுவர்.

(விளக்கவுரை) காண் : முன்னிலையசைச்சொல். திருமாலின் பெண்கள் இருவர் முருகனையடையத் தவஞ்செய்து வானவரிடம் தெய்வயானையாக ஒருவரும், மான் வயிற்றிற் பிறந்து வேடர் குடியில் ஒருவருமாக வளர்ந்தனர். ஆகையால் வள்ளியம்மையை மாதவகுமாரி யென்றார். சாரங்கம் - மான். சரசன் - இனியவன். புல்குதல் - தழுவுதல். மறு - குற்றம். விரோசனம் - வயிற்றுப் போக்கு மருந்து. மொய்த்தல் - நெருங்குதல் (அடர்த்தியாக இருத்தல்.) குழல் - கூந்தல். சையோகம் - சேர்க்கை. உடம்பினிடம் உழைப்பு வாங்குவோர் அது நீடித்திருக்கவும் நினைக்கவேண்டு மாகையால் அதனிடம் இரக்கங்காட்டவேண்டும் என்பதற்காகத் தயையாக உலாவல் என்று கூறினார்.

(கருத்து) இச்செய்யுளிலே கூறப்பட்டவை உடல்நலந் தரக் கூடியவை. (கக)

உ௦. விடாத குறை

தேசுபெறு மேருப்ர தட்சணஞ் செய்தும்மதி
தேகவடு நீங்கவில் லை
திருமால் உறங்கிடும் சேடனுக்(கு) உவணன்
செறும்பகை ஒழிந்த(து) இல்லை
ஈசன் கழுத்திலுறு பாம்பினுக்(கு) இரைவே(று)
இலாமலே வாயுஆ கும்
இனியகண் ஆகிவரு பரிதியா னவனுக்(கு)
இராகுவோ கனவிரோ தி
ஆசிலாப் பெரியோ ரிடத்தினில் அடுக்கினும்
அமைத்தபடி அன்றிவரு மோ
அவரவர்கள் அனுபோகம் அனுபவித் திடல்வேண்டும்
அல்லால் வெறுப்ப(து)எவ ரை
வாசவனும் உம்பரனை வரும்விசய சயஎன்று
வந்துதொழு தேத்துசர ணா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) வாசவனும் உம்பர் அனைவரும் வந்து விசய சய என்று தொழுது ஏத்து சரணு - இந்திரனும் பிற வானவரும் திருமுன் வந்து, 'வெல்க! வெல்க!' என்று வணங்கித் துதிக்குந் திருவடிகளையுடையவனே! மயிலேறி ....குமரேசனே! - , தேசுபெறு மேரு பிரதட்சணம் செய்தும் மதி தேகவடு நீங்கவில்லை - ஒளிவீசும் மேரு மலையை வலமாகவந்தும் திங்களின் மெய்யிலுள்ள களங்கம் ஒழியவில்லை; திருமால் உறங்கிடும் சேடனுக்கு உவணன் செறும்பகை ஒழிந்ததில்லை - திருமால் துயிலப் படுக்கை யாக இருக்கும் ஆதிசேடன் என்னும் பாம்புக்கும் தன் குலப் பகையான கருடனின் பகைமை நீங்கவில்லை; ஈசன் கழுத்திலுறு பாம்பினுக்கு இரை வேறு இலாமலே வாயு ஆகும் - சிவபிரான் கழுத்திலே பணியாக இருக்கும் பாம் புக்குக் காற்றையன்றி வேறு உணவு இல்லை; இனியகண் ஆகிவரு பரிதியானவனுக்கு இராகுவோ கனவிரோதி - சிவபிரானுக்கு இனிய வலக்கண்ணாகிய கதிரவனுக்கு அற்ப னான இராகுவே பெரும்பகைவன்; ஆசுஇலாப் பெரியோ ரிடத்தினில் அடுக்கினும் அமைத்தபடி அன்றி வருமோ - குற்றமற்ற பெரியோரைப் புகலாக அடைந்தாலும் ஊழாக அமைத்தவாறே அன்றி வேறு வருமோ? அவரவர்கள் அநுபோகம் அநுபவித்திடல் வேண்டும் அல்லால் எவரை வெறுப்பது - அவரவருடைய பயனை அவரவர்களே நுகர் தல்வேண்டும் அல்லாமல் யாரையும் வெறுத்தல் கூடாது.

(விளக்கவுரை) வசு - பொன். வாசவன் - பொன்னுலகத் தலைவன். உம்பர் - மேலிடம். அது அங்குள்ளோரை உணர்த்து கிறது. (இடவாகுபெயர்). மேருமலையைக் கதிரவனுந் திங்களும் பிறகோள்களும் வலம்வருவதாகப் புராணங்கள் கூறும். ஆதி சேடன் என்னும் பாம்பு திருமாலுக்குத் துயிலும் அணையாக உள்ளது என்றும் புராணங்கள் கூறும்.

இராகு என்னும் பாம்பு கதிரவனைப் பகைத்த கதை :—

பாற்கடலிலிருந்து அமுதம் வந்தது. அதைக் கடைந்த அவுண ரும் அமரரும் பங்குபெற விரும்பிச் சூழ்ந்தனர். அவுணர்களுக்குக் கொடாமல் அமரருக்குமட்டும் அமுதத்தை அளிக்கத் திருமால் விரும்பினார். மனத்தை மயக்கி மோகிக்கச்செய்யும் மோகினி

வடிவம் எடுத்தார். அவுணர்கள் அமுதத்தைவிட்டு அவளை விரும்பிச் சூழ்ந்தனர். மோகினியானவள் அமரருக்குமட்டும் அமுதம் பங்கிட்டாள். மயங்கிய அவுணர் உணர்வின்றி நின்றுவிட்டனர். அவர்களில் ஒருவன்மட்டும் உணர்வுபெற்று அமரருடன் கலந்து அமுதம் பெற்றான். அவன் அவுணன் என இரவியும் திங்களும் மோகினியிடம் விளம்பினர். மோகினி அகப்பையாலே அந்த அவுணனைப் பிளந்தாள். அவன் இருகூறானான். எனினும் அமுதம் உண்டதனால் இறக்கவில்லை. இருகூறும் இராகு கேது என்னும் பெயருடன் இரவியையுந் திங்களையும் ஆண்டுதோறும் விழுங்குவதென்று தவத்தின்மூலம் வரம்பெற்ற பாம்பாகின. இவ்வாறு புராணம் கூறும்.

(கருத்து) அவரவர் தீவினைப்பயனை அவரவர்களே கழித்தல் வேண்டும். (உ0)

உக. சிறவாதவை

குருவிலா வித்தைகூர் அறிவிலா வாணிபம்
குணமிலா மனைவியா சை
குடிநலம் இலாநாடு நீதியில் லாஅரசு
குஞ்சரம்இ லாதவெம் போர்
திருவிலா மெய்த்திறமை பொறையிலா மாதவம்
தியானம்இல் லாதநிட் டை
தீபம்இல் லாதமனை சோதரம்இ லாதவுடல்
சேகரம்இ லாதசென் னி
உருவிலா மெய்வளமை பசியிலா உண்டியுகல்
உண்மையில் லாதவச னம்
யோசனை இலாமந்த்ரி தைரியம் இலாவீரம்
உதவியில் லாதநட் பு
மருவிலா வண்ணமலர் பெரியோ ரிலாதசபை
வையத்(து) இருந்தென் பயன்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மயிலேறி........குமரேசனே! - , குரு இலா வித்தை - ஆசிரியன் கற்பியாத கல்வி, கூர் அறிவு இலா வாணிபம் - நுண்ணறிவு இல்லாத வணிகத்தொழில், குணம் இலா மனைவி ஆசை - நற்பண்பு இல்லாத மனைவியின் காதல், குடிநலம் இலா நாடு - குடிகளுக்கு நன்மையில்லாத நாடு, நீதி இல்லா அரசு - அறமில்லாத வேந்தன் ஆட்சி, குஞ்சரம் இலாத வெம்போர் - யானைப்படையில்லாத கொடிய போர், திருஇலா மெய்த்திறமை - செல்வமில்லாத உடல்வலிமை, பொறைஇலா மாதவம் - பொறுமையில்லாத சிறந்த தவம், தியானம் இல்லாத நிட்டை - (கடவுளை) நினைவில் கொள்ளாத யோகம், தீபம் இல்லாத மனை - விளக்கில்லாத வீடு, சோதரம் இலாத உடல் - உடன்பிறப்பு இல்லாத உடம்பு, சேகரம் இலாத சென்னி - முடியணியாத தலை, உருஇலா வளமை மெய் - அழகின்றிப் பருத்த உடம்பு, பசிஇலா உண்டி - பசித்து உண்ணாத உணவு, புகல் உண்மை இல்லாத வசனம் - புகழ்ந்து கூறத்தகும் மெய்ம்மையில்லாத பேச்சு, யோசனை இலா மந்த்ரி - ஆராய்ச்சியற்ற அமைச்சு, தைரியம் இலா வீரம் - துணிவு இல்லாத வீரம், உதவி இல்லாத நட்பு - துணைசெய்யாத நட்பு, மருஇலா வண்ணம்மலர் - மணமில்லாத அழகிய மலர், பெரியோர் இலாத சபை - பெரியோர்கள் இல்லாத சபை, (ஆகிய இவைகள்), வையத்து இருந்து என்பயன் - உலகில் இருந்து என்ன நன்மை?

(கருத்து) குருவிலாத கல்வி முதலானவை உலகில் இருந்தும் சிறப்புப்பெறுதவை. (உக)

உஉ. ஆகாப்பகை

அரசர்பகை யும்தவம் புரிதபோ தனர்பகையும்
　　அரியகரு ணீகர்பகை யும்
அடுத்துக் கெடுப்போர் கொடும்பகையும் உள்பகையும்
　　அருளிலாக் கொலைஞர்பகை யும்

விரகுமிகும் ஊரிலுள் ளோருடன் பகையும்மிகு
விகடப்ர சங்கிபகை யும்
வெகுசனப் பகையும்மந் திரவாதி யின்பகையும்
விழைமருத் துவர்கள் பகையும்
உரம்மருவு கவிவாணர் பகையும்ஆ சான்பகையும்
உறவின்முறை யார்கள்பகை யும்
உற்றதிர வியமுளோர் பகையும்மந் திரிபகையும்
ஒருசிறிதும் ஆகாது காண்
வரநதியின் மதலையென இனியசர வணமிசையில்
வருதருண சிறுகுழ வியே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) வரநதியின் மதலையென இனியசரவண மிசையில் வருதருண சிறுகுழவியே - உயர்ந்த கங்கையின் மகனென அழகிய சரவணத்தின்மீதிலே எழுந்தருளிய சிறுகுழந்தையே! மயிலேறி........குமரேசனே ! - , அரசர் பகையும் - மன்னர் பகையும், தவம்புரி தபோதனர் பகையும் - தவஞ்செய்யுந் துறவிகள் பகைமையும், அரிய கருணீகர் பகையும் - அருமையான கணக்கர் பகையும், அடுத்துக் கெடுப்போர் கொடும் பகையும் - அடுத்துக் கெடுக்கும் கொடியவரின் பகையும், உள்பகையும் - உள்ளேயிருக்கும் பகையும், அருளிலாக் கொலைஞர் பகையும் - அருளில்லாத கொலையாளிகளின் பகைமையும், விரகுமிகும் ஊரில் உள்ளோருடன் பகையும் - அன்புமிக்க ஊராருடன் பகையும், மிகு விகடப்ரசங்கி பகையும் - பெரிய நகைமொழியாளன் பகையும், வெகுசனப் பகையும் - கூட்டமான மக்களின் பகையும், மந்திரவாதியின் பகையும் - மந்திரக்காரன் பகையும், விழை மருத்துவர்கள் பகையும் - விரும்பத்தக்க வைத்தியர்களின் பகையும், உரம்மருவு கவிவாணர் பகையும் - அறிவிற்சிறந்த கவிஞரின் பகையும், ஆசான் பகையும் - ஆசிரியன் பகையும், உறவின்முறையார்கள் பகையும் -

சுற்றத்தார் பகையும், உற்றதிரவியம் உளோர் பகையும் - செல்வர்களின் பகையும், மந்திரி பகையும் - அமைச்சரின் பகையும், ஒருசிறிதும் ஆகாது - சற்றும் கூடாது.

(அருஞ்சொற்கள்) வரநதி - கங்கை. விரகு - அன்பு; வஞ்சகமும் ஆம். உரம் - அறிவு. விகடப்பிரசங்கி (வட) - நகைச்சுவைப் பேச்சாளன்.

(கருத்து) அரசர் முதலாக இங்குக் கூறப்பட்டோர் பகைமை தீமையை விளைவிக்கும். ஏற்றவகையில் அவற்றை நீக்கிக்கொள்ளல் நலம். (உஉ)

உங. வசையுறும் பேய்

கடன்உதவு வோர்வந்து கேட்கும்வே ளையில்முகம்
கடுகடுக் கின்றபே யும்
கனம்மருவு பெரியதனம் வந்தவுடன் இறுமாந்து
கண்விழிக் காதபே யும்
அடைவுடன் சத்துருவின் பேச்சைவிசு வாசித்
தகப்பட் டுழன்றபே யும்
ஆசைமனை யாளுக்கு நேசமாய் உண்மைமொழி
யானதை உரைத்தபே யும்
இடரிலா நல்லோர்கள் பெரியோர்க ளைச்சற்றும்
எண்ணு(து) உரைத்தபே யும்
இனியபரி தானத்தில் ஆசைகொண் டொருவற்(கு)
இடுக்கண்செய் திட்டபே யும்
மடமனை யிருக்கப் பரத்தையைப் புணர்பேயும்
வசைபெற்ற பேய்கள்அன் றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மயிலேறி............குமரேசனே! - , கடன் உதவுபோர்வந்து கேட்கும் வேளையில் முகம் கடுகடுக்கின்ற

பேயும் - கடன்கொடுத்தோர் கடனைக் கேட்கும்போது முகத்தைச் சுளிக்கும் பேயும், கனம்மருவு பெரியதனம் வந்தவுடன் இறுமாந்து கண்விழிக்காத பேயும் - மேன்மையைத்தரும் பெருஞ்செல்வங் கிடைத்தவுடன் செருக்குற்று வந்தவர்களை நோக்காத பேயும், அடைவுடன் சத்துருவின் பேச்சை விசுவாசித்து அகப்பட்டு உழன்ற பேயும் - பகைவன் சொல்லை ஒழுங்காக நம்பிச் சிக்கி வருந்துகின்ற பேயும், ஆசை மனையாளுக்கு நேசமாய் உண்மைமொழியானதை உரைத்த பேயும் - காதல் மனைவியின்மேலுள்ள அன்பினாலே உண்மைச்செய்தியை உரைத்த பேயும், இடர் இலா நல்லோர்கள் பெரியோர்களைச் சற்றும் எண்ணாது உரைத்த பேயும் - (மற்றவர்க்குத்) துன்பம்புரியாத நல்லோர்களையும் பெரியோர்களையும் சிறிதும் மதியாமல் இகழ்ந்துபேசிய பேயும், இனிய பரிதானத்தில் ஆசைகொண்டு ஒருவற்கு இடுக்கண் செய்திட்ட பேயும் - இனியதாகத் தோற்றும் இலஞ்சத்திலே ஆசைப்பட்டு, ஒருவனுக்குத் தீமைசெய்யும் பேயும், மடமனை இருக்கப் பரத்தையைப் புணர்பேயும் - இளமைப்பருவமுடைய இல்லாள் இருக்கவும் விலைமாதைக் கூடுகின்ற பேயும், வசைபெற்ற பேய்கள் அன்றோ - இழிவுற்ற பேய்கள் அல்லவா?

(விளக்கவுரை) பேய்போன்றவர்களைப் பேயெனவே அஃறிணையாலே இழிவுபற்றிக் கூறினார். அன்பிற்சிறந்த மனையாளிடம் உண்மையைக் கூறக்கூடாது என்பது பெண்களின் உள்ளத்திலே எதுவும் மறைந்திராது என்னும் தவறான கொள்கைபற்றியது. வாழ்க்கைத்துணை நலமாகவரும் மனைவிக்குந் தெரியாமல் மறைத்து வைக்கக்கூடியது எது? 'விறல்மந்திரிமதி' உடைய துணைவியை இழித்துரைக்கும் இக்கொள்கை மிகப்பெருந்தவறு.

(கருத்து) கடன் கொடுத்தவனிடம் இன்மொழி புகலவேண்டும். செல்வம் வந்தாலும் மற்றவரிடம் பணிவுடன் நடந்துகொள்ளல்வேண்டும். பகைவர் பேச்சிலே நம்பிக்கைவைத்தலாகாது. நல்லோரையும் பெரியோரையும் இகழ்தல் கூடாது. இலஞ்சம் வாங்கிக்கொண்டு பிறருக்குத் தீமைசெய்தல் ஆகாது. விலைமாதர் நட்புக்கூடாது. (உக)

உச. இனத்தில் உயர்ந்தவை

தாருவில் சந்தனம் நதியினில் கங்கைவிர
தத்தினில் சோமவா ரம்
தகைபெறு நிலத்தினில் காஷ்மீர கண்டம்
தலத்தில்சி தம்பர தலம்
சீருலவு ரிஷிகளில் வசிட்டர்பசு விற்காம
தேனுமுனி வரில்நா ரதன்
செல்வநவ மணிகளில் திகழ்பதும ராகமணி
தேமலரில் அம்போ ருகம்
பேருலவு கற்பினில் அருந்ததி கதித்திடு
பெலத்தில்மா ருதம்யா னையில்
பேசில்ஐ ராவதம் தமிழினில் அகத்தியம்
பிரணவம் மந்திரத் தில்
வாரிதியி லேதிருப் பாற்கடல் குவட்டினில்
மாமேரு ஆகும்அன் றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மயிலேறி............குமரேசனே!-, தாருவில் சந்தனம் - மரங்களிலே சந்தனமரம், நதியினிற் கங்கை - ஆறுகளிலே கங்கையாறு, விரதத்தினிற் சோமவாரம் - நோன்புகளிலே திங்கட்கிழமை நோன்பு, தகைபெறு நிலத்தினில் காஷ்மீரகண்டம் - பெருமைமிக்க நாடுகளிலே காஷ்மீரம், தலத்திற் சிதம்பரதலம் - நகரங்களிலே சிதம்பரம், சீருலவு ரிஷிகளில் வசிட்டர் - சிறப்புடைய இருடிகளிலே வசிட்டர், பசுவிற் காமதேனு - பசுக்களிலே காமதேனு, முனிவரில் நாரதன் - முனிவர்களிலே நாரதர், செல்வ நவமணிகளில் திகழ்பதுமராகமணி - செல்வமாகிய ஒன்பது மணிகளில் விளக்கமான பதுமராகம், தேன் மலரில் அம்போருகம் - தேனையுடைய மலர்களில் தாமரை மலர், பேருலவு கற்பினில் அருந்ததி - புகழ்பெற்ற கற்பரசி

களில் அருந்ததி, கதித்திடு பெலத்தில் மாருதம் - மோதி வரும் ஆற்றலிலே காற்று, யானையிற் பேசில் ஐராவதம் - யானைகளிற் சிறப்பித்துக்கூறும் ஐராவதம், தமிழினில் அகத்தியம் - தமிழ் நூல்களில் அகத்தியம், மந்திரத்திற் பிரணவம் - மந்திரங்களிலே பிரணவம், வாரிதியிலே திருப் பாற்கடல் - கடல்களிலே பாற்கடல், குவட்டினில் மாமேரு - மலைகளில் மாமேருமலை, ஆகும் அன்றோ - சிறப்புடையன ஆகும் அல்லவா?

(விளக்கவுரை) காமதேனு (வட) : விரும்பியவற்றை அளிக்கும் பசு. இது இந்திரனுடையது. அம்போருகம் (வட) - தாமரை. (நீரில் தோன்றுவது). அம்பு - நீர். அகத்தியம் தமிழிலே முற்காலத்தில் இருந்ததாகக் கருதப்பெறும் முத்தமிழிலக்கணம்.

(கருத்து) இங்குக்கூறப்பட்ட உயர்திணைப்பொருளும் அஃறிணைப்பொருளும் அவ்வவ்வினத்தில் உயர்ந்தவை. (உச)

உரு. வலிமை

அந்தணர்க்(கு) உயர்வேத மேபலம் கொற்றவர்க்(கு)
அரியசௌ ரியமே பலம்
ஆனவணி கர்க்குநிதி யேபலம் வேளாளர்க்(கு)
ஆயின்ஏ ருழவே பலம்
மந்திரிக் குச்சதுர் உபாயமே பலம்நீதி
மா னுக்கு நடுவே பலம்
மாதவர்க் குத்தவசு பலம்மடவி யர்க்குநிறை
மானம்மிகு கற்பே பலம்
தந்திரம் மிகுத்தகன சேவகர் தமக்கெலாம்
சாமிகா ரியமே பலம்
சான்றவர்க் குப்பொறுமை யேபலம் புலவோர்
தமக்குநிறை கல்விபல மாம்
வந்தனை செயும்பூசை செய்பவர்க்(கு) அன்புபலம்
வாலவடி வானவே லா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) வாலவடிவான வேலா - என்றும் இளைஞனை வேலனே! மயிலேறி........குமரேசனே! - , அந்தணர்க்கு உயர்வேதமே பலம் - மறையவர்களுக்கு மேன்மையுடைய மறையே வலிமை; கொற்றவர்க்கு அரிய செளரியமே பலம் - வெற்றியுடைய அரசர்கட்கு அருமையான வீரமே வலிமை; ஆன வணிகர்க்கு நிதியே பலம் - ஆக்கந்தேடும் வணிகர்களுக்குப் பொருளே வலிமை; வேளாளர்க்கு ஆயின் ஏர் உழவே பலம் - ஆராய்ந்தால் வேளாண்மை புரிவோர்க்கு உழவுக்குரிய ஏரே வலிமை; மந்திரிக்குச் சதுர் உபாயமே பலம் - அமைச்சனுக்கு நால்வகைச் சூழ்ச்சிகளே வலிமை; நீதிமானுக்கு நடுவே பலம் - அறத்தலைவனுக்கு நடுநிலையில் நிற்பதே வலிமை; மாதவர்க்குத் தவசு பலம் - பெரிய தவத்தினர்க்குத் தவமே வலிமை; மடவியர்க்கு நிறை மானமிகு கற்பே பலம் - பெண்களுக்கு ஒழுக்கத்திலே நிற்றலாகிய பெருமைமிக்க கற்பே வலிமை; தந்திரம் மிகுத்தகன சேவகர் தமக்கெலாம் சாமிகாரியமே பலம் - சூழ்ச்சியிற் சிறந்த பெருமைமிக்க சேவகர்களுக்குத் தம் தலைவனுடைய அலுவலை முடிப்பதே வலிமை; சான்றவர்க்குப் பொறுமையே பலம் - பெரியோர்களுக்குப் பொறுமையே வலிமை; புலவோர்தமக்கு நிறைகல்வி பலமாம் - புலவர்களுக்கு நிறைந்த கல்வியே வலிமை; வந்தனைசெயும் பூசை செய்பவர்க்கு அன்பு பலம் - வணக்கம்புரியும் வழிபாட்டாளர்க்கு அன்பே வலிமை.

(கருத்து) இங்குக்கூறப்பட்டவர்கள் தமக்கு வலிமையெனக் கூறப்பட்ட அவற்றையே கைக்கொள்க. (உரு)

உசு. இருந்தும் பயனில்லை

தருணத்தில் உதவிசெய் யாதநட் பாளர்பின்
தந்(து)என தராமல்என் ன
தராதரம் அறிந்துமுறை செய்யாத மன்னரைச்
சார்ந்(து)என்ன நீங்கில் என்ன

பெருமையுடன் ஆண்மையில் லாதஒரு பிள்ளையைப்
பெற்(று)என பெறுமல்என் ன
பிரியமாய் உள்ளன்(பு) இலாதவர்கள் நேசம்
பிடித்(து)என விடுக்கில் என்ன
தெருளாக மானம்இல் லாதவொரு சீவனம்
செய்(து)என செயாமல்என் ன
தேகியென வருபவர்க்(கு) ஈயாத செல்வம்
சிறந்(து)என முறிந்தும்என் ன
மருவுஇளமை தன்னிலில் லாதகன் னிகைபின்பு
வந்(து)என வராமல் என்ன
மயிலேறி விளையாடு குகனே புல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மயிலேறி..........குமரேசனே !-, தருணத்தில் உதவிசெய்யாத நட்பாளர் பின்தந்துஎன தராமல் என்ன - காலத்திலே துணைபுரியாத நண்பர்கள் காலங் கடந்தபிறகு துணைபுரிந் தென்னபயன் ? துணைபுரியாமையாலும் என்ன கெடுதல்? தராதரம் அறிந்து முறைசெய் யாத மன்னரைச் சார்ந்து என்ன நீங்கில் என்ன - ஏற்றத்தாழ்வு கண்டு முறைகூருத அரசர்களை அடுத்திருப்பதால் என்ன பயன் நீங்கிவிட்டால் என்ன கெடுதல்? பெருமையுடன் ஆண்மையில்லாத ஒரு பிள்ளையைப் பெற்று என்ன பெறுமல் என்ன - தகுதியும் வீரமும் இல்லாத ஒரு மகனைப் பெற்றுப் பயன் என்ன பெறு விட்டால் கெடுதி என்ன? பிரியமாய் உள்ளன்பு இல்லாத வர்கள் நேசம் பிடித்து என விடுக்கில் என்ன - விருப் பத்துடன் உள்ளத்திலே அன்பு இல்லாதவர்களின் நட்பைப் பெற்ருல் என்ன பயன் பெறுவிட்டால் என்ன கெடுதி? தெருளாக மானமில்லாததொரு சீவனம் செய்து என செய்யாமல் என்ன - அறிவுடன் மானமும் இல்லாத வாழ்க்கை நடத்தி என்ன பயன் விட்டுவிட்டால் என்ன கெடுதல்? தேகி என வருபவர்க்கு ஈயாத செல்வம் சிறந்து

என முறிந்தும் என்ன - பிச்சையென்று வருகின்றவர் களுக்குக் கொடாத செல்வம் சிறப்புற்றால் என்ன பயன் அழிந்தால் என்ன கெடுதல்? மருவு இளமைதன்னில் இல் லாத கன்னிகை பின்பு வந்து என வராமல் என்ன - சேர்க்கையை விரும்பும் இளமைப்பருவத்திலே கிடையாத பெண் முதுமையிலே கிடைத்துப் பயன் என்ன கிடை யாமற்போனால் என்ன கெடுதி?

(கருத்து) நண்பர்கள் காலத்திலே துணைபுரிதல்வேண்டும். அரசர்கள் தரமறிந்து முறைவழங்கல் வேண்டும். பெருமையும் ஆண்மையும் பிள்ளைகட்குவேண்டும். உள்ளன்புடையோர் நட்பு வேண்டும். அறிவுடனும் மானத்துடனும் வாழவேண்டும். ஐயமிட்டு வாழவேண்டும். இளமையிலே மணம்புரிதல் வேண்டும். (உசு)

உஎ. பயன் என்ன?

கடல்நீர் மிகுந்(து)என்ன ஓதிதான் பருத்(து)என்ன
காட்(டு)இலவு மலரில்என் ன
கருவேல் பழுத்(து)என்ன நாய்ப்பால் சுரந்(து)என்ன
கானில்மழை பெய்தும்என் ன
அடர்கழுதை லத்திநிலம் எல்லாம் குவிந்(து)என்ன
அரியகுணம் இல்லாத பெண்
அழகாய் இருந்(து)என்ன ஆஸ்தான கோழைபல
அரியநூல் ஓதியென் ன
திடம்இனிய பூதம்வெகு பொன்காத்(து) இருந்தென்ன
திறல்மிகும் கரடிமயிர் தான்
செறி(வு)ஆகி நீண்(டு)என்ன வஸ்த்ரபூ டணமெலாம்
சித்திரத் துற்றும்என் ன
மடமிகுந்(து) எவருக்கும் உபகாரம் இல்லாத
வம்பர்வாழ் வுக்குநிக ராம்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மயிலேறி...........குமரேசனே !, கடல்நீர் மிகுந்து என்ன - கடலிலே மிகுதியான நீர் இருந்து பயன் என்ன? ஒதிதான் பருத்து என்ன - ஒதியமரம் பருத்திருந்து பயன் என்ன? காட்டுஇலவு மலரில் என்ன - காட்டிலவு மலர்ந்தால் பயன் என்ன? கருவேல் பழுத்து என்ன - கருவேலமரம் பழுத்துப் பயன் என்ன? நாய்ப் பால் சுரந்து என்ன - நாய்க்குப் பால் சுரந்தால் பயன் என்ன? கானில் மழைபெய்தும் என்ன - காட்டிலே பெய்த மழையால் யாருக்குப் பயன்? அடர்கழுதை லத்தி நிலம் எல்லாம் குவிந்து என்ன - மிகுதியாகக் கழுதைச் சாணம் நிலமுழுதும் குவிந்தாலும் பயன் என்ன? அரிய குணம் இல்லாத பெண் அழகாய் இருந்து என்ன - நற்பண் பிலாத நங்கை அழகாயிருந்தாற் பயனுண்டோ? ஆஸ்தான கோழை பல அரியநூல் ஓதி என்ன - அவையிலே பேச அஞ்சுங் கோழை அருமையான பல கலைகளைக் கற்றும் பயனேது? திடமினிய பூதம் வெகுபொன் காத்திருந்து என்ன - பேராற்றலுடைய பூதம் மிக்க செல்வத்தைக் காத்திருந்தாலும் அதனாற் பயனடையுமோ? திறல்மிகும் கரடிமயிர்தான் செறிவாகி நீண்டு என்ன - வலிமைமிக்க கரடிக்கு அடர்த்தியாக நீண்ட மயிரிருப்பதால் ஏது பயன்? வஸ்த்ரபூடணமெலாம் சித்திரத்து உற்றும் என்ன - ஆடையும் அணியும் ஓவியத்திற்கிருந்தால் ஏது பயன்? மடம்மிகுந்து எவருக்கும் உபகாரம் இல்லாத வம்பர் வாழ்வுக்கு நிகராம் - அறிவின்றி, மற்றோருக்குப் பயன்படாத வீணரின் வாழ்வுக்குச் சமமாம்.

(கருத்து) பண்பிலாப் பெண்ணின் அழகும் அவைக்கஞ்சுவோரின் கல்வியும் மற்றோருக்குப் பயன்படாத பேதையரின் செல்வத்திற்குச் சமம். (உஎ)

உஅ. மக்கட்பதர்

தன்பெருமை சொல்லியே தன்னைப் புகழ்ந்தபதர்
சமர்கண்(டு) ஒளிக்கும் பதர்
தக்கபெரி யோர்புத்தி கேளாத பதர்தோழர்
தம்மொடு சலிக்கும் பதர்

பின்புகா ணுஇடம் தன்னிலே புறணிபல
　　பேசிக்க ளிக்கும் பதர்
　பெற்றதாய் தந்தைதுயர் படவாழ்ந் திருந்தபதர்
　　பெண்புத்தி கேட்கும் பதர்
பொன்பணம் இருக்கவே போயிரக் கின்றபதர்
　　பொய்சாட்சி சொல்லும் பதர்
　புவியோர் நடத்தையை இகழ்ந்தபதர் தன்மனைவி
　　புணர்தல்வெளி யாக்கும் பதர்
மன்புணரும் வேசையுடன் விபசரிக் கின்றபதர்
　　மனிதரில் பதர்என்பர் காண்
　மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
　　மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மயிலேறி............குமரேசனே ! - , தன் பெருமை சொல்லியே தன்னைப் புகழ்ந்தபதர் - தன்பெருமையைக் கூறிப் புகழ்ந்துகொண்ட பதரும், சமர்கண்டு ஒளிக்கும் பதர் - போரைக்கண்டு பதுங்கும் பதரும், தக்க பெரியோர்புத்தி கேளாத பதர் - நல்ல பெரியோரின் அறிவுரைக்குச் செவிகொடாத பதரும், தோழர் தம்மொடு சலிக்கும் பதர் - நண்பரிடம் தன் குறையைக்கூறிக் கவலைப் படும் பதரும், பின்பு காணு இடந்தன்னிலே புறணிபல பேசிக்களிக்கும் பதர் - (ஒருவரைப்பற்றி அவர்முன் இல்லாமல்) அவர் சென்றபின்னும், அவரைக் காணுதபோதும் அவரைப்பற்றிக் குறைகூறி மகிழும் பதரும், பெற்ற தாய் தந்தை துயர்பட வாழ்ந்திருந்த பதர் - தன்னையீன்ற பெற்ஞேர்கள் வருந்திக்கிடக்கத் தான்மட்டும் இனிமையுடன் வாழும் பதரும், பெண்புத்தி கேட்கும் பதர் - பெண்ணின் மொழிகளைக்கேட்டு நடக்கும் பதரும், பொன்பணம் இருக்கவே போய் இரக்கின்ற பதர் - பொன்னும் பணமும் வைத்துக்கொண்டே பிறரிடம் இரந்துநிற்கும் பதரும், பொய்சாட்சி சொல்லும் பதர் - பொய்க்கரிகூறும் பதரும், புவியோர் நடத்தையை யிகழ்ந்த பதர் - உலகிலுள்ளவரைப்

பழிக்கும் பதரும், தன்மனைவி புணர்தல் வெளியாக்கும் பதர் - தன் மனைவியின் சேர்க்கையைக் கூறும் பதரும், மன்புணரும் வேசையுடன் விபசரிக்கின்ற பதர் - அரசனைச் சேரும் வேசையுடன் கூடுகின்ற பதரும், மனிதரில் பதர் என்பர் - மக்கட்பதர் எனப்படுவர்.

(விளக்கவுரை) பெண்புத்திகேட்டல் தவறு என்பது பொருந்தாமை உ௩-ஆம் பாட்டினுரையிற் காண்க.

(கருத்து) தற்பெருமை கூடாது. போருக்கு அஞ்சலாகாது. சான்றோர் அறிவுரையை ஏற்று நடத்தல்வேண்டும். தோழனோடும் ஏழைமை பேசலாகாது. புறங்கூறலாகாது. பெற்றோரை ஆதரித்தல்வேண்டும். பிறரை இரந்துவாழ்தல் கூடாது. பொய்ச்சான்று புகலக்கூடாது. மற்றவரைப் பழிக்கத்தகாது. தன் மனைவியிடம் பெற்ற இன்பத்தை மற்றோரிடம் உரைத்தல் அழகன்று. அரசனுடைய வேசையிடம் சேர்க்கைகொள்ளுதல் உயிருக்குக்கேடு. (உஅ)

உ௯. காணாத குறை

இரவிகா ணாவனசம் மாரிகா ணாதபயிர்
    இந்துகா ணாதகுமு தம்
  ஏந்தல்கா ணாநாடு கரைகள்கா ணாவோடம்
    இன்சொல்கா ணாவிருந் து
சுரபிகா ணாதகன்(று) அன்னைகா ணாமதலை
    சோலைகா ணாதவண் டு
  தோழர்கா ணாநேயர் கலைகள்கா ணாதமான்
    சோடுகா ணாதபே டு
குரவர்கா ணாதசபை தியாகிகா ணாவறிஞர்
    கொழுநர்கா ணாதபெண் கள்
  கொண்டல்கா ணாதமயில் சிறுவர்கா ணாவாழ்வு
    கோடைகா ணாதகுயில் கள்
வரவுகா ணாதசெல(வு) இவையெலாம் புவிமீதில்
    வாழ்வுகா ணாஇளமை யாம்
  மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
    மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மயிலேறி...........குமரேசனே ! - , இரவி காணு வனசம் - கதிரவனைக் காணாத தாமரைமலர், மாரி காணாத பயிர் - மழையறியாப் பயிர், இந்து காணாத குமுதம் - திங்களைப்பாராத அல்லி, ஏந்தல்காணு நாடு - அரசனில்லாத நாடு, கரைகள் காணு ஓடம் - கரைதெரியாப் படகு, இன்சொல்காணு விருந்து - இன்மொழியற்ற விருந்து, சுரபி காணாத கன்று - பசுவைக்காணாத கன்று, அன்னைகாணு மதலை - தாயையறியாத சேய், சோலை காணாத வண்டு - மலர்க்காவை அடையாத வண்டு, தோழர்காணு நேயர் - நண்பரைப் பிரிந்தவர், கலைகள் காணாத மான் - ஆணைக் காணாத பெண்மான், சோடு காணாத பேடு - தன் இணையைக் காணாத பெட்டை, குரவர் காணாத சபை - பெரியோரில்லாத அவை, தியாகிகாணு வறிஞர் - கொடையாளியைக் காணாத ஏழைகள், கொழுநர் காணாத பெண்கள் - கணவரைப்பிரிந்த பெண்கள், கொண்டல் காணாத மயில் - முகிலைப்பாராத மயில், சிறுவர்காணு வாழ்வு - குழந்தைகளில்லாத வாழ்க்கை, கோடை காணாத குயில்கள் - வேனிலையறியாத குயில்கள், வரவுகாணாத செலவு - பொருள் வரவில்லாத செலவு, இவையெலாம் - இவைகள் யாவும், வாழ்வு காணு இளமையாம் - இன்பம் இல்லாத இளமைப்பருவத்திற்குச் சமமானவை.

(அருஞ்சொற்கள்) இந்து - திங்கள். குமுதம் - அல்லி. ஏந்தல் - அரசன். சுரபி - பசு. கலை - ஆண்மான். பேடு - பெண்பறவை. குரவர் - பெரியோர். கொழுநர் - கணவர். கொண்டல் - முகில்.

(கருத்து) 'இரவி காணாத வனசம்' முதலாகக்கூறப்பட்டவை 'வாழ்வு காணாத இளமை'போல வாட்டமுறும். (உக)

௩௦. நோய்க்கு வழிகள்

கல்லினல் மயிரினல் மீதூண் விரும்பலால்
  கருதிய விசாரத் தினல்
 கடுவழி நடக்கையால் மலசலம் அடக்கையால்
  கனிபழங் கறிஉண்ண லால்

நெல்லினுல் உமியினுல் உண்டபின் மூழ்கலால்
நித்திரைகள் இல்லாமை யால்
நீர்பகையி னுல்பனிக் காற்றின்உடல் நோதலால்
நீடுசரு(கு) இலையூற லால்
மெல்லிநல் லார்கலவி அதிகம்உள் விரும்பலால்
வீழ்மலம் சிக்குகையி னுல்
மிகுசுமை யெடுத்தலால், இளவெயில் காய்தலால்
மெய்வாட வேலைசெய லால்
வல்இரவி லேதயிர்கள் சரு(கு)ஆதி உண்ணலால்
வன்பிணிக்(கு) இடமென்பர் காண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மயிலேறி........குமரேசனே ! - , கல்லினுல் மயிரினுல் - உணவிலே கல்லும் மயிரும் கலந்திருப்பதாலும், மீதூண் விரும்பலால் - அதிக உணவை விரும்பி யுண்பதாலும், கருதிய விசாரத்தினுல் - கருத்தை வருத்துங் கவலையினுலும், கடுவழி நடக்கையால் - மிக்க தொலைவு நடப்பதனுலும், மலசலம் அடக்கையால் - மலசலங்களை அடக்குவதாலும், கனிபழம் (பழங்)கறி உண்ணலால் - மிகக்கனிந்த பழத்தையும் பழங்கறிகளையும் உண்பதாலும், நெல்லினுல் உமியினுல் - (உணவில்) நெல்லும் உமியும் இருப்பதாலும், உண்டபின் மூழ்கலால் - உணவுக்குப்பின் குளிப்பதாலும், நித்திரைகள் இல்லாமையால் - தூக்கக்கெடுதியாலும், நீர் பகையினுல் - (தன் உடம்புக்கு) ஒவ்வா நீரிலே முழுகுவதாலும், பனிக்காற்றின் உடல் நோதலால் - பனிகலந்த காற்றிலே மெய்வருந்துவதாலும், நீடுசருகு இலை ஊறலால்-சருகும் இலையும் நீண்டநாள் (குடிக்கும் நீரில்) ஊறிக்கிடப்பதாலும், மெல்லி நல்லார் கலவி அதிகம் உள் விரும்பலால் - மென்மைத்தன்மையுடைய பெண்களின் சேர்க்கையை மிகவும் மனங்கொண்டு விரும்பி நடப்பதாலும், வீழ்மலம் சிக்குகையினுல் - கழியும் மலம் சிக்குவதாலும்,

மிகுசுமை எடுத்தலால் - பெருஞ்சுமை தூக்குவதாலும், இளவெயில் காய்தலால் - காலை வெயிலிற் காய்வதாலும், மெய்வாட வேலை செயலால் - உடல் வாட்டமுற வேலைகள் செய்வதாலும், வல் இரவிலே தயிர்கள் சருகுஆதி உண்ணலால் - கொடிய இரவிலே தயிரையும் கள்ளையும் கீரைகளைப் போன்ற கறிகளையும் உண்பதாலும், வன்பிணிக்கு இடம் என்பர் - கொடிய நோய்க்கு இடம் உண்டாகும் என்பார்கள்.

(விளக்கவுரை) சருகுஆதி என்பதனால் இஞ்சி, நெல்லி, பாகற்காய், கஞ்சி ஆகியவற்றைக்கொள்க.

(கருத்து) இங்குக்கூறப்பட்டவைகளை நோய்களின் இருப்பிடம் என்பர் வைத்தியர்கள். (௫0)

௫௧. இறந்தும் இறவாதவர்

அனைவர்க்கும் உபகாரம் ஆம்வாவி கூபம்உண்
டாக்கினோர், நீதிமன் னர்
அழியாத தேவா லயங்கட்டி வைத்துளோர்
அகரங்கள் செய்தபெரி யோர்
தனையொப் பிலாப்புதல் வனைப்பெற்ற பேர்பொருது
சமர்வென்ற சுத்தவீ ரர்
தரணிதனில் நிலைநிற்க எந்நாளும் மாறாத
தருமங்கள் செய்தபேர் கள்
கனவித் தைகொண்டவர்கள் ஓயாத கொடையாளர்
காவியம் செய்தகவி ஞர்
கற்பினில் மிகுந்தஒரு பத்தினி மடந்தையைக்
கடிமணம் செய் தோர்கள்இம்
மனிதர்கள் சரீரங்கள் போகினும் சாகாத
மனிதரிவர் ஆகும்அன் றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மயிலேறி........குமரேசனே ! - , அனைவர்க்கும் உபகாரம் ஆம் வாவிகூவம் உண்டாக்கினோர் - யாவருக்கும் பயன்படுமாறு குளங்களும் கிணறுகளும் தோண்டியவர்களும், நீதிமன்னர் - செங்கோல் தவறாத அரசர்களும், அழியாத தேவ ஆலயம் கட்டிவைத்துளோர் - கெடாத தெய்வத் திருக்கோயில்களைக் கட்டியவர்களும், அகரங்கள் செய்த பெரியோர் - (காட்டை அழித்து) நகரங்களை உண்டாக்கிய சான்றோர்களும், தனை ஒப்பிலாப் புதல்வனைப் பெற்றபேர் - உவமையற்ற மகனைப் பெற்றவர்களும், பொருது சமர்வென்ற சுத்தவீரர் - போரிலே சண்டையிட்டு வென்ற தூய வீரர்களும், தரணிதனில் நிலைநிற்க எந்நாளும் மாறாத தருமங்கள் செய்தபேர்கள் - உலகிலே எப்போதும் நிலைத்திருக்க கெடுதியற்ற அறச்செயல்கள் செய்த சான்றோர்களும், கனவித்தை கொண்டவர்கள் - பெருங் கலைப் பயிற்சியாளர்களும், ஓயாத கொடையாளர் - மாறாமற் கொடுப்பவர்களும், காவியம் செய்த கவிஞர் - காவியங்களை எழுதிய கவிகளும், கற்பினில் மிகுந்தவொரு பத்தினி மடந்தையைக் கடிமணம் செய்தோர்கள் - கற்பிலே சிறந்த ஒரு நல்லொழுக்கமுள்ள பெண்ணைத் திருமணம்புரிந்தவர்களும், இம்மனிதர்கள் சரீரங்கள் போகினும் சாகாத மனிதர் இவர் ஆகும் அன்றோ - இவர்கள் இந்த ஊனுடல் ஒழிந்தாலும் புகழுடல் பொன்றாத மக்கள் ஆவார்கள் அல்லவா ?

(விளக்கவுரை) அகரம் என்பது ஊர் என்னும் பொருளில் மட்டும் வந்துள்ளது; அந்தணர் குடியிருக்குமிடம் என்பது பொருத்தமன்று. இக்காலத்தும் அகரம் எனப்பல பெயர்கள் ஊர்களுக்கிருக்கின்றன. கூவம் - கிணறு. தரணி - புவி. கவி - செய்யுளியற்றும் புலவன்.

(கருத்து) இங்குக்கூறப்பட்டவர்கள் புகழுடம்புபெற்று இறவாது நிற்பவர்கள். (௩௧)

௩௨. இருந்தும் இறந்தோர்

மாறாத வறுமையோர் தீராத பிணியாளர்
வருவேட் டகத்தில்உண் போர்
மனைவியை வழங்கியே சீவனம் செய்குவோர்
மன்னும்ஒரு ராசசபை யில்
தூறாக நிந்தைசெய்(து) உய்குவோர் சிவிகைகள்
சுமந்தே பிழைக்கின்ற பேர்
தொலையா விசாரத்(து)அழுந்து வோர் வார்த்தையில்
சோர்வுபட லுற்றபெரி யோர்
வீறாக மனையாள் தனக்(கு)அஞ்சி வந்திடு
விருந்தினை ஒழித்துவிடு வோர்
வீம்புடன் செல்லாத விவகாரம் அதுகொண்டு
மிக்கசபை ஏறும்அச டர்
மாறாக இவரெலாம் உயிருடன் செத்தசவம்
ஆகியொளி மாய்வர்கண் டாய்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மயிலேறி..........குமரேசனே ! - , மாறாத வறுமையோர் - நீங்காத வறியவர், தீராத பிணியாளர் - விலகாத நோயாளிகள், வருவேட்டகத்தில் உண்போர் - மாமனார் வீட்டில் நீண்டநாள் உண்பவர், மனைவியை வழங்கியே சீவனஞ்செய்குவோர் - மனைவியைத் தீயவொழுக்கத்திலே ஈடுபடுத்தி அதனால் வரும் பொருளால் வாழ்க்கை நடத்துவோர், மன்னும் ஒரு ராசர் சபையில் தூறாக நிந்தை செய்து உய்குவோர் - தாமிருக்கும் அரசரவையிலே வீணான பழியைக்கூறி, அதனால் வாழ்வோர், சிவிகைகள் சுமந்தே பிழைக்கின்றபேர் - (மனிதன் அமர்ந்த) பல்லக்கைச் சுமந்து வயிறு வளர்ப்போர், தொலையாத விசாரத்து அழுந்துவோர் - நீங்காத கவலையிலே மூழ்கியவர், வார்த்தையினில் சோர்வுபடலுற்ற பெரியோர் - சொன்ன சொல்லிலிருந்து

பிறழும் பெரியோர்கள், வீறுக மனையாள் தனக்கு அஞ்சி, வந்திடும் விருந்தினை ஒழித்துவிடுவோர் - மனைவியின் இறு மாப்புக்கு அச்சமுற்று வந்த விருந்தினரை விலக்கிவிடு வோர், செல்லாத விவகாரமது கொண்டு மிக்கசபை வீம் புடன் ஏறும் அசடர் - நடவாத வழக்கை ஆதரவாகக் கொண்டு பெரிய அறமன்றங்களிலே பிடிவாதமாகச் செல் லும் பிழையாளர்கள், இவரெலாம் மாறுக உயிருடன் செத்தசவம் ஆகி ஒளி மாய்வர் - இவர்களெல்லாரும் உலகிய லுக்கு எதிராக உயிரோடிருந்தும் இறந்த பிணமாகி புகழ் குன்றுவர்.

(அருஞ்சொற்கள்) வேட்டகம் : மாமனார் வீடு. வேட்ட அகம் - விரும்பிய வீடு. விருந்து - புதுமை. விருந்தினர் - புதியவர். உற வினர் வேறு - விருந்தினர் வேறு ஆவர்.

(கருத்து) இங்குக்கூறப்பட்டவர் உயிருடன் உலவினாலும் உலகிற்கும் தமக்கும் பயனற்றவர்களாகையால் இறந்தவர்போலக் கருதப்படுவர். (௩உ)

௩௩. சிறிதும் பயன் அற்றவர்

பதரா கிலும்கன விபூதிவிளை விக்கும்
 பழமைபெறு சுவரா கிலும்
பலருக்கும் மறைவாகும் மா(டு)உரிஞ்சிடும் மலம்
 பன்றிகட்(கு) உபயோகம் ஆம்
கதம்மிகு கடாஎன்னில் உழுதுபுவி காக்கும் வன்
 கழுதையும் பொதிசுமக் கும்
கல்லெனில் தேவர்களும் ஆலயமும்ஆம் பெருங்
 கான்புற்று அரவமனை ஆம்
இதமிலாச் சவமாகி லும்சிலர்க்(கு) உதவிசெயும்
 இழிவுறு குரங்கா யினும்
இரக்கப் பிடித்தவர்க்(கு) உதவிசெயும் வாருகோல்
 ஏற்றமா ளிகைவிளக் கும்

மதமது மிகும்பரம லோபரால் உபகாரம்
மற்றொருவ ருக்கும்உண் டோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மயிலேறி..........குமரேசனே ! -, பதராகி லும் கனவிபூதி விளைவிக்கும் - பதராயிருப்பினும் உயர்ந்த திருவெண்ணீற்றை விளைவிக்கப் பயன்படும்; பழமை பெறு சுவராகிலும் பலருக்கு மறைவாகும் மாடு உரிஞ்சிடும் - பழமையான குட்டிச்சுவராயினும் மறைய அமர்வோருக் கும் மாடு தன் தினவைத் தீர்த்துக்கொள்ள உடம்பைத் தேய்த்துக்கொள்ளவும் பயன்படும்; மலம் பன்றிகட்கு உபயோகம்ஆம் - மலமும் பன்றிகளின் உணவாகும்; கதம் மிகு கடா என்னில் உழுது புவிகாக்கும் - சீற்றமுடைய எருமைக்கடாவும் உழுது உலகை உண்பிக்கும்; வன் கழுதையும் பொதிசுமக்கும் - வலிய கழுதையும் மூட்டை சுமக்கும்; கல்லெனில் தேவர்களும் ஆலயமும்ஆம் - கல்லா னது தெய்வங்களாகவும் திருக்கோயில்களாகவும் மாறி நிற்கும்; பெருங்கான் புற்று அரவமனையாம் - பெரிய காட்டி லுள்ள புற்றுக்கள் பாம்பிற்கு இருப்பிடமாகும்; இதம் இலாச் சவமாகிலும் சிலர்க்கு உதவிசெயும் - நலமில்லாத பிணமானாலும் (அதை அடக்கஞ்செய்யும் முறையில்) சில தொழிலாளிகட்கு வருவாய் கொடுக்கும்; இழிவுஉறு குரங் காயினும் பிடித்தவர்க்கு இரக்க உதவிசெயும் - தாழ்வான குரங்கானாலும் (தன்னைப்) பிடித்தவர்களுக்குப் பிச்சை எடுக்கத் துணையாகும்; வாருகோல் ஏற்ற மாளிகை விளக் கும் - துடைப்பம் உயர்ந்த மாளிகையைத் தூய்மை செய் யும்; மதமதா மிகும் பரம லோபரால் மற்றொருவருக்கு உபகாரம் உண்டோ? - செருக்குப்பிடித்த பெரிய கஞ்சத் தனமுடையவர்களாற் பிறருக்குச் சிறிதும் நன்மையில்லை.

(அருஞ்சொற்கள்) இதம் - நன்மை. கதம் - சீற்றம்.

(கருத்து) ஈயாதவர்களால் எவருக்கும் நலமில்லை. (௯௯)

௩௪. ஈயாதவர் இயல்பு

திரவியம் காக்குமொரு பூதங்கள் போல்பணந்
 தேடிப் புதைத்துவைப் பார்
சீலைநல மாகவும் கட்டார்கள் நல்அமுது
 செய்(து)உணூர் அறமும் செயார்
புரவலர்செய் தண்டந் தனக்கும்வலு வாகப்
 புகுந்திருட ருக்குமீ வார்
புலவரைக் கண்டவுடன் ஓடிப் பதுங்குவார்
 புராணிகர்க்(கு) ஒன்றும் உதவார்
விரகறிந் தேபிள்ளை சோறுகறி தினுமளவில்
 வெகுபணம் செலவாக லால்
விளையாடு கிழவனும் பிள்ளையே பிள்ளையென
 மிகுசெட்டி சொன்னகதை போல்
வரவுபார்க் கின்றதே அல்லாது லோபியர்கள்
 மற்றொருவ ருக்கீவ ரோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
 மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மயிலேறி........குமரேசனே! - , திரவியம் காக்குமொரு பூதங்கள்போல் பணம்தேடிப் புதைத்துவைப் பார் - பொருளைக்காக்கும் ஒருவகைப் பூதங்களைப்போலப் பணத்தைச் சேர்த்துப் புதைத்துவைப்பார்; சீலை நலமாக வும் கட்டார்கள் - நல்ல ஆடையாகவும் உடுத்தமாட்டார்; நல் அமுதுசெய்து உணூர் - நல்ல உணவு சமைத்துச் சாப்பிடமாட்டார்; அறமும் செயார் - அறவழியிலும் செல விடார்; புரவலர்செய் தண்டம் தனக்கும் வலிவாகப் புகும் திருடருக்கும் ஈவார் - அரசர்கள் விதிக்குந் தண்டத்திற்கும் வற்புறுத்தி நுழையுங் கள்ளருக்குங் கொடுப்பார்; புலவ ரைக் கண்டவுடன் ஓடிப்பதுங்குவார் - புலவர்களைப் பார்த்த வுடன் ஓடி மறைவார்; புராணிகர்க்கு ஒன்றும் உதவார் - புராணங் கூறுவோர்க்குச் சிறிதுங்கொடார்; பிள்ளை விரகு

அறிந்து சோறுகறி தினும் அளவில் - குழந்தை அறிவு பெற்றுச் சோறுங்கறியும் தின்னும் நிலையில், வெருபணம் செலவு ஆகலால் - மிக்க பொருள் செலவழிவதனாலே, கிழவனும் பிள்ளையே விளையாடு பிள்ளையென - கிழவனாகிய குழந்தையே விளையாடற்கு உரிய குழந்தையென்று, மிகு செட்டி சொன்ன கதைபோல் - மிகுந்த செட்டுடைய உலோபி கூறிய கதையைப்போல, வரவு பார்க்கின்றதே அல்லாது உலோபியர்கள் மற்றொருவருக்கு ஈவரோ? - பொருள் வருவாயை நோக்குவதை யல்லாமற் பிறருக்கு உலுத்தர்கள் கொடுப்பரோ?

(விளக்கவுரை) புரவலர் : அரசர். புரத்தல் - காத்தல். புரவலர் - காத்தலில் வல்லவர். விரகு - அறிவு. ஒரு வணிகன் தன் குழந்தை (வேலையொன்றும் இன்றிப் பொருள்வரும் வழிதேடாமல்) உண்டு விளையாடுவதற்கு வருந்தி உணவுங்கறியும் உண்ணும் நிலை கடந்த முதியவனே குழந்தையென்று கூறினன் என்று கதை யிருக்கலாம்.

(கருத்து) உலுத்தர்கள் நல்லவழியிலே தாங்களாகவே மனம் விரும்பிப் பொருளைச் செலவிடார். அரசர் தண்டனைக்கும் கள்ளருடைய கொள்ளைக்குமே கொடுப்பார்கள். (௫௪)

௫௫. திருமகள் வாழ்வு

கடவா ரணத்திலும் கங்கா சலத்திலும்
கமலா சனந்தன் னிலும்
காகுத்தன் மார்பிலும் கொற்றவ ரிடத்திலும்
காலியின் கூட்டத் திலும்
நடமாடு பரியிலும் பொய்வார்த்தை சொல்லாத
நல்லோ ரிடந்தன் னிலும்
நல்லசுப லட்சண மிகுந்தமனை தன்னிலும்
ரணசுத்த வீரர்பா லும்
அடர்கே தனத்திலும் சுயம்வரந் தன்னிலும்
அருந்துளசி வில்வத்தி லும்
அலர்தரு கடப்பமலர் தனிலும்இர தத்திலும்
அதிககுண மான ரூப

மடவா ரிடத்திலும் குடிகொண்டு திருமாது
　　மாறு(து) இருப்பள்அன் றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
　　மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மயிலேறி........குமரேசனே! - , கடவாரணத்திலும் - மதயானையினிடத்திலும், கங்காசலத்திலும் - கங்கையாற்றிலும் (தூய நீரிலும்), கமலாசனந்தன்னிலும் - தாமரைமலராகிய பீடத்திலும், காகுத்தன் மார்பிலும் - திருமாலின் மார்பிலும், கொற்றவரிடத்திலும் - அரசரிடத்திலும், காலியின் கூட்டத்திலும் - ஆனிரையிலும், நடமாடு பரியிலும் - நடையிற்சிறந்த குதிரையினிடத்திலும், பொய் வார்த்தை சொல்லாத நல்லோரிடந்தன்னிலும் - பொய் கூறாத நற்பண்புடையவரிடத்திலும், நல்ல சுபலக்கணம் மிகுந்த மனைதன்னிலும் - சிறந்த நல்லழகுடைய வீட்டிலும், இரணசுத்த வீரர்பாலும் - போருக்குரிய உயர்ந்த வீரரிடமும், அடர் கேதனத்திலும் - மிகுந்த வெற்றிக் கொடியினிடமும், சுயம்வரந்தன்னிலும் - திருமணத்திலும், அருந்துளசி வில்வத்திலும் - அரிய திருத்துழாயிலும் வில்வத்திலும், அலர்தரு கடப்பமலர்தனிலும் - மலர்ந்த கடப்பமலரிலும், இரதத்திலும் - தேரிலும், அதிககுணரூபமான மடவாரிடத்திலும் - மிகுந்த நல்ல குணமும் அழகுமுடைய பெண்களிடமும், திருமாது குடிகொண்டு மாறாது இருப்பள் அன்றோ? - இலக்குமி குடியாகி நீங்காமல் இருப்பாள் அல்லவா?

(விளக்கவுரை) கடம் - மதம். வாரணம் - யானை. காகுத்தன் என்பவன் மரபிலே திருமால் இராமனாகப் பிறந்தார். ஆகையாற் காகுத்தன் எனப்பட்டார். காலி - பசுமந்தை. கேதனம் - கொடி. சுயம்வரம் : ஒருபெண் தானே தன் கணவனைத் தேர்ந்தெடுத்தல். சுயம் - தானாகவே, வரம் - வரித்தல். வரிக்கப்பட்டவனை வரன் என்பர். துளசி திருமாலுக்கும், வில்வம் சிவபிரானுக்கும், கடம்பு முருகனுக்கும் உரியவை. மடம் - இளமை. மடவார் - இளம் பெண்கள்.

(கருத்து) யானை முதலான இடங்களில் திருமகள் குடியாக இருப்பாள். (செல்வம் இருக்கும்). (௩௬)

௫௯. மூதேவி வாழ்வு

சோரமங் கையர்கள்நிசம் உரையார்கள் வாயினில்
சூதகப் பெண்கள்நிழ லில்
சூளையில் சூழ்தலுறு புகையில் களேபரம்
சுடுபுகையில் நீசர்நிழ லில்
காரிரவில் அரசுநிழ லில்கடா நிழலினொடு
கருதிய விளக்குநிழ லில்
காமுகரில் நிட்டையில் லாதவர் முகத்தில்
கடுஞ்சினத் தோர்சபை யினில்
ஈரமில் லாக்களர் நிலத்தினில் இராத்தயிரில்
இழியும்மது பானர்பா லில்
இலைவேல் விளாநிழலில் நிதமழுக் கடைமனையில்
ஏனம்நாய் அசம் கரத்தூள்
வாரிய முறத்தூள் பெருக்குதூள் மூதேவி
மாறு திருப்பள்என் பர்
மயிலேறி விளையாடு குகனே புல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மயிலேறி...........குமரேசனே! - , சோர மங்கையர்கள் - பிற ஆடவரைக்கூடும் பெண்களிடத்தில், நிசம் உரையார்கள் வாயினில் - உண்மையுரையார் வாயில், சூதகப்பெண்கள் நிழலில் - வீட்டு விலக்கான பெண்களின் நிழலில், சூளையிற் சூழ்தலுறு புகையில் - சூளையில் உண்டாகும் புகையில், களேபரம் சுடுபுகையில் - பிணஞ்சுடும் புகையில், நீசர் நிழலில் - இழிந்த குணமுடையோர் நிழலில், கார் இரவில் - கரிய இரவில், அரசு நிழலில் - அரசமரத்தின் நிழலில், கடா நிழலினொடு - எருமைக்கடாவின் நிழலில், கருதிய விளக்கு நிழலில் - நினைக்கத்தக்க விளக்கின் நிழலில், காமுகரில் - காமங்கொண்டவரிடத்தில், நிட்டையில்லாதவர் முகத்தினில் - யோகப்பயிற்சி யில்லாதவர் முகத்தில், கடுஞ்சினத்தோர் சபையினில் - கொடிய சீற்றமுடை

யோர் கூட்டத்தில், ஈரமில்லாத களர்நிலத்தினில் - ஈரம் தங்காத உவர்நிலத்தில், இராத்தயிரில் - இரவில் உண்ணப்படுந் தயிரில், இழியும் மதுபானர்பாலில் - இழிந்த கட்குடியரிடத்தில், இலைவேல் விளாநிழலில் - இலையையுடைய வேலமரத்தின் நிழலில் விளாமரத்தின் நிழலில், நிதம் அழுக்கு அடைமனையில் - எப்போதும் அழுக்கடையும் வீட்டில், ஏனம் நாய் அசம் கரம் - பன்றி நாய் ஆடு கழுதை ஆகிய இவைகளினிடத்தில், தூள் - புழுதியில், வாரியமுறத்தூள் - முறத்தில் வாரிய தூளில், பெருக்குதூள் - பெருக்கும் குப்பையில், மூதேவி மாறாது இருப்பள் என்பர் - மூதேவி விலகாது இருப்பாள் என்பார்கள்.

(அருஞ்சொற்கள்) களேபரம் - பிணம். நிட்டை : மனம் ஒருப்பட இருக்கும் நிலை. ஏனம் - பன்றி. அசம் - ஆடு. கரம் - கழுதை.

(கருத்து) இங்குக்கூறிய இடங்களில் மூதேவி வாழ்வாள்.

ருஎ. திருந்துமோ?

கட்டிபெரு இட்டுச் செழுந்தேனை வார்க்கினும்
காஞ்சிரம் கைப்புவிடு மோ
கழுதையைக் கட்டிவைத்(து) ஓமம் வளர்க்கினும்
கதிபெறும் குதிரையா மோ
குட்டியர வுக்(கு)அமு தளித்தே வளர்க்கினும்
கொடுவிடம் அலாதுதரு மோ
குக்கல்நெடு வாலுக்கு மட்டையைக் கட்டினும்
கோணமை லேநிற் குமோ
ஒட்டியே குறுணிமை இட்டாலும் நயமிலா
யோனிகண் ஆகிவிடு மோ
உலவுகன கர்ப்பூர வாடைபல கூட்டினும்
உள்ளியின் குணம்மா றுமோ

மட்டிகட்(கு) ஆயிரம் புத்திசொன் ஞலும்அதில்
மார்க்கமரி யாதைவரு மோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ-ள்.) மயிலேறி........குமரேசனே! -; கட்டிஎரு இட்டுச் செழுந்தேனை வார்க்கினும் காஞ்சிரம் கைப்பு விடுமோ - வெல்லக்கட்டியாகிய எருவையிட்டு நல்ல தேனாகிய நீரை வார்த்தாலும் எட்டியின் கசப்பு நீங்குமா? கழுதையைக் கட்டிவைத்து ஓமம் வளர்க்கினும் கதிபெறுங் குதிரை ஆமோ - கழுதையைக் கட்டிவைத்து வேள்வி செய்தாலும் பல கதிகளிலுஞ்செல்லும் பரியாகுமா?, குட்டி அரவுக்கு அமுது அளித்தே வளர்க்கினும் கொடுவிடம் அலாது வருமோ - பாம்புக்குட்டிக்குப் பால்வார்த்து வளர்த்தாலும் கொடிய நஞ்சையல்லாது வேறொரு நன்மையைத்தருமா? குக்கல் நெடுவாலுக்கு மட்டையைக் கட்டினும் கோணமலே நிமிருமோ - நாயின் நீண்ட வாலுக்கு மட்டைவைத்துக் கட்டினலும் கோணல் நிமிருமா?, ஒட்டியே குறுணி மை இட்டாலும் நயமிலா யோனிகண் ஆகிவிடுமோ - மிகுதியான மையை நன்ருக இட்டாலும் பெண்குறி கண் ஆகுமா? உலவுகன கர்ப்பூர வாடைபல கூட்டினும் உள்ளியின் குணம் மாறுமோ - இனிய மணம்வீசும் கர்ப்பூரம் முதலான நறுமணப் பொருள்களைச் சேர்த்தாலும் பூண்டின் மணம் மாறுமா? மட்டிகட்கு ஆயிரம் புத்தி சொன்ஞலும் அதில் மார்க்கமரியாதை வருமோ - அறிவில்லாத பேதைகளுக்குப் பலமுறை அறிவு புகட்டிஞலும் அதஞல் ஒழுங்கான நாகரிகம் உண்டாகுமோ?

(அருஞ்சொற்கள்) கட்டி - வெல்லக்கட்டி. காஞ்சிரம் - எட்டி. கதி : குதிரைசெல்லும் நிலை. குக்கல் - நாய். வாடை - மணம். உள்ளி - பூண்டு.

(கருத்து) கீழ்மக்கட்கு நல்லறிவு புகட்டமுடியாது. (௬எ)

௩௮. அறியலாம்

மனத்தில் கடும்பகை முகத்தினுல் அறியலாம்
மாநிலப் பூடுக ளெலாம்
மழையினுல் அறியலாம் நல்லார்பொ லார்தமை
மக்களால் அறியலா கும்
கனம்மருவு சூரரைச் சமரினுல் அறியலாம்
கற்றவொரு வித்துவா னைக்
கல்விப்ர சங்கத்தி னுலறியலாம் குணங்
களைநடையி னுலறிய லாம்
தனதகம் அடுத்தது பளிங்கினுல் அறியலாம்
சாதிசொல் லால்அறிய லாம்
தருநீதி கேள்வியால் அறியலாம் பிணிகளைத்
தாதுக்க ளாலறிய லாம்
வனசவிக சிதவதன பரிபூர ணனந்த
வாலவடி வானவே லா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) வனசவிகசித வதன - தாமரை மலரென ஒளிரும் முகத்தவனே! பரிபூரண ஆனந்த வாலவடிவான வேலா - எங்கும் நிறைந்த இன்பமான இளமைக் கோல முடைய வேலவனே! மயிலேறி...........குமரேசனே! - , மனத்திற் கடும்பகை முகத்தினுல் அறியலாம் - உள்ளத்தில் ஊறிய கொடிய பகைமையை முகக்குறிப்பால் உணரலாம்; மாநிலப் பூடுகளெலாம் மழையினுல் அறியலாம் - பெரு நிலத்திலுண்டாகும் புற்பூண்டுகளின் நிலையை மழை பெய் தால் அறியலாகும்; கனம்மருவு சூரரைச் சமரினுல் அறிய லாம் - பெருமைபொருந்திய வீரரைப் போர்க்களத்திலே பார்க்கலாம்; கற்றவொரு வித்துவானைக் கல்விப் பிரசங்கத் தினுல் அறியலாம் - கற்றறிந்த புலவனென்பதை அவை யிலே செய்யுஞ் சொற்பொழிவினுல் தெரிந்துகொள்ள

லாம்; குணங்களை நடையினால் அறியலாம் - நல்ல பண்பை ஒழுக்கத்தினால் உணரலாம்; தனது அகம் அடுத்தது பளிங்கினால் அறியலாம் - பளிங்கினாலே அதனுள்ளேயிருக்கும் பொருளைப் பார்க்கலாம்; சாதி சொல்லால் அறியலாம் - பிறப்பின் சிறப்பைச் சொல்லாலே தெரிந்துகொள்ளலாம்; தருநீதி கேள்வியால் அறியலாம் - அறநூல்களைக் கேட்பதனாலே அறங்களை அறிந்துகொள்ளலாம்; பிணிகளைத் தாதுக்களால் அறியலாம் - நோய்களை நாடிகளால் உணரலாம்.

(அருஞ்சொற்கள்) வனசம் (வட) - தாமரை. விகசிதம் (வட) - ஒளி. வதனம் (வட) - முகம். பரிபூரணம் (வட) - எங்கும் நிறைவு. ஆனந்தம் (வட) - இன்பம். பளிங்கு தன்னுள்ளேயிருக்கும் பொருள்களைத் தெளிவாகக்காட்டும். 'அடுத்தது காட்டும் பளிங்கு' என்றார் வள்ளுவர். 'சாதி சொல்லால் அறியலாம்' என்பது இக்காலத்துக்கேற்றதன்று.

(கருத்து) இங்குக் கூறப்பட்டவற்றை அவற்றுடன் கூறப்பட்ட கருவிகளால் அறியமுடியும். (௩அ)

௩௯. மாருதத்து

குணமிலாத் துட்டமிரு கங்களையும் நயகுணம்
　　கொண்டுட் படுத்திவிட லாம்
கொடியபல விடநோய்கள் யாவும்ஔ டதமது
　　கொடுத்துத் திருப்பிவிட லாம்
உணர்விலாப் பிரமராட் சசிமுதல் பேய்களை
　　உகந்துகூத் தாட்டிவிட லாம்
உபாயத்தி னால்பெரும் பறவைக்கு நற்புத்தி
　　உண்டாக்க லாம் உயிர்பெறப்
பிணமதை எழுப்பலாம் அக்கினி சுடாமற்
　　பெரும்புனல் எனச்செய்ய லாம்
பிணியையும் அகற்றலாம் காலதூ துவரையும்
　　பின்புவரு(க) என்றுசொல லாம்

மணலையும் கயிறுத் திரிக்கலாம் கயவர்குணம்
　　மட்டும் திருப்பவச மோ
　மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
　　மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மயிலேறி............குமரேசனே ! - , குணம் இலாத் துட்ட மிருகங்களையும் நயகுணம் கொண்டு உட்படுத்திவிடலாம் - நல்ல குணம் இல்லாத கொடிய விலங்குகளையும் இனிய பண்பினாலே வசப்படுத்திவிடலாம்; கொடிய பல விடநோய்கள் யாவும் ஔடதமது கொடுத்துத் திருப்பி விடலாம் - கொடுமையான பல நச்சுநோய்களை யெல்லாம் மருந்தைக்கொடுத்து மாற்றிவிடலாம்; உணர்விலாப் பிரம ராட்சசுமுதல் பேய்களை உகந்து கூத்தாட்டிவிடலாம் - அறிவில்லாத பிரமராட்சசு முதலான பேய்களை விரும்பு முறையிலே கூத்தாடச்செய்து விடலாம்; உபாயத்தினாற் பெரும்பறவைக்கு நற்புத்தி உண்டாக்கலாம் - கிளி முதலிய பெரிய பறவைகளுக்குத் தந்திரத்தினாலே நல்லறிவைத் தரலாம்; உயிர்பெறப் பிணமதை யெழுப்பலாம் - பிணத்தை உயிர்பெறச் செய்துவிடலாம்; அக்கினி சுடாமல் பெரும் புனல் எனச் செய்யலாம் - நெருப்பைச் சுடாமற் குளிர்ந்த மிகுதியான நீரைப்போலாக்கி விடலாம்; பிணியையும் அகற்றலாம் - நோயையும் நீக்கலாம்; கால தூதுவரையும் பின்பு வருக என்று சொல்லாம் - காலனுடைய தூதுவர்களையும் பிற்காலத்தில் வருக என்று கூறலாம்; மணலையுங் கயிறுத்திரிக்கலாம் - மணலைக் கயிறுக்கலாம்; கயவர் குணம் மட்டும் திருப்பவசமோ? - கடைப்பட்டவரின் பண்பை மட்டும் மாற்ற இயலாது.

(கருத்து) இங்குக்கூறப்பட்ட கொடுவிலங்கு முதலானவற்றைத் திருத்தினாலும் கீழ்மக்களை நன்முறையிலே திருப்பமுடியாது.

௩௦. மக்களில் விலங்குகள்

தான்பிடித் ததுபிடிப்(பு) என்றுமே லவர்புத்தி
 தள்ளிச்செய் வோர்கு ரங்கு
சபையிற் குறிப்(பு)அறிய மாட்டாமல் நின்றவர்
 தாம்பயன் இலாதமர மாம்
வீம்பினல் எளியவரை எதிர்பண்ணி நிற்குமொரு
 வெறியர்குரை ஞமலியா வர்
மிகநாடி வருவோர் முகம்பார்த்தி டாலோபர்
 மேன்மையில் லாதகழு தை
சோம்பலொடு பெரியோர் சபைக்குள் படுத்திடும்
 தூங்கலே சண்டிக் கடா
சூதுடன் அடுத்தோர்க்(கு) இடுக்கணே செய்திடும்
 துட்டனே கொட்டுதே ளாம்
மாம்பழந் தனைவேண்டி அந்நாளில் ஈசனை
 வலமாக வந்தமுரு கா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
 மலைமேவு குமரே சனே.

(இ -ள்.) மாம்பழந்தனை வேண்டி அந்நாளில் ஈசனை வலமாகவந்த முருகா - முற்காலத்தில் மாம்பழத்தை விரும்பிச் சிவபெருமானை வலமாகவந்த முருகனே! மயிலேறி........குமரேசனே! -, தான்பிடித்தது பிடிப்பு என்று மேலவர் புத்தி தள்ளிச்செய்வோர் குரங்கு - தான் கொண்டதே கொள்கையெனக் கொண்டு பெரியோர் அறிவுரையை நீக்கிச்செய்வோர் குரங்காவர்; சபையில் குறிப்பறிய மாட்டாமல் நின்றவர்தாம் பயன் இலாத மரமாம் - அவையிலிருந்து ஒருவருடைய குறிப்பை அறியாமல் நிற்பவர்கள் பயனற்ற மரமாவர்; வீம்பினல் எளியவரை எதிர்பண்ணி நிற்குமொரு வெறியர் குரை ஞமலி ஆவர் - வேண்டுமென்று பிடிவாதமாகச் செல்வாக்கற்றவர்களை எதிர்ப்பாக்கிக் கொண்டு திரியும் வெறியர் குரைக்கும் நாயாவர்; மிகநாடி

வருவோர் முகம்பார்த்திடா லோபர் மேன்மையில்லாத கழுதை - தங்களை மிகவும் விரும்பி வருவோரின் முகத்தையும் நோக்காத உலுத்தர்கள் இழிந்த கழுதையாவர்; சோம்பலொடு பெரியோர் சபைக்குள் படுத்திடுந் தூங்கலே சண்டிக் கடா - சான்றோர் அவையிலே சோம்பிப் படுத்திருக்குந் தூங்குமூஞ்சி சண்டித்தனமுள்ள எருமைக்கடா; சூதுடன் அடுத்தோர்க்கு இடுக்கணே செய்திடும் துட்டனே கொட்டு தேளாம் - தன்னை நம்பி வந்தவர்களுக்கு வஞ்சகமாகத் துன்பமே செய்திடும் கயவன் கொட்டுகின்ற தேளாவான்.

(அருஞ்சொற்கள்) ஞமலி - நாய். இடுக்கண் - துன்பம்.

மாம்பழக்கதை :

சிவபிரான் கையில் ஒரு சிறந்த மாம்பழம் இருந்தது. அதைப் பெறச் சிறுவர்களான கணபதியும் முருகனும் போட்டியிட்டனர். 'யார் இவ்வுலகை முதலிற் சுற்றிவருவார்களோ அவர்களுக்கே இந்த மாம்பழம்' என்ருர் பரமனுர். முருகன் உடனே விரைந்து மயிலிலேறி உலகைச் சுற்றிவரப் போய்விட்டார். கணபதி சிறிது சிந்தித்துத், தம் தந்தையே உலகம் என்ற உண்மையை உணர்ந்து, தந்தையைச் சுற்றிவந்து மாம்பழத்தைப் பெற்றுக் கொண்டார். பின் வந்த முருகன் தாம் ஏமாற்றப்பட்டதாக எண்ணிப் பிணங்கிக் கைலையைவிட்டு வந்துவிட்டார். அவரை மகிழ்விக்கவே சிவபெருமான் அவரைப், 'பழம்நீ' அன்ரே என்று தேற்றினுர். 'பழம்நீ' என்பதே 'பழநி' என மருவியது.

இவ்வாறு புராணம் கூறுகிறது. ஆனல், இந்நூலாசிரியர் 'ஈசனை வலமாக வந்த முருகா!' என்கிருர். இவ்வாறு வேறு கதையிருக்கிறதுபோலும்.

(கருத்து) பெரியோர் சொல்லைக் கேட்கவேண்டும். அவையிலே குறிப்பறியுந் திறமைவேண்டும். 'எளியாரை எதிரிட்டுக் கொள்ள'க்கூடாது. ஈகைப் பண்புவேண்டும். பெரியோர் அவையிலே துயிலக்கூடாது. அடுத்தவரைக் கெடுத்தல் ஆகாது. (௪௦)

௪௧. அற்பருக்கு வாழ்வு

அற்பர்க்கு வாழ்வுசற்(று) அதிகமா னல்விழிக்(கு)
 யாவருரு வும்தோற் றிடா(து)
அண்டிநின் றேநல்ல வார்த்தைகள் உரைத்தாலும்
 அவர்செவிக்(கு) ஏறிடா து

முற்பட்சம் ஆனபேர் வருகினும் வாரும்என
மொழியவும் வாய்வரா து
மோதியே வாதப் பிடிப்புவந் ததுபோல
முன்காலே அகலவைப் பார்
விற்பனம் மிகுந்தபெரி யோர்செய்தி சொன்னாலும்
வெடுவெடுத்(து) ஏசிநிற் பார்
விருதா மகத்துவப் பேயது சவுக்கடி
விழும்போது தீருமென் பார்
மற்புயந் தனில்நீப மாலையணி லோலனே
மார்பனே வடிவே லவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மல்புயந்தனில் நீபமாலையணி லோலனே! மார்பனே! வள்ளிகணவா! - மல்லுக்குரிய வலிய தோளிலே கடப்பமாலை அணிந்த இனியனே! அழகிய மார்பனே! வள்ளியம்மை கணவனே! மயிலேறி........குமரேசனே! - , அற்பர்க்கு வாழ்வு சற்று அதிகம் ஆனல் விழிக்கு யாவர் உருவும் தோன்றிடாது - இழிந்த குணமுடையவர்க்குச் செல்வாக்குச் சிறிது மிகுதியானல் யாருருவமும் கண்களுக்குத்தெரியாது; அண்டிநின்றே நல்ல வார்த்தைகள் உரைத்தாலும் அவர் செவிக்கு ஏறிடாது - நெருங்கிநின்று இன்மொழி இயம்பினாலும் அவர்களுடைய செவியில் செல்லாது; முன்பட்சமானபேர் வருகினும் வாரும் என மொழியவும் வாய்வராது - முன்னாளிலே அன்பாக இருந்தவர்கள் வந்தாலும் வாருங்கள் என்று கூறவும் வாய் எழாது; வாதப் பிடிப்பு வந்ததுபோல முன்காலே மோதியே அகலவைப் பார் - வாதநோய் வந்தவர்கள்போல முன்காலை விரைந்து நீட்டிவைத்து நடப்பார், (நடையிலே இறுமாப்புக் காணப் படும்); விற்பனம் மிகுந்த பெரியோர் செய்தி சொன்னாலும் வெடுவெடுத்து ஏசிநிற்பார் - அறிவிற்சிறந்த பெரியோர்கள் ஏதாவது சொன்னாலும் கடுகடுத்து வைதிடுவார்கள்;

விருதா மகத்துவப் பேயது சவுக்கடி விழும்போது தீரும் என்பார் - (அவர்களைப்பிடித்த) வீண்பெருமைப்பேய் சவுக் கடி விழுந்தால் நீங்கும் என்று (பெரியோர்) கூறுவர்; (தண்டனைக்கல்லது வேறெதற்கும் அஞ்சமாட்டார்).

(அருஞ்சொற்கள்) நீபம் - கடம்பு. லோலன் (வட) - இனியன். விற்பனம் (வட) - அறிவு.

(கருத்து) கீழோர்க்குச் செல்வம் வந்தால் எவரையும் அன் புடன் நோக்கார். இன்மொழிகளை ஏற்கமாட்டார். செல்வம் வரு முன் அன்பாயிருந்தவரையும் வரவேற்கமாட்டார். இறுமாப்புடன் நடந்துகொள்வார். பெரியோர் மொழியை ஏற்கமாட்டார். உதைப் போர்க்கே அஞ்சுவர். (சுக)

சுஉ. மக்களில் தீய கோள்கள்

அன்னை தந் தையர்புத்தி கேளாத பிள்ளையோ
அட்டமச் சனியா குவான்
அஞ்சாமல் எதிர்பேசி நிற்கும்மனை யாள்வாக்கில்
அங்கார கச்சன்ம மாம்
தன்னைமிஞ் சிச்சொன்ன வார்த்தைகே ளாஅடிமை
சந்திராட் டகமென் னலாம்
தன்பங்கு தாவென்று சபையேறு தம்பியோ
சார்ந்தசன் மச்சூ ரியன்
நன்னயமி லாதவஞ் சனைசெய்த தமையன்மூன்
ருமிடத் தில்வியா ழம்
நாடோறும் விரோதமிடு கொண்டோன் கொடுத்து
ராகுகே துக்களெ னலாம் [ளோன்
மன்அயனை அன்றுசிறை தனிலிட்டு நம்பற்கு
மந்திரம் உரைத்தகுரு வே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) அன்று மன் அயனை சிறைதன்னில் இட்டு நம்பற்கு மந்திரம் உரைத்த குருவே - முற்காலத்தில் நிலை

பெற்ற நான்முகனைச் சிறையில்வைத்துச் சிவபெருமானுக்குப் பிரணவப்பொருளை உரைத்த ஆசிரியனே! மயிலேறி ....குமரேசனே! -, அன்னை தந்தையர் புத்திகேளாத பிள்ளையோ அட்டமச்சனி ஆகுவான் - பெற்றோர் சொல்லைக்கேளாத சிறுவன் அவர்களுக்கு எட்டாமிடச்சனி போன்றவன்; அஞ்சாமல் எதிர்பேசி நிற்கும் மனையாள் வாக்கில் அங்காரகச் சன்மம்ஆம் - அச்சமின்றி எதிர்த்துப் பேசி நிற்கும் இல்லாள் வாக்கிலேயிருக்கும் செவ்வாய் எனப் பிறந்தவள்; தன்னைமிஞ்சிச் சொன்னவார்த்தை கேளா அடிமை சந்திர அட்டகம் என்னலாம் - தனக்கு மீறியவனாகிக் கூறியமொழிகொள்ளா வேலைக்காரன் எட்டாமிடத் திங்கள் என்று கூறலாம்; தன்பங்கு தா என்று சபைஏறு தம்பியோ சார்ந்த சன்மச் சூரியன் - தன்னுடைய பங்கைக் கொடுக்கச்சொல்லி மன்றில் வழக்கிடுந் தம்பி பிறப்பிடத்திலே கதிரவன் ஆவான்; நல்நயம் இலாத வஞ்சனைசெய்த தமயன் மூன்றும் இடத்தில் வியாழன் - நல்ல இனிமையில்லாமல், வஞ்சனைசெய்த மூத்தோன் மூன்றும் வீட்டிலே வியாழன் ஆவான்; நாள்தோறும் விரோதம்இடு கொண்டோன் கொடுத்துளோன் இராகு கேதுக்கள் எனலாம் - எப்போதும் பகைமை பாராட்டுங் கொண்டானுங் கொடுத்தானும் ஒருவர்க்கொருவர் இராகுவையுங் கேதுவையும் போன்றவர்.

(விளக்கவுரை) பிறந்த ஓரைக்கு (இலக்கினத்திற்கு) எட்டாம் வீட்டிற் சனியும், சந்திரனும் வாக்குக்குரிய வீட்டில் உள்ள செவ்வாயும், பிறந்த வீட்டிற் சூரியனும், மூன்றும் வீட்டில் வியாழனும் இராகுகேதுக்களும் கொடிய கோள்கள்.

(கருத்து) பெற்றோர் சொல்லை மக்கள் தட்டி நடத்தலாகாது. கணவனை எதிர்த்துப் பேசுவது மனைவிக்குத்தகாது. பணிசெய்வோன் தலைவன் சொற்படி நடத்தல்வேண்டும். தம்பி தமயனுடன் பங்குக்காக வழக்கிடுதல் நன்மையன்று. தமயனுந் தம்பியை ஏமாற்றல் கூடாது. கொண்டானுங் கொடுத்தானும் எப்போதும் பகைத்துக்கொள்ளல் நன்றன்று. (௪௨)

௬௩. நல்லினஞ்சேர்தல்

சந்தன விருட்சத்தை அண்டிநிற் கின்றபல
தருவும்அவ் வாசனை தரும்
தங்கமக மேருவை அடுத்திடும் காக்கையும்
சாயல்பொன் மயமே தரும்
பந்தம்மிகு பாலுடன்வ ளாவியத ணீரெலாம்
பால்போல் நிறங்கொடுக் கும்
படிகமணி கட்குளே நிற்கின்ற வடமும்அப்
படியே குணங்கொடுக் கும்
அந்தம்மிகு மரகதக் கல்லைத் தரித்திடில்
அடுத்ததும் பசுமையா கும்
ஆனபெரி யோர்களொடு சகவாசம் அதுசெயின்
அவர்கள்குணம் வருமென்பர் காண்
மந்தர நெடுங்கிரியின் முன்கடல் கடைந்தஅரி
மருகமெய்ஞ் ஞானமுரு கா
மயிலேறி விளையாடு குகனே புல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) முன் மந்தர நெடுங்கிரியின் கடல்கடைந்த அரிமருக - முற்காலத்தில் மந்தரம் எனும் பெரிய மலையினாலே கடலைக்கடைந்த திருமாலின் மருகனே! மெய்ஞ்ஞான முருகா - உண்மையறிவான முருகனே! சந்தன விருட்சத்தை அண்டிநிற்கின்ற பலதருவும் அவ்வாசனை தரும் - சந்தனமரத்தைச் சார்ந்து நிற்கின்ற பல மரங்களும் சந்தன மணமே தரும்; தங்க மகமேருவை அடுத்திடும் காக்கையும் சாயல் பொன்மயமே தரும் - பொன்மயமான மாமேருவைச்சார்ந்த காக்கையும் பொன்நிறச் சாயல் கொடுக்கும்; பந்தம்மிகு பாலுடன் வளாவிய தணீரெலாம் பால்போல் நிறங்கொடுக்கும் - பாலுடன் பொருந்துகின்ற தண்ணீரைக் கலந்தால் அந்த நீர் முழுதும் பால் போலவே தெரியும்; படிகமணிகட்கு உளே நிற்கின்ற

வடமும் அப்படியே குணம் கொடுக்கும் - படிகமணியிற் கோத்த நூலும் படிகம்போலவே நிறம் தரும்; அந்தம்மிகு மரகதக்கல்லைத் தரித்திடில் அடுத்ததும் பசுமை ஆகும் - அழகுமிக்க பச்சைக்கல்லை அணிந்தால் அதனைச்சார்ந்ததும் பசுமையாகவே இருக்கும்; ஆன பெரியோர்களொடு சகவாசம் அதுசெயின் அவர்கள் குணம் வருமென்பர் - ஆக்கமுடைய பெரியோர்களை நட்புக்கொண்டால் அவர்களுடைய குணம் வரும் என்பர் (அறிஞர்).

(**கருத்து**) உலகப்பொருள்கள் சார்ந்ததன் வண்ணமாகவே இருத்தல் இயல்பு. (சங)

௬௬. ஊழின் பெருவலி

அன்றுமுடி சூடுவ(து) இருக்கரகு ராமன்முன்
அருங்கா(டு) அடைந்த(து) என்ன
அண்டரெல் லாம்அமிர்தம் உண்டிடப் பரமனுக்(கு)
ஆலம் லபித்த(து) என்ன
வென்றிவரு தேவர்சிறை மீட்டநீ களவில்வே
டிச்சையைச் சேர்ந்த(து) என்ன
மேதினி படைக்கும்அய னுக்(கு)ஒரு சிரம்போகி
வெஞ்சிறையில் உற்ற(து) என்ன
என்றும்ஒரு பொய்சொலா மன்னவன் விலைபோன(து)
என்னகாண் வல்லமை யினுல்
எண்ணத்தி னுல்ஒன் றும் வாராது பரமசிவன்
எத்தனப் படிமுடியு மாம்
மன்றுதனில் நடனமிடு கங்காதரன் பெற்ற
வரபுத்ர வடிவே லவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மன்றுதனில் நடனமிடு கங்காதரன் பெற்ற வரபுத்ர வடிவேலவா - பொது அரங்கிலே கூத்தாடும்

சிவபிரான் அருளிய சிறந்த மகனே! வடிவேலனே! மயிலேறி........குமரேசனே! -, அன்று முடிசூடுவது இருக்க ரகுராமன்முன் அருங்காடு உறைந்தது என்ன - முற் காலத்தில் அன்றைக்கு முடிசூடுவதாக முடிவுசெய்தும் (அதுமாறி) இராமன் காட்டிலே வாழநேர்ந்தது ஏன்? அண்டரெல்லாம் அமிர்தம் உண்டிடப் பரமனுக்கு ஆலம் லபித்தது என்ன - வானவரெல்லோரும் அமுதம் உண்ணவும், சிவபிரானுக்குமட்டும் நஞ்சு கிடைத்தது ஏன்? வென்றிவரு தேவர் சிறைமீட்ட நீ களவில் வேடிச்சியைச் சேர்ந்தது என்ன - வெற்றியையுடைய வானவரைச் சிறையிலிருந்து வெளிவிடுத்தநீ களவிலே வேடுவர் மகளை மணந்தது ஏன்? மேதினி படைக்கும் அயனுக்கு ஒரு சிரம் போகி வெம்சிறையில் உற்றது என்ன - உலகைப் படைக்கும் பிரமனுக்கு ஒருதலை பறிமுதலாகி, அவன் கொடுஞ்சிறையிலும் இருக்கநேர்ந்தது என்ன என்றும் ஒரு பொய்சொலா மன்னவன் விலைபோனது என்ன - எப்போதும் பொய்சொல்லாத அரிச்சந்திரன் விலைபட்டது ஏன்? வல்லமையினால் எண்ணத்தினால் ஒன்றும் வாராது - ஒருவருடைய வலிமையினாலும் சூழ்ச்சியினாலும் எதுவும் நடவாது; பரமசிவன் எத்தனப்படி முடியுமாம் - பரமசிவன் திட்டமிட்டவாறே நடைபெறும்.

(விளக்கவுரை) ஊழின் பெருவலிமையைக் கூறவந்தவர் பரமசிவன் எத்தனப்படியே யாவும் முடியும் என்றார். மேலும் பரமசிவனுக்கே ஊழைக் கடக்கமுடியாது என்பதற்கு அவர் நஞ்சு உண்டது ஊழினால் என்கிறார். வானவர்கள் துன்புறாமல் நஞ்சை உண்டது ஊழ்வினையினால் என்பது பொருந்தாது. ஊழின் வலிமை நம்மால் தடுத்துக்கொள்ளமுடியாதது. சிவபிரான் நஞ்சை உண்டதும் அத்தகைய நிலைதானா? முருகன் வள்ளியம்மையைக் களவில் மணந்ததும் ஊழ்வினையா? அது அவருடைய விளையாட்டென்று தான் புராணம் கூறும். ஆகையால், இங்குக் கூறியவற்றில் சில ஒவ்வாதிருப்பது காண்க. மேதினி (வட) - உலகம், மன்று - அவை. கங்கையை முடியில்தரித்தவர் கங்காதரர்.

(கருத்து) ஊழ்வினையை வெல்வது அரிது. (௪௪)

௬௫. பெரியோர் சொற்படி நடந்தவர்

தந்தைதாய் வாக்யபரி பாலனம் செய்தவன்
தசரத குமாரரா மன்
தமையனருள் வாக்யபரி பாலனம் செய்தோர்கள்
தருமனுக்(கு) இளையநால் வர்
சிந்தையில் உணர்ந்துகுரு வாக்யபரி பாலனம்
செய்தவன் அரிச்சந் திரன்
தேகியென் றோர்க்கில்லை எனுவாக்ய பாலனம்
செய்தவன் தானகன் னன்
நிந்தைதவிர் வாக்யபரி பாலனம் செய்தவன்
நீள்பலம் மிகுத்தஅனு மான்
நிறையுடன் பத்தாவின் வாக்யபரி பாலனம்
நிலத்தினில் நளாயினிசெய் தாள்
மந்தைவழி கோயில்குள மும்குலவு தும்பிமுகன்
மகிழ்தர உகந்ததுணை வா
மயிலேறி விளையாடு குகனே புல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மந்தைவழி கோயில் குளமும் குலவு தும்பிமுகன் மகிழ்தர உகந்த துணைவா - மந்தையிலும், வழியிலும், கோயிலிலும், குளக்கரையிலும் திருக்கோயில் கொண்ட யானைமுகக்கடவுள் மகிழும்படி விரும்பிய தம்பியே! மயிலேறி........குமரேசனே! -, தந்தைதாய் வாக்கிய பரிபாலனம் செய்தவன் தசரதகுமார ராமன் - பெற்றோர் சொல்லைக்காத்து நடந்தவன் தசரதன் மகனான இராமன்; தமயன் அருள் வாக்கியபரிபாலனம் செய்தோர்கள் தருமனுக்கு இளைய நால்வர் - தமயன் கூறிய சொல்லைக் காத்தவர் தருமபுத்திரனுக்குத் தம்பியரான நால்வர்கள்; சிந்தையில் உணர்ந்து குருவாக்கிய பரிபாலனம் செய்தவன் அரிச்சந்திரன் - உள்ளத்திலே ஆராய்ந்தறிந்து ஆசிரியன் சொற்படி நடந்தவன் அரிச்சந்திரன்; தேகி என்றோர்க்கு இல்லை

எனு வாக்கியபரிபாலனம் செய்தவன் தானகர்னன் - ஏழை யென்று வந்தவர்களுக்கு இல்லை என்று கூறாத சொல்லைக் காப்பாற்றியவன் கொடையாளி கன்னன்; நிந்தைதவிர் வாக்கியபரிபாலனம் செய்தவன் நீள்பலம் மிகுத்த அனு மான் - பழியற்ற (இராமனுடைய) சொல்லைக் காப்பாற்றி யவன் மிக்க வலிமைபெற்ற அனுமான்; நிறையுடன் பத்தா வின் வாக்கியபரிபாலனம் நிலத்தினில் நளாயினி செய் தாள் - ஒழுக்கத்துடன் கணவன் சொல்லை உலகத்தில் நளாயினி காப்பாற்றினாள்.

(விளக்கவுரை) இராமன் தன் தந்தையான தசரதன் சொல் லைக் காப்பாற்றக் காட்டிற்குப் பதினாலு ஆண்டுவரை சென்றிருந் தான். பொறுங்கள் என்று தருமன் கூறியபொழுதெல்லாம் வீமன் அருச்சுனன் நகுலன் சகாதேவன் என்னும் நால்வரும் அணை கடவாத வெள்ளம்போலிருந்தனர். அரிச்சந்திரன் தன் ஆசிரியனை வசிட்டன் சொல்லைக் காப்பதற்குப் பொய்யாநெறி பூண்டான். இறக்கும் நிலையிலும் தன் அறத்தின் பயனையுங் கொடுத்தான் கன்னன்.

(கருத்து) பெரியோர் சொல்லைத் தட்டாதவர் பெருமை யடைவர். (௬ ரு)

௬௬. தன் அளவே தனக்கு

வங்காளம் ஏறுகினும் வாருகோல் ஒருகாசு
மட்டன்றி அதிகமா மோ
வான்ஏறி உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி
வண்ணப் பருந்தா குமோ
கங்கா சலந்தன்னில் மூழ்கினும் பேய்ச்சுரைக்
காய்நல்ல சுரையா குமோ
கடலுக்குள் நாழியை அமுக்கியே மொண்டிடின்
காணுமோ நால்நா ழிதான்
ஐங்காதம் ஓடினும் தன்பாவம் தன்னுடனே
அடையாமல் நீங்கிவிடு மோ
ஆரிடம் சென்றாலும் வெகுதொலைவு சுற்றினும்
அமைத்தபடி அன்றிவரு மோ

மங்காத செந்தமிழ் கொண்டுநக் கிரர்க்கு
வந்ததுயர் தீர்த்தமுரு கா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மங்காத செந்தமிழ்கொண்டு நக்கிரர்க்கு வந்ததுயர் தீர்த்த முருகா! - அழியாத செந்தமிழை (திருமுருகாற்றுப்படையை) ஏற்றுக்கொண்டு நக்கீரருக்கு நேர்ந்த இடுக்கணைப் போக்கிய முருகனே! மயிலேறி........ குமரேசனே! - , வங்காளம் ஏறுகினும் வாருகோல் ஒரு காசு மட்டன்றி அதிகம் ஆமோ? - துடைப்பம் வங்காளத்திற்குச் சென்றாலும் ஒருகாசு அளவிற்கன்றி மிகுதியாக விலைபோகுமோ? வான் ஏறி உயரப்பறந்தாலும் ஊர்க்குருவி வண்ணப் பருந்தாகுமோ? - வானத்திலே மிக உயர்ந்த இடத்திலே பறந்துசென்றாலும் ஊர்க்குருவி அழகிய பருந்தாகுமோ? கங்காசலந்தன்னில் மூழ்கினும் பேய்ச்சுரைக்காய் நல்ல சுரை ஆகுமோ? - கங்கைநீரிலே ஆட்டினாலும் பேய்ச்சுரைக்காய் நல்ல சுரைக்காயாக ஆகுமோ? கடலுக்குள் நாழியை அமுக்கியே மொண்டிடின் காணுமோ நால்நாழிதான் - நாழியென்னும் கருவியைக் கடலிலே முழுக அமுக்கி மொண்டாலும் நான்குநாழி நீரைக்கொள்ளுமோ? ஐங்காதம் ஓடினும் தன்வினைகள் தன்னோடே அடையாமல் நீங்கிவிடுமோ? - ஐந்துகாதஞ் சென்றாலும் தான்செய்த வினைகள் தன்னைச்சேராமல் விலகி விடுமோ? ஆரிடம் சென்றாலும் வெகுதொலைவு சுற்றினும் அமைத்தபடி அன்றி வருமோ? - யாரிடத்திலே அடைந்தாலும் நீண்டதொலைவு அலைந்தாலும் நமக்கு அமைத்த வாறேயன்றி வேறு வருமோ?

(விளக்கவுரை) 'ஐங்காதம் போனாலும் தன்பாவம் தன்னோடே.' 'உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது.' 'ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர் - நாழிமுகவாது நால்நாழி' என்பனவை இங்குக் குறிப்பிடத்தக்கவை.

(கருத்து) ஒருவர் வினையை ஒருவர் மாற்றமுடியாது. (சசு)

௭௭. இறுமாப்பு

சூரபது மன்பலமும் இராவணன் தீரமும்
துடுக்கான கஞ்சன்வலி யும்
துடியான இரணியன் வரப்ரசா தங்களும்
தொலையாத வாலி திடமும்
பாரம்மிகு துரியோத ஞதிநூற் றுவரது
பராக்ரமும் மதுகை டவர்
பாரிப்பும் மாவலிதன் ஆண்மையும் சோமுகன்
பங்கில்உ.று வல்லமை களும்
ஏரணவு கீசகன் கனதையும் திரிபுரர்
எண்ணமும் தக்கன்எழி லும்
இவர்களது சம்பத்தும் நின்றவோ அவரவர்
இடும்பால் அழிந்தஅன் ருே
மாரனைக் கண்ணுல் எரித்தருள் சிவன்தந்த
வரபுத்ர வடிவே லவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மாரனைக் கண்ணுல் எரித்தருள் சிவன் தந்த வரபுத்திர வடிவேலவா - மன்மதனைக் கண்ணுலே எரித்தருளிய சிவபெருமான் ஈன்ற சிறந்த மகனே! வடிவேலனே! மயிலேறி........குமரேசனே! - , சூரபத்மன் பலமும் - சூரபதுமனுடைய உடல்வலிமையும், இராவணன் தீரமும் - இராவணனுடைய துணிவும், துடுக்கான கஞ்சன் வலியும் - துடுக்கனை கஞ்சனுடைய ஆற்றலும், துடியான இரணியன் வரப்பிரசாதங்களும் - படபடப்புடைய இரணியன் வரத்திஞற்பெற்ற ஆற்றலும், தொலையாத வாலி திடமும் - வாலியின் அழிவற்ற வல்லமையும், பாரமிகு துரியோதஞதி நூற்றுவரது பராக்கிரமமும் - கூட்டமான துரியோதனன் முதலான நூற்றுவரின் ஆற்றலும், மது கைடவர் பாரிப்பும் - மதுகைடவருடைய பெருமையும்,

மாபலிதன் ஆண்மையும் - மாவலியின் வீரமும், சோமுகன் பங்கில் உறு வல்லமைகளும் - சோமுகனிடத்திலிருந்த வலிமையும், ஏர் அணவு கீசகன் கனதையும் - அழகிய கீசகனின் பெருமையும், திரிபுரர் எண்ணமும் - திரிபுரத்தசுரரின் நினைவும், தக்கன் எழிலும் - தக்கனுடைய அழகும், இவர்களது சம்பத்தும் - இவர்களுடைய செல்வமும், நின்றவோ நிலைபெற்றனவோ? அவரவர் இடும்பால் அழிந்த அன்றோ?- அவரவர்களின் செருக்கினால் அழிந்தன அல்லவா?

(விளக்கவுரை) மாரனைக் கண்ணால் எரித்தது: சிவபெருமான் சனகர் முதலான இருடிகளுக்கு யோகத்தின் சிறப்பை யோகிலிருந்து காட்டிக்கொண்டிருந்தார். சூரபதுமனால் துன்புற்றவானவர்கள் தூண்டுதலினாலே காமன் தன் மலரம்புகளாலே அவருடைய யோகினைக் கலைக்க முயன்றான். அப்போது சிவபெருமான் நெற்றிக் கண்ணைத்திறந்து அவனை எரித்தார். பாரிப்பு - பெருமை. கனதை (வட) - பெருமை. இடும்பை - இறுமாப்பு.

(கருத்து) இறுமாப்புத் துன்பந்தரும். (சஎ)

சஅ. நல்லோர் நட்பு

மாமதியில் முயலான(து) அதுதேய் வுழித்தேய்ந்து
வளரும்அப் போதுவள ரும்
வாவிதனில் ஆம்பல்கொட் டிகள்அதனில் நீர்வற்றில்
வற்றிடும் பெருகில் உயரும்
பூமருவு புதல்பூடு கோடையில் தீய்ந்திடும்
பொங்குகா லந்தழைக் கும்
புண்டரிகம் இரவிபோம் அளவிற் குவிந்திடும்
போ(து)உதயம் ஆகில்மல ரும்
தேமுடல் இளைக்கில்உயிர் கூடவும் இளைக்கும்அது
தேறில்உயி ரும்சிறக் கும்
சேர்ந்தோர்க்(கு) இடுக்கணது வந்தாலும் நல்லோர்
சிநேகம்அப் படிஆ குமே

வாமன சொரூபமத யானைமுக னுக்(கு)இளைய
வாலகுரு பரவே லவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) வாமன சொரூப மதயானை முகனுக்கு இளையவால குருபர வேலவா - குறுகிய தோற்றமும் மதயானை முகமுமுடைய கணபதிக்கு இளைய குமரனே! குருபரனே! வேலவனே! மயிலேறி........குமரேசனே! - , மாமதியில் முயலானது அது தேய்வுழித் தேய்ந்து வளரும் அப்போது வளரும் - பெருமைமிக்க திங்களிற் காணப் பெறும் கறை, திங்கள் தேயும்போது தேய்ந்து வளரும் போது வளரும்; வாவிதனில் ஆம்பல் கொட்டிகள் அதனில் நீர்வற்றில் வற்றிடும், பெருகில் உயரும் - பொய்கையிலிருக் கும் அல்லியுங் கொட்டியும் பொய்கைநீர் வற்றிஞல் வற்றிக் கிடக்கும், நீர் பெருகினுல் உயர்ந்து வளரும்; பூமருவு புதல் பூடு கோடையில் தீய்ந்திடும் பொங்குகாலம் தழைக்கும் - நிலத்திலே பொருந்திய புதரும் பூண்டும் வெயிற்காலத் திலே தீய்ந்துவிடும் மழையாலே செழிப்புறுங் காலத் திலே செழித்துநிற்கும்; புண்டரிகம் இரவிபோம் அளவில் குவிந்திடும், போது உதயமாகில் மலரும் - தாமரை கதிர வன் மறையும் மாலையில் குவிந்துவிடும், கதிரவன் தோன் றுங் காலையிலே மலர்ந்துவிடும்; தேம் உடல் இளைக்கில் உயிர் கூடவும் இளைக்கும், அது தேறில் உயிரும் சிறக்கும் - இனிய மெய் வாடினுல் உயிரும் சோர்வடையும், மெய் தெளிவடைந்தால் உயிரும் கிளர்ச்சிபெறும்; சேர்ந் தோர்க்கு இடுக்கணது வந்தாலும் நல்லோர் சிநேகம் அப்படியாகும் - நண்பர்களுக்குத் துன்பம் வந்தாலும் நல் லோர் நட்பு அவ்வாறே (துன்புறும்போது துன்புற்றும் இன்புறும்போது இன்புற்றும்) இருக்கும்.

(அருஞ்சொற்கள்) வாமனம் (வட) - குறள் வடிவம். முயல் - களங்கம். வாவி - பொய்கை. பூ - நிலம். புதல் - புதர். புண்டரிகம்

(வட) - தாமரை. போது - பொழுது (கதிரவன்). தேம் - இனிமை; தேன் என்பது தேம் எனத்திரிந்தது.

(கருத்து) நல்லோர் நட்பு எப்போதும் மாறாது. (சஅ)

சசு. பயன்தரும்

பருவத்தி லேபெற்ற சேயும் புரட்டாசி
    பாதிசம் பாநடு கையும்
  பலமினிய ஆடிதனில் ஆனைவால் போலவே
    பயிர்கொண்டு வருகரும் பும்
கருணையொடு மிக்கநா ணயமுளோர் கையினில்
    கடன்இட்டு வைத்தமுத லும்
  காலமது நேரில் தனக்குறுதி யாகமுன்
    கற்றுணர்ந் திடுகல் வியும்
விரு(து)அரச ரைக்கண்டு பழகிய சிநேகமும்
    விவேகிகட்(கு) உபகா ரமும்
  வீண்அல்ல இவையெலாம் கைப்பலன தாகஅபி
    விர்த்தியாய் வருமென்பர் காண்
மருவுலா வியநீப மாலையும் தண்தரள
    மாலையும் புனைமார் பனே
  மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
    மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மருஉலாவிய நீபமாலையும் தண்தரளமாலையும் புனைமார்பனே - மணம்பொருந்திய கடப்பமாலையும் குளிர்ந்த முத்துமாலையும் அணிந்த மார்பனே! மயிலேறி ....குமரேசனே ! - , பருவத்திலே பெற்ற சேயும் - இளமையிலே பெற்ற மகனும், புரட்டாசி பாதி சம்பா நடுகையும் - புரட்டாசித்திங்கள் பாதிக்குள் நடும் சம்பாவும், பலம் இனிய ஆடிதனில் ஆனைவால் போலவே பயிர்கொண்டுவரு கரும்பும் - நன்மைதரும் ஆடித்திங்களில் யானையின் வாலைப்போல குருத்து விரிந்துவரும் கரும்பும், கருணையொடு மிக்க நாணயம் உளோர் கையினில் கடன்

இட்டுவைத்த முதலும் - அருளும் நல்லொழுக்கமும் உடைய வரிடம் கடனாகக் கொடுத்துவைத்த முதற்பொருளும், கால மதுநேரில் தனக்கு உறுதியாகமுன் கற்று உணர்ந்திடு கல்வியும் - துன்பம் நேர்ந்தகாலத்தில் தனக்கு நன்மை தருவதற்காக இளமையிலேயே கற்றுத்தெளிந்த கல்வியும், விருது அரசரைக்கண்டு பழகிய சிநேகமும் - சிறப்புச் சின்னம்மிக்க அரசர்களைப்பார்த்துப் பயின்ற நட்பும், விவேகிகட்கு உபகாரமும் - அறிஞர்களுக்குச்செய்த நன்றி யும், வீண் அல்ல - வீணாகமாட்டா; இவையெலாம் கைப் பலனது ஆக அபிவிர்த்தியாய் வரும் என்பர் - இவைக ளெல்லாம் கைமேற் பலன்தருவனவாக வளர்ச்சியடையும் என்பார்கள்.

(விளக்கவுரை) மரு - மணம். தரளம் - முத்து. புரட்டாசி பாதி - புரட்டாசி பதினைந்து நாட்களுக்குள். விருது : கொடி, குடை முதலிய அடையாளங்கள். 'அறுநான்கிலே பெற்ற பிள்ளை யும் முன்னாளில் இட்ட பொருளும் பின்னாளிலே பயன்படும்' என்று பழமொழி கூறுவதுண்டு.

(கருத்து) இங்குக்கூறியவை வீண்போகா என்பதாம். (சக)

ரு௦. காலத்தில் உதவாதவை

கல்லாது புத்தகந் தனில்எழுதி வீட்டினிற்
கட்டிவைத் திடுகல் வியும்
காலங்க ளுக்குதவ வேண்டும்என்(று) அன்னியன்
கையிற் கொடுத்தபொரு ளும்
இல்லாளை நீங்கியே பிறர்பாரி சதம்என்(று)
இருக்கின்ற குடிவாழ்க் கையும்
ஏறுமா றாகவே தேசாந் தரம்போய்
இருக்கின்ற பிள்ளைவாழ் வும்
சொல்லான(து) ஒன்றும்அவர் மனமான(து) ஒன்றுமாச்
சொல்லும்வஞ் சகர்நே சமும்
சுகியமாய் உண்டென்(று) இருப்பதெல் லாம்தருண
துரிதத்தில் உதவாது காண்

வல்லான கொங்கைமட மாதுதெய் வானைகுற
வள்ளிபங் காளநே யா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) வல்ஆன கொங்கை மடமாது தெய்வானை குறவள்ளி பங்காளநேயா - சூதாடு கருவிபோன்ற கொங்கைகளையுடைய இளமங்கையான தெய்வயானையும் வேடர் குல வள்ளியும் விரும்பும் பங்கனை காதலனே! மயிலேறி ....குமரேசனே! - , கல்லாது புத்தகந்தனில் எழுதி வீட்டினில் கட்டிவைத்திடு வித்தையும் - கற்காமலே ஏட்டில் வரைந்து வீட்டிலே கட்டிவைத்த கல்வியும், காலங்களுக்கு உதவவேண்டுமென்று அந்நியன் கையில் கொடுத்த பொருளும் - விரும்பியபோது பயனுறவேண்டுமென்று அயலானிடம் கொடுத்த பணமும், இல்லாளை நீங்கியே பிறர் பாரிசதம் என்று இருக்கின்ற குடிவாழ்க்கையும் - தன் மனைவியை விட்டுவிட்டு மற்றவன் மனைவியே நிலையென்று நினைத்துவாழும் வாழ்க்கையும், ஏறுமாறாகவே தேசாந்தரம் போயிருக்கின்ற பிள்ளை வாழ்வும் - மாறுபட்ட மனத்துடன் வெளிநாட்டிற்குச் சென்றிருக்கின்ற பிள்ளையின் வாழ்க்கையும், சொல்லானது ஒன்றும் அவர் மனமானது ஒன்றும் ஆசொல்லும் வஞ்சகர் நேசமும் - சொல்வதொன்றும் நினைப்பது ஒன்றுமாகப் பேசும் பொய்யர் நட்பும், சுகியமாய் உண்டு என்று இருப்பதெல்லாம் துரித தருணத்தில் உதவாது - நன்மையாகக் கிடைக்கும் என்று இருக்கும் இவைபோன்ற யாவும் இடுக்கணுற்றகாலத்து விரைவாகப் பயன்படா.

(விளக்கவுரை) வல் - சூதாடு கருவி. பாரி - மனைவி. தேச + அந்தரம் : தேசாந்தரம் : தீர்க்கசந்தி; வெளிநாடு. அந்தரம் - முடிவு. சுகியம் (வட) - நன்மை. காண் : முன்னிலை அசை.

(கருத்து) இங்குக் கூறியவை வேண்டியபோது பயன்படா.

ரு௧. திரும்பாதவை

ஆடரவின் வாயினில் அகப்பட்ட தவளையும்
ஆனைவா யிற்கரும் பும்
அரிதான கப்பலில் பாய்மரக் காற்றினில்
அகப்பட்டு மெலிகாக் கையும்
நாடறிய வேதாரை வார்த்துக் கொடுத்ததும்
நமன்கைக்குள் ஆனஉயி ரும்
நலமாக வேஅணை கடந்திட்ட வெள்ளமும்
நாய்வேட்டை பட்டமுய லும்
தேடியுண் பார்கைக்குள் ஆனபல உடைமையும்
தீவாதை யானமனை யும்
திரள்கொடுங் கோலரசர் கைக்(கு)ஏறு பொருளும்
திரும்பிவா ராஎன்பர் காண்
மாடமிசை அன்னக் கொடித்திரள்கொள் சோணாடு
வாழவந் திடுமுதல் வனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மாடமிசை அன்னக்கொடி திரள்கொள் சோணாடு வாழவந்திடும் முதல்வனே! - மாடிகளின்மீது அன்னக்கொடிகள் மிகுந்து காணப்படும் சோழநாடு வாழ வந்த தலைவனே! மயிலேறி........குமரேசனே!-, ஆடரவின் வாயில் அகப்பட்ட தவளையும் - ஆடும் பாம்பின் வாயிலே சிக்கிய தவளையும், ஆனைவாயில் கரும்பும் - யானையின் வாயிற்பட்ட கரும்பும், அரிதான கப்பலில் பாய்மரக் காற்றினில் அகப்பட்டு மெலி காக்கையும் - அரிய கப்பலிலே பாய்மரத்தின் காற்றிலே சிக்குற்று வருந்தும் காக்கையும், நாடு அறிய தாரைவார்த்துக் கொடுத்ததும் - உலகம் அறிய நீர்வார்த்துக் கொடுத்துவிட்ட பொருளும், நமன் கைக்குள் ஆன உயிரும் - எமன் கையிலே அகப்பட்ட உயிரும், நலமாக அணைகடந்திட்ட வெள்ளமும் - அழகாக அணை

யைக் கடந்துபோய்விட்ட நீர்ப்பெருக்கும், நாய் வேட்டை பட்ட முயலும் - நாயின் வேட்டையிலே அதனிடம் அகப் பட்ட முயலும், தேடி உண்பார் கைக்குள் ஆன பல உடை மையும் - உழைத்துச் சாப்பிடுவார் கையில் அகப்பட்ட பல பொருள்களும், தீவாதையான மனையும் - நெருப்பினாலே பற்றப்பட்ட வீடும், திரள் கொடுங்கோல் அரசர் கைக்கு ஏறு பொருளும் - மிகக்கொடிய ஆட்சியுடைய அரசர் களின் கையில் சென்ற பொருளும், திரும்பிவாரா என்பர்- திரும்பிவராதவை என்று கூறுவார்கள்.

(விளக்கவுரை) கடல் நடுவிலே பாய்மரத்திலே அமர்ந்து விட்ட காக்கை எங்கே அலைந்தாலும் திரும்பவும் அங்கேயே திரும்பிச்சென்று தங்கநேரிடும். கரைகாணாத அது வேறே எங்கே செல்லமுடியும்? தேடி உண்பார் வறியவர்கள். அவர்கள் கைப்பட்ட பொருள்கள் உழைக்கமுடியாதபோது விலையாகிவிடும். தேடி உண்பாரைத் திருடரென்று கூறுவதும் உண்டு. மாடிவீடு மாடம், சோழநாடு சோணாடு எனத்திரிந்தது. இவ்வாறு திரிவது மரூஉ எனப்படும்.

(கருத்து) இங்குக் கூறப்பட்ட பொருள்கள் திரும்பமாட்டா.

ருஉ. நன்று

கடுகடுத் தாயிரம் செய்குவதில் இன்சொலாற்
களிகொண்(டு) அழைத்தல்நன் று
கனவேள்வி ஆயிரம் செய்வதிற் பொய்யுரை
கருத்தொடு சொலாமைநன் று
வெடுவெடுக் கின்றதோர் அவிவேகி உறவினில்
வீணரொடு பகைமைநன் று
வெகுமதிக ளாயிரம் செய்வதின் அரைக்காசு
வேளைகண்(டு) உதவல்நன் று
சடுதியிற் பக்குவம் சொல்லும் கொடைக்கிங்கு
சற்றும்இலை என்னல்நன் று
சம்பத் துடன்பிணியில் மெலிகுவதில் நோயற்ற
தாரித்தி ரியம்நன்று காண்

மடுவினில் கரிஓலம் என்னவந்(து) அருள்செய்த
 மால்மருகன் ஆனமுதல் வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
 மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மடுவினில் கரிஓலம் என்ன வந்து அருள் செய்த மால்மருகன் ஆன முதல்வா - ஒரு மடுவிலே (முதலைவாயில் அகப்பட்ட) யானை ஓலம் என்று கதற வந்து (முதலையைக் கொன்று) காத்தருளிய திருமாலின் மருகனான தலைவனே! மயிலேறி........குமரேசனே! -, கடுகடுத்து ஆயிரம் செய்குவதில் இன்சொலால் களிகொண்டு அழைத்தல் நன்று - முகங்கடுத்துப் பல உதவிகள் செய்வதைக் காட்டினும் இனியமொழியாலே மனமகிழ்வுடன் வரவேற்பது நல்லது; கனவேள்வி ஆயிரம் செய்வதில் பொய்உரை கருத்தொடு சொலாமை நன்று - பெரிய ஆயிரம் வேள்விகள் செய்வதினும் பொய்ம்மொழியைக் கருத்துடன் கூறாமை நன்று; வெடுவெடுக்கின்றதோர் அவிவேகி உறவினில் விவேகியொடு பகைமை நன்று - வெடுவெடு என்று நடந்துகொள்கிற முட்டாளின் நட்பினும் அறிவாளியொடு பகைத்தல் நல்லது; வெகுமதிகள் ஆயிரம் செய்வதின் அரைக்காசு வேளைகண்டு உதவல் நன்று - ஆயிரம் பரிசுகள் கொடுப்பதினும் காலமறிந்து உதவிசெய்தல் நல்லது; சடுதியிற் பக்குவம் சொல்லும் கொடைக்கு இங்கு சற்றும் இலை என்னல் நன்று - விரைந்து நயமாகக்கூறும் (போய் வா என்று கூறுதல்) கொடைத்தன்மைக்கு இப்போது இங்குச் சிறிதும் இல்லையென்பது நல்லது; சம்பத்துடன் பிணியில் மெலிகுவதில் நோயற்ற தாரித்திரியம் நன்று - செல்வத்துடன் நோயால் வருந்துவதைவிட நோயில்லாத வறுமை நல்லது.

(விளக்கவுரை) களி - மகிழ்ச்சி. கரி - யானை. மால் - திருமால். அவிவேகி (வட) - அறிவிலி. விவேகி × அவிவேகி. பக்குவம் சொல்வதால் அவன் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் பலமுறை அங்குவந்து ஏமாந்துபோவான்.

முதலை வாயினின்று யானையைக்காத்த கதை:

இந்திரத்துய்மன் என்ற அரசன் ஒரு முனிவர் சாபத்தினாலே யானையாகிக் காட்டில் அலைந்துகொண்டிருந்தான். ஒருநாள் ஒரு மடுவிலே நீர் பருகும்போது அந்த யானையின் காலை முதலை பிடித்துக்கொண்டது. அது, 'ஆதிமூலமே! வந்து காத்தருள்க!' என ஓலமிட்டது. உடனே திருமால் அங்குத்தோன்றி முதலையைத் தம் சக்கரத்தாலே பிளந்து யானையை விடுவித்தார். யானைதன் சாபமும் நீங்கியது.

(கருத்து) இன்சொல், பொய்ம்மை, அறிவிலியொடு கூடாமை வேண்டும். இயன்றவரையிற் காலத்திலே உதவுதல்வேண்டும். இரப்போரை ஏமாற்றுதல்கூடாது. 'நோயற்ற வாழ்வே குறைவு அற்ற செல்வம்.' (௫௨)

௫௩. ஈடாகுமோ?

தாரகைகள் ஒருகோடி வானத்(து) இருக்கினும்
சந்திரற்(கு) ஈடாகு மோ
தாருவில் கொடிதொனிகள் பலகூடி னாலுமொரு
தம்பட்ட ஓசையா மோ
கோரமிகு பன்றியின் குட்டிபல கூடின்ஒரு
குஞ்சரக் கன்றாகு மோ
கொட்டிமலர் வாவியில் பலகூடி னாலுமொரு
கோகனக மலராகு மோ
பாரமிகு மாமலைகள் பலகூடி னாலுமொரு
பைம்பொன்மக மேருவா மோ
பலனிலாப் பிள்ளைகள் அநேகம் பிறந்தும்விற்
பனன்ஒருவ னுக்குநிக ரோ
வாரணக் கொடியொரு கரத்திற் பிடித்(து)ஒன்றில்
வடிவேல் அணிந்தமுரு கா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ-ள்.) வாரணக்கொடி ஒரு கரத்திற்பிடித்து ஒன்றில் வடிவேல் பிடித்த முருகா - ஒரு திருக்கையிற் சேவற்

கொடியையும் ஒருகையில் வடிவேலையும் பிடித்த முருகனே! மயிலேறி...........குமரேசனே! - , தாரைகள் ஒருகோடி வானத்து இருக்கினும் சந்திரற்கு ஈடாகுமோ - ஒருகோடி விண்மீன்கள் வானத்திலே ஒளிவீசினும் திங்களுக்கு ஒப்பாகுமோ? தாருவில் கொடி தொனிகள்பல கூடினாலும் ஒரு தம்பட்ட ஓசை ஆகுமோ - மரத்திற் கட்டிய பல துகிற்கொடிகளின் ஒலிகள் கூடினாலும் ஒரு பறையின் ஒலிக்கு ஈடாகுமோ? கோரம்மிகு பன்றியின்குட்டி பல கூடின் ஒரு குஞ்சரக்கன்று ஆகுமோ - அழகற்ற பன்றிக் குட்டிகள் பல சேர்ந்தாலும் ஒரு யானைக்கன்றுக்குச் சமம் ஆகுமோ? வாவியில் பல கொட்டிமலர் கூடினாலும் ஒரு கோகனகமலர் ஆகுமோ - பொய்கையிலே பல கொட்டிப் பூக்கள் மலர்ந்திருந்தாலும் ஒரு தாமரை மலர்போல் அழகுறுமோ? பாரம்மிகு மாமலைகள் பல கூடினாலும் ஒரு பைம்பொன் மகமேரு ஆமோ - பெருமைமிகுந்த பெரிய மலைகள் பல சேர்ந்தாலும் ஒப்பற்ற புதிய பொன்மலையான மகமேருவோடு சமமாகுமோ? பலன்இலாப் பிள்ளைகள் அநேகம் பிறந்தும் விற்பனன் ஒருவனுக்கு நிகரோ - பயன் அற்ற பிள்ளைகள் பலபேர் பிறந்திருந்தாலும் அறிவுடைய ஒரு மகனுக்கு ஒப்பாவரோ?

(அருஞ்சொற்கள்) தாரகை - விண்மீன். தரு என்பது தாரு என நீண்டது. தாரு (வட) - மரம். தொனி (வட) - ஒலி. கோரம் (வட) - அழகின்மை. குஞ்சரம் (வட) - யானை. கோகனகம் (வட) - தாமரை. பசுமை + பொன் : பைம்பொன். பசுமை - புதுமை. வாரணம் - கோழி (சேவல்).

(கருத்து) அறிவில்லாப் பல பிள்ளைகளினும் அறிவுடைய ஒரு மகனே மேல். (௫௩)

௫௪. அறியமுடியுமோ?

மணமாலை அருமையைப் புனைபவர்களே அறிவர்
மட்டிக் குரங்(கு) அறியுமோ
மக்களுடை அருமையைப் பெற்றவர்களே அறிவர்
மலடிதான் அறிவதுண் டோ

கணவருடை அருமையைக் கற்பான மா(து)அறிவள்
 கணிகையா னவள்அறிவ ளோ
கருதும்'ஒரு சந்தி'யின் பாண்டம்என் பதைவரும்
 களவான நாயறியு மோ
குணமான கிளியருமை தனைவளர்த் தவரறிவர்
 கொடியபூ னையும்அறி யுமோ
குலவுபெரி யோரருமை நல்லோர்க ளேயறிவர்
 கொடுமூடர் தாம்அறிவ ரோ
மணவாளன் நீயென்று குறவள்ளி பின்தொடர
 வனமூடு தழுவும்அழ கா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
 மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மணவாளன் நீ என்று குறவள்ளி பின் தொடர வனமூடு தழுவும் அழகா - நீயே கணவன் என்று வேடர்குல வள்ளியம்மை பின்பற்றிவரச்சென்று காட்டிலே அவளைத் தழுவும் அழகனே! மயிலேறி........குமரேசனே!-, மணம்மாலை அருமையைப் புனைபவர்களே அறிவர் மட்டிக் குரங்கு அறியுமோ - மணமுடைய மாலையின் சிறப்பை அதனை அணிகின்றவர்கள் அறிவார்களேயன்றி அறிவற்ற குரங்கு அறியுமோ? மக்களுடைய அருமையைப் பெற்றவர்களே அன்றி மலடிதான் அறிவது உண்டோ? - குழந்தைகளின் சிறப்பைப் பெற்ற அன்னையர்கள் அறிவார்களே யல்லாமல் மலடி அறிவாளோ? கணவருடைய அருமையைக் கற்புஆன மாது அறிவள் கணிகையானவள் அறிவளோ - கணவருடைய சிறப்பைக் கற்புடைய மனைவி அறிவாள்; பொதுமகள் அறிவாளோ? கருதும் ஒருசந்தியின் பாண்டம் என்பதை வரும் களவுஆன நாய் அறியுமோ - நினைவிலே கொள்ளத்தக்க நோன்பிற்குச் சமைக்கும் பாண்டம் என்பதைத் திருடவரும் நாய் அறியுமோ? குணமானகிளி அருமைதனை வளர்த்தவர் அறிவர்; கொடிய பூனையும் அறியுமோ - பண்புடைய கிளியின் சிறப்பை

அதனை வளர்த்தவர்கள் அறிவார்கள்; கொடியதான பூனை யும் அறியுமோ? குலவு பெரியோர் அருமை நல்லோர்களே அறிவர்; கொடுமூடர்தாம் அறிவரோ? - பழகத்தக்க சான் றோர்களின் சிறப்பை நற்பண்பினரே அறிவார்கள்; கொடிய கயவர்கள் அறிவார்களோ?

(விளக்கவுரை) 'குரங்கின் கைப்பட்ட பூமாலை' 'மக்கள் அருமை மலடி அறிவாளோ?' 'கிளியை வளர்த்துப் பூனையிடம் கொடுத்ததுபோல' 'பாம்பின்கால் பாம்பறியும்' என்னும் பழமொழி கள் இங்குக் கருதத்தக்கன. ஒருசந்தி - ஒருவேளை. (நோன்பு) ஒரு வேளை புசிக்கும் நோன்பை ஒருசந்தி, ஒருவேளை என்பது வழக்கம்.

(கருத்து) அவ்வத்துறையில் உள்ளவர்களே அவ்வப்பொருள் களின் சிறப்பை அறிவர். (௫௪)

௫௫. தீச்சார்பு

மடுவினிற் கஞ்சமலர் உண்(டு)ஒருவர் அணுகாமல்
வன்முதலை அங்கிருக் கும்
மலையினில் தேன்உண்டு சென்(று)ஒருவர் கிட்டாமல்
மருவிஅதில் வண்(டு)இருக் கும்
நெடுமைதிகழ் தாழைமலர் உண்(டு)ஒருவர் அணுகாமல்
நீங்காத முள்ளிருக் கும்
நீடுபல சந்தன விருட்சம்உண்(டு) அணுகாது
நீள்அரவு சூழ்ந்திருக் கும்
குடிமல்கி வாழ்கின்ற வீட்டினிற் செல்லாது
குரைநாய்கள் அங்கிருக் கும்
கொடுக்கும் தியாகியுண்(டு) இடையூறு பேசும்
கொடும்பாவி உண்டுகண் டாய்
வடுவையும் கடுவையும் பொருவுமிரு கண்ணிகுற
வள்ளிக்கு கந்தகண வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) வடுவையும் கடுவையும் பொருவும் இரு கண்ணி குறவள்ளிக்கு உகந்த கணவா - மாவின் வடுவையும் நஞ்சையும் போன்ற இருகண்களையுடைய வேடர்குல வள்ளியம்மைக்கு விருப்பமான கணவனே! மயிலேறி........ குமரேசனே! -, மடுவினில் கஞ்சமலர் உண்டு, ஒருவர் அணுகாமல் வன்முதலை அங்கு இருக்கும் - ஆழமான நீர் நிலையிலே தாமரைமலர் இருந்தாலும், ஒருவரும் நெருங்காமற் கொடிய முதலை அந்த நீர்நிலையிலே இருக்கும்; மலையினில் தேன் உண்டு, சென்று ஒருவர் கிட்டாமல் அதில் வண்டு மருவி இருக்கும் - மலையிலே தேன் அடை யிருக்கிறது எனினும், ஒருவரும் அதனிடம் அணுகாமல் தேனீக்கள் அந்த அடையிலே இருக்கும்; நெடுமை திகழ் தாழைமலர் உண்டு, ஒருவர் அணுகாமல் நீங்காத முள் இருக்கும் - நீண்டதாக விளங்கும் தாழையிலே மலர் உள்ளது எனினும், அதை ஒருவர் நெருங்கிப் பறிக்காமல் அத் தாழையிலே முள் நீங்காமல் இருக்கும்; நீடுபல சந்தன விருட்சம் உண்டு, அணுகாது நீள் அரவு சூழ்ந்து இருக்கும்- உயர்ந்த பல சந்தன மரங்கள் உள்ளன எனினும், அதனிடஞ் செல்லமுடியாமல் நீண்ட பாம்புகள் சூழ்ந்து வாழும்; குடிமல்கி வாழ்கின்ற வீட்டினில் செல்லாது குரை நாய்கள் அங்கு இருக்கும் - குடிகள் நிறைந்து வாழும் மனையிலே புகமுடியாமல் அங்கே குரைக்கும் நாய்கள் காவலாக இருக்கும்; கொடுக்கும் தியாகி உண்டு, இடையூறு பேசும் கொடும்பாவி உண்டு - உதவிசெய்யும் கொடையாளியிருக்கிறான் எனினும், இடையூறுசெய்யுங் கொடிய பாவியும் அங்கு உள்ளான்.

(**விளக்கவுரை**) வடு - மாம்பிஞ்சு. கடு - நஞ்சு. பார்வை கொடியதாக இருக்கும்போது (பிணங்கியபோது) நஞ்சுபோன்றும், இனிமையாக (அன்புடன்) இருக்கும்போது மாவடுவையும் போன்றும் காதலர்களுக்கு ஒரு பெண்ணின் கண் தோன்றும். 'வாழ்கிற வீட்டிற்கு மறநாய்போல' என்னும் பழமொழியைக், 'குடி...... இருக்கும்' என்னுந் தொடர் நினைவு ஊட்டுகிறது.

(**கருத்து**) ஒருவனுக்கு எண்ணமிருந்தாலுங் கொடுக்காமல் தடுக்கவும் சூழலுண்டு. (ருகு)

ருகூ. வேசையர்

பூவில்வே சிகள்வீடு சந்தைப் பெரும்பேட்டை
புணைமலர் படுக்கைவீ டு
பொன்வாசல் கட்டில்பொது அம்பலம் உடுத்ததுகில்
பொருவில்சூ(து) ஆடுசா லை
மேவலா கியகொங்கை கையாடு திரள்பந்து
விழிமனம் கவர்தூண்டி லாம்
மிக்கமொழி நீர்மேல் எழுத்(து)அதிக மோகம்ஒரு
மின்னல்இரு துடைசர்ப்ப மாம்
ஆவலா கியஅல்கு லோதண்டம் வாங்குமிடம்
அதிகபடம் ஆம்மனது கல்
அமிர்தவாய் இதழ்சித்ர சாலையெச் சிற்குழி
அவர்க்(கு)ஆசை வைக்கலா மோ
மாவடிவு கொண்டே ஒளித்தவொரு சூரனை
வதைத்தவடி வேலாயு தா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மாவடிவு கொண்டு ஒளித்த ஒரு சூரனை வதைத்த வடிவேலாயுதா - மாமர வடிவாக நடுக்கடலிலே மறைந்த ஒப்பற்ற சூரபதுமனைப் பிளந்த வடிவேலனே! மயிலேறி............குமரேசனே! -, பூவில் வேசிகள் வீடு பெருஞ் சந்தைப்பேட்டை - உலகில் பொதுமகளிர் வீடு பெரிய சந்தைப்பேட்டை; மலர்புனை படுக்கைவீடு பொன் வாசல் - மலர்களாலே அணிசெயப்பெற்ற படுக்கை அறை பொன்பறிக்கும் வாயில்; கட்டில் பொது அம்பலம் - படுக் கைக்கட்டில் பலருக்கும் பொதுவான இடம்; உடுத்ததுகில் பொருஇல் சூதுஆடு சாலை - அவர்கள் உடுத்த ஆடை ஒப்பற்ற சூதாடும் அரங்கு; மேவல் ஆகிய கொங்கை கைஆடு திரள்பந்து - விருப்பத்தையூட்டும் அவர்களின் கொங்கைகள் (பலர்) கையாலும் ஆடத்தக்க திரண்ட பந்து;

விழி மனம்கவர் தூண்டில்ஆம் - அவர்களின் கண்கள் (பலருடைய) மனத்தையும் கவர்கின்ற தூண்டிலாகும்; மிக்கமொழி நீர்மேல் எழுத்து - மிகைபட்ட அவர்கள் பேச்சு நீர்மேல் எழுத்தாகும்; அதிக மோகம் ஒரு மின்னல் - அவர்கள் காட்டும் மிக்க ஆசை ஒரு மின்னல்போன்று மாறக்கூடியது; இருதுடை சர்ப்பம்ஆம் - அவர்களுடைய இரண்டு துடைகளும் பாம்புகள்; ஆவலாகிய அல்குலோ தண்டம்வாங்கும் இடம் - விருப்பமூட்டும் அல்குலோ வெனில் தண்டனையை நிறைவேற்றும் இடம்: அதி கபடம் ஆம் மனது கல் - மிக்க வஞ்சகம் பொருந்திய அவர்கள் உள்ளம் கல்லாகும்; அமிர்தவாய் இதழ் சித்திரசாலை எச்சிற்குழி - அமுதமெனக்கூறும் வாயிலுள்ள இதழ் ஓவியக்கூடத்திலே பலரும் எச்சில்துப்ப இருக்கும் எச்சிற்குழி; அவர்க்கு ஆசைவைக்கலாமோ - அவர்களிடம் காதல்கொள்வது தகாது.

(கருத்து) *விலைமாதரை விரும்புவது இழிவு.* (௫௬)

௫௭. கலிகாலக் கொடுமை!

தாய்புத்தி சொன்னால் மறுத்திடும் காலம்உயர்
　　தந்தையைச் சீறுகா லம்
　சற்குருவை நிந்தைசெய் காலம்மெய்க் கடவுளைச்
　　சற்றும்எண் ணாதகா லம்
பேய்தெய்வம் என்(று)உப சரித்திடுங் காலம்
　　புரட்டருக்(கு) ஏற்றகா லம்
　பெண்டாட்டி வையினும் கேட்கின்ற காலம்நற்
　　பெரியர்சொல் கேளாதகா லம்
தேய்வுடன் பெரியவன் சிறுமையுறு காலம்மிகு
　　சிறியவன் பெருகுகா லம்
　செருவில்விட்(டு) ஓடினோர் வரிசைபெறு காலம்வசை
　　செப்புவோர்க்(கு) உதவுகா லம்

வாய்மதம் பேசிடும் அநியாய காரர்க்கு
வாய்த்தகலி காலம்ஐ யா
மயிலேறி விளையாடு குகனே புல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மயிலேறி.......குமரேசனே!-, தாய் புத்தி சொன்னால் மறுத்திடும் காலம் - அன்னை மொழியை ஏற்றுக்கொள்ளாத காலம்; உயர் தந்தையைச் சீறுகாலம் - பெருமைமிக்க தந்தையை வெறுத்துரைக்குங் காலம்; சற்குருவை நிந்தைசெய் காலம் - நல்லாசிரியனைப் பழிக்கின்ற காலம்; கடவுளைச் சற்றும் எண்ணாத காலம் - கடவுளைச் சிறிதும் நினையாத காலம்; பேய் தெய்வம் என்று உபசரித்திடும் காலம் - பேயைத் தெய்வமென்று போற்றும் காலம்; புரட்டருக்கு ஏற்றகாலம் - ஏமாற்றுகின்றவர்க்குத் தக்ககாலம்; பெண்டாட்டி வையினும் கேட்கின்ற காலம் - மனைவி வைதாலும் பொறுத்துக்கொள்ளும் காலம்; நல் பெரியோர்சொல் கேளாத காலம் - நல்ல பெரியோர் மொழியை ஏற்றுக்கொள்ளாத காலம்; பெரியவன் தேய்வுடன் சிறுமையுறு காலம்-உயர்ந்தவன் கலங்கித் தாழ்வுறுங் காலம்; மிகுசிறியவன் பெருகு காலம் - மிகச்சிறியவன் பெருமையுறுங் காலம்; செருவில் விட்டு ஓடினோர் வரிசை பெறுகாலம் - போரிலே தோற்று ஓடியவர்கள் சிறப்புப் பெறுங்காலம்; வசை செப்புவோர்க்கு உதவுகாலம் - இழிவாகப் பேசுவோர்க்கு உதவிசெய்யுங் காலம்; ஐயா! வாய்மதம் பேசிவிடும் அநியாயக்காரர்க்கு வாய்த்த கலிகாலம் - ஐயனே! இறுமாப்பான மொழிகளைக்கூறும் ஒழுங்கினர்க்குப் பொருந்திய கலிகாலம்.

(கருத்து) இக்காலத்திலே ஒழுங்குதவறி நடப்பவர்கள் பலர்.

ரு௮. உற்ற கடமை

கல்வியொடு கனமுறச் சபையின்மேல் வட்டமாக்
காணவைப் போன்பிதா வாம்
கற்(று)உணர்ந் தேதனது புகழால் பிதாவைப்ர
காசம்செய் வோன்புத் திரன்

செல்வமிகு கணவனே தெய்வம்என்(று) அனுதினம்
சிந்தைசெய் பவள்மனைவி யாம்
சிநேகிதன் போலவே அன்புவைத்(து) உண்மைமொழி
செப்பும்அவ னேசோ தரன்
தொல்வளம் மிகுந்தநூல் கரைதெரிந்(து) உறுதிமொழி
சொல்லும் அவ னேகுரவன் ஆம்
சொன்னநெறி தவறாமல் வழிபாடு செய்துவரு
துய்யனே இனியசீ டன்
வல்விரகம் மிஞ்சுசுர குஞ்சரி யுடன்குறவர்
வஞ்சியை மணந்தகண வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) வல்விரகம் மிஞ்சுசுர குஞ்சரியுடன் குறவர் வஞ்சியை மணந்த கணவா - மிகுந்த காதலையுண்டாக்கும் தெய்வயானையுடன் குறவர் பெண்ணையும் மணம்புரிந்த கணவனே! மயிலேறி..........குமரேசனே! -, சபையின் மேல்வட்டம்ஆ கல்வியொடு கனம்உறக் காணவைப்போன் பிதாவாம் - பேரவையிலே உயர்ந்தநிலையிலே கல்வியுஞ் சிறப்பும் பொருந்த இருக்கவைப்பது தந்தையின் கடமை; கற்று உணர்ந்தே தனது புகழால் பிதாவைப் பிரகாசம் செய்வோன் புத்திரன் - கலைகளைக் கற்றறிந்து தன் புகழி னாலே தந்தைக்குப் பெயர் தேடித்தருவது மகன் கடமை; செல்வம்மிகு கணவனே தெய்வம் என்று அநுதினம் சிந்தை செய்பவள் மனைவிஆம் - செல்வத்திற்சிறந்த கண வனே தெய்வம் என்று எப்போதும் மனத்திற் கொண் டிருப்பது மனைவியின் கடமை; சிநேகிதன்போலவே அன்பு வைத்து உண்மைமொழி செப்புமவனே சோதரன் - நண் பனைப்போல அன்புகொண்டு உண்மையாகப் பேசுவது உடன்பிறந்தோன் கடமை; தொல்வளம் மிகுந்த நூல் கரைதெரிந்து உறுதிமொழி சொல்லுமவனே குரவன் ஆம் - பழமையான பொருள்வளம் செறிந்த நூல்களின் கரை

கண்டு முடிவான பொருளைக் கூறுவது ஆசிரியன் கடமை; சொன்னநெறி தவறாமல் வழிபாடு செய்துவரு துய்யனே இனிய சீடன் - ஆசிரியன் கூறிய ஒழுக்கந்தவறாமல் தொண்டுசெய்து வருவது தூய மாணவன் கடமை.

(கருத்து) இக்குக்கூறியது அவரவர் கடமை. (ருஅ)

ருகூ. பண்பினாலே பெருமை

சேற்றிற் பிறந்திடும் கமலமலர் கடவுளது
 திருமுடியின் மேலிருக் கும்
 திகழ்சிப்பி உடலில் சனித்தமுத்(து) அரசரது
 தேகத்தின் மேலிருக் கும்
போற்றியிடு பூச்சியின் வாயின்நூல் பட்(டு)என்று
 பூசைக்கு நேசமா கும்
 புகலரிய வண்(டு)எச்சி லானதேன் தேவர்கோன்
 புனிதஅபி டேகமா கும்
சாற்றிய புலாலொடு பிறந்தகோ ரோசனை
 சவாதுபுழு(கு) அனைவர்க்கும் ஆம்
 சாதியி னத்திற் பிறக்கினும் கற்றோர்கள்
 சபையின்மேல் வட்டம்அன் றோ
மாற்றிச் சுரத்தினை விபூதியால் உடல்குளிர
 வைத்தமெய்ஞ் ஞானமுத லே
 மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
 மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) விபூதியால் சுரத்தினை மாற்றி உடல் குளிர வைத்த மெய்ஞ்ஞான முதலே! - திருநீற்றாலே (பாண்டியன்) வெப்பத்தைத் தணித்து மெய்குளிரவைத்த மெய்யறிவின் முதல்வனே! மயிலேறி..........குமரேசனே! - , சேற்றில் பிறந்திடும் கமலமலர் கடவுளது திருமுடியின் மேல் இருக்கும் - சேற்றிலே தோன்றிய தாமரைமலர் தெய்வத்தின் திருமுடிமேல் இருக்கும்; திகழ்சிப்பி உடலில்

சனித்த முத்து அரசரது தேகத்தின்மேல் இருக்கும் - விளங்குகின்ற சிப்பியினிடம் உண்டான முத்து மன்னவர் மெய்யிலே அழகுசெய்யும்; போற்றியிடு பூச்சியின் வாயின் நூல் பட்டு என்று பூசைக்கு நேசம் ஆகும் - ஆதரிக்கப் பெறும் பட்டுப்பூச்சியின் வாயில் உண்டான நூல் பட்டு என்று சிறப்புப்பெற்றுக் கடவுளை வழிபட (உடுத்த) அன்புடன் கொள்ளப்படும்; புகல் அரிய வண்டு எச்சில் ஆன தேன் தேவர்கொள் புனித அபிடேகம் ஆகும் - கூறுதற்கரிய இனிமையுடைய வண்டின் எச்சிலான தேன் வானவரேற்றுக்கொள்ளுந் தூய முழுக்குப்பொருள் ஆகும்; சாற்றிய புலாலொடு பிறந்த கோரோசனை சவாது புழுகு அனைவர்க்கும் ஆம் - கூறப்பட்ட இழிந்த ஊனுடன் தோன்றிய கோரோசனையும் சவ்வாதும் புழுகும் யாவர்க்கும் பயன்படும்; சாதியீனத்தில் பிறக்கினும் கற்றோர்கள் சபையின் மேல்வட்டம் அன்றோ? - இழிந்த குலத்தில் பிறந்தாலும் கற்றறிந்தவர்கள் அவையிலே சிறந்த இடத்தில் இருப்பார்கள் அல்லவா?

(விளக்கவுரை) முருகனே திருஞானசம்பந்தராகத் தோன்றினார் என்னும் கொள்கையை உட்கொண்டு பாண்டியன் வெப்பு நோயைத் தணித்ததாகக்கூறினார். திகழ்தல் - விளங்குதல். புகலுதல் - சொல்லுதல். புலால் - இழிந்தது (ஊன்).

(கருத்து) பிறப்பினால் உயர்வு தாழ்வு கருதலாகாது; செயலாலே கொள்ளவேண்டும். (௯௧)

௯௦. செயத் தகாதவை

தானு சரித்துவரு தெய்வம்இது என்றுபொய்ச்
சத்தியம் செயின்விடா து
தன்வீட்டில் ஏற்றிய விளக்கென்று முத்தந்
தனைக்கொடுத் தால்அது சுடும்
ஆனாலும் மேலவர்கள் மெத்தவும் தனதென்(று)
அடாதுசெய் யிற்கெடுதி யாம்
ஆனைதான் மெத்தப் பழக்கம்ஆ னாலுஞ்செய்
யாதுசெய் தாற்கொன் றிடும்

தீனை(து) இனி(து)என்று மீதூண் விரும்பினல்
தேகபீ டைகளே தரும்
செகராசர் சனுவென்ன ஏலாத காரியம்
செய்தால் மனம்பொருர் காண்
வாஞடு புகழும்ஒரு சோஞடு தழையஇவண்
வந்(து)அவ தரித்த முதலே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) வான்நாடு புகழும் ஒரு சோஞடு தழைய இவண்வந்து அவதரித்த முதலே! - வானவர் புகழும் ஒப்பற்ற சோழநாடு சிறப்புற இங்குவந்து தோன்றிய முதல்வனே! மயிலேறி............குமரேசனே! - தான் ஆசரித்து வருதெய்வம் இது என்று பொய்ச்சத்தியம் செயின் விடாது - தான் வழிபட்டுவருந் தெய்வம் இது என்று எண்ணி (அதன் முன்னிலையிலே) பொய்ம்மொழி கூறினல் ஒறுக்காமல் விடாது; தன் வீட்டில் ஏற்றிய விளக்கு என்று முத்தம்தனைக் கொடுத்தால் அது சுடும் - தன்னுடைய மனையில் ஏற்றிய விளக்கு என்று முத்தங்கொடுத்தால் அவ்விளக்குச் சுடும்; ஆனலும் மேலவர்கள் மெத்தவும் தனது என்று அடாதுசெய்யின் கெடுதிஆம் - எப்படியிருப்பினும் உயர்நிலையில் உள்ளவர்கள் தனக்கு ஆதரவாக உள்ளவர்கள் என்று தவறுசெயின் தீமை உண்டாகும்; ஆனைதான் மெத்தப் பழக்கம் ஆனலும் செய்யாது செய்தாற் கொன்றிடும் - யானை நன்ருகப் பழகியிருந்தாலும் அதற்கு விருப்பமல்லாததைச்செய்தாற் கொன்றுவிடும்; தீனைது இனிது என்று மீதூண் விரும்பினல் தேகபீடைகளே தரும் - உணவு இனியது என்று மிகைபட விரும்பி உண்டால் உடல்நோயையே உண்டாக்கும்; செகராசர் சனுஎன்ன ஏலாதகாரியம் செய்தால் மனம்பொருர் - உலக மன்னவரின் அரும்புதல்வன் என்று நினைத்துத் தகாத வேலைகளைச்செய்தால் அரசர் உள்ளம் பொறுக்க மாட்டார்கள்.

(அருஞ்சொற்கள்) ஆசரித்தல் - வழிபடுதல். தீன் - உணவு. சனு (வட) - மகன்.

(கருத்து) யாவராயினும் அளவுக்குமீறினால் கெடுதியே உண்டாகும். (கூ0)

கூக. நடுவுநிலைமை

வந்தவிவ காரத்தில் இனியபரி தானங்கள்
    வருமென்றும் நேசரென் றும்
  வன்பகைஞ ரென்றும்அய லோரென்றும் மிக்கதன
    வானென்றும் ஏழையென் றும்
இந்தவகை யைக்குறித்(து) ஒருபட்ச பாதம்இலை
    எள்ளள(வு) உரைத்திடா மல்
  எண்ணமுடனே லிகித புத்தியொடு சாட்சிக்கும்
    ஏற்கச் சபாசமதம் ஆம்
முந்தஇரு தலையும் சமன்செய்த கோல்போல்
    மொழிந்திடின் தர்மம்அது காண்
  முனைவீமன் உடல்பாதி மிருகந் தனக்கென்று
    முன்தருமர் சொன்ன(து)அல வோ?
மைந்தன்என அன்றுமை முலைப்பால் கொடுத்திட
    வளர்ந்தருள் குழந்தைவடி வே!
  மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
    மலைமேவு குமரே சனே.

(இ-ள்.) அன்று உமைமைந்தன் என்று முலைப்பால் கொடுத்திட வளர்ந்தருள் குழந்தை வடிவே! - முற்காலத்தில் உமையம்மை மகனென்று முலைப்பால் அளிக்க வளர்ந்தருளிய குழந்தை உருவமுடையவனே! மயிலேறி.......... குமரேசனே! -, வந்த விவகாரத்தில் - தன்னிடத்தில் வந்த வழக்கிலே, இனிய பரிதானங்கள் வருமென்றும் - நல்ல இலஞ்சப்பொருள்கள் கிடைக்கும் எனவும், நேசர் என்றும் - நண்பர்கள் எனவும், வன் பகைஞர் என்றும் - கொடிய பகைவர்கள் எனவும், அயலோர் என்றும் - பழக்க

மில்லாதவர்கள் எனவும், மிக்க தனவான் என்றும் - பெரிய செல்வன் எனவும், ஏழை யென்றும் - வறியனெனவும், இந்தவகையைக் குறித்து ஒரு பட்சபாதம் ஓர் எள்ளளவு உரைத்திடாமல் - இத்தகைய நிலையைக்குறித்து விருப்பு வெறுப்புக்கள் எள்ளளவேனுங் கூறாமல், எண்ணமுடனே இலிகித புத்தியொடு - (நடுநிலை) நினைவுடன் எழுத்து மூல மான சான்றுகளோடு, சாட்சிக்கும் ஏற்க - சாட்சி கூறிய தற்குத்தக, சபா சமதம்ஆம் - அவையோர் ஒப்பும் முறை யில், முந்த இருதலையும் சமன்செய்த கோல்போல் - முதன்மைபெற இருசார்பிலும் சமப்படுத்திய துலாக்கோல் போல, மொழிந்திடில் தர்மம் அது - முறைகூறுவது அற மாகும், முன் முனிவீமன் உடல்பாதி மிருகந்தனக்கு என்று தருமர் சொன்னது அலவோ? - முற்காலத்தில் வலிய வீமனுடைய பாதிமெய் புருடாமிருகத்துக்குத்தான் என தருமபுத்திரர் கூறியது அறமன்றோ?

தருமர் நீதிவழங்கிய கதை:

தருமபுத்திரன் செய்த வேள்வி யொன்றுக்குப் 'புருடா மிருக'த்தை அழைத்துவர வீமன் சென்றான். அது ஒரு ஒப்பந்தம் பேசியது: வீமன் விரைந்து முன்னே செல்ல வேண்டும். புருடா மிருகம் பின்னேவரும். அது வீமனைப் பற்றுவதற்கு முன்னாலே அவன் தன் நாட்டின் எல்லையைத் தொட்டுவிட வேண்டும். இதற் கிடையிலே அது வீமனைப் பிடித்துவிட்டால் அவன் அதற்கு உணவாகவேண்டும்.

இந்த ஒப்பந்தத்திற்கு வீமன் இசைந்தான். ஆனால், அவன் தன் நாட்டின் எல்லையிலே ஒருகாலை வைத்தவுடன் அது அவனைப் பற்றிக்கொண்டது. வீமன் தன்காலைத் தன் எல்லையில் வைத்து விட்டதால் தன்னை அது உணவாக்கிக்கொள்ளலாகாது என்றான். ஆனால், அவ்விலங்கு மற்றொருகாலை அவன் எல்லையிலே வைக்க வில்லை என்று வற்புறுத்தியது.

இருவரும் தருமபுத்திரரிடம் சென்று வழக்குரைத்தனர். அவர் நடுநிலை தவறாமல் வீமனுடைய பாதிமெய் விலங்கிற்கு உரியதுதா னென்று தீர்ப்புக்கூறினார்.

இவ்வாறு பாரதக்கதை கூறும்.

(கருத்து) முறை வழங்குவதில் விருப்புவெறுப்புக் காட்டாமல் நடுநிலையாக இருத்தல் வேண்டும். (கூக)

௯௨. ஓரம் சொல்லேல்

ஓரவிவ காரமா வந்தவர் முகம்பார்த்(து)
உரைப்போர் மலைக்குரங் காம்
உயர்வெள் ளெருக்குடன் முளைத்துவிடும் அவர்இல்
உறையும்ஊர் பாழ்நத்தம் ஆம் [லம்
தாரணியில் இவர்கள்கிளை நெல்லியிலை போல்உகும்
சமானமா எழுபிறப் பும்
சந்ததி யிலாதுழல்வர் அவர்முகத் தினின்மூத்த
தையலே குடியிருப் பாள்
பாரம்இவர் என்றுபுவி மங்கையும் நடுங்குவாள்
பழித்த துர்மரணம்ஆ வார்
பகர்முடிவி லேரவுர வாதிநர கத்(து)அனு
பவிப்பர்எப் போதும்என் பார்
வாரமுடன் அருணகிரி நாதருக்(கு) அனுபூதி
வைத்தெழுதி அருள்குரு பரா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ-ள்.) வாரமுடன் அருணகிரிநாதருக்கு அநுபூதி வைத்து எழுதியருள் குருபரா - அன்புடன் அருணகிரியாருக்கு அநுபூதி யெழுதும் நிலையை அருளிய குருபரனே! மயிலேறி........குமரேசனே! - , ஓர விவகாரம் ஆ(க) வந்தவர் முகம்பார்த்து உரைப்போர் மலைக்குரங்குஆம் - ஒருதலை வழக்காக வந்தவர்களுடைய முகத்தைப்பார்த்துத் தீர்ப்புக்கூறுவோர் மலைக்குரங்காவர்; அவர் இல்லம் உடன் உயர் வெள்எருக்கு முளைத்துவிடும் - அவர் வீட்டிலே உடனே உயரமான வெள் எருக்கஞ்செடிகள் தோன்றிவிடும்; உறையும் ஊர்பாழ் நத்தம்ஆம் - அவர்கள் குடியிருக்கும் ஊரும் பாழான நத்தமாகிவிடும்; தாரணியில் இவர்கள் கிளை நெல்லியிலைபோல் உகும் சமானமாம் - உலகிலே இவர்களுடைய உறவுநெல்லியின் இலைபோலப்பிரிந்து

விடுவார்கள்; எழுபிறப்பும் சந்ததியிலாது உழல்வர் - அவர்களெடுக்கும் எழுபிறப்பிலும் கால்வழியில்லாமல் வருந்துவர்; அவர் முகத்தினில் மூத்த தையலே குடியிருப் பாள் - அவர்களுடைய முகத்திலே மூதேவியே வாழ்வாள்; புவிமங்கையும் இவர் பாரம் என்று நடுங்குவாள் - நிலமக ளும் இவர்களைத் தாங்கமுடியாமல் அஞ்சுவாள்; பழித்த துர்மரணம் ஆவார் - பிறர் பழிக்கும்படிக் கெடுதியான சாவு பெறுவர்; பகர்முடிவிலே ரவுரவாதி நரகத்து எப் போதும் அனுபவிப்பர் என்பர்-இவ்வாறு இழித்துக்கூறும் முடிவுக்குப்பின் எக்காலத்தும் இரவுரவம் முதலான நரகங் களிலே கிடப்பர் என்று பெரியோர் கூறுவர்.

(கருத்து) ஓரமாக வழக்குரைத்தலைவிடக் கொடிய தீமை வேறொன்றும் இல்லை. (௬௨)

௬௩. ஒன்று வேண்டும்

கொங்கையில் லாதவட்(கு) எத்தனைப் பணியுடைமை
கூடினும் பெண்மையில் லை
கூறுநிறை கல்வியில் லாமலெத் தனைகவிதை
கூறினும் புலமையில் லை
சங்கையில் லாதவர்க்(கு) எத்தனை விவேகம்
தரிக்கினும் கனதையில் லை
சட்சுவை பதார்த்தவகை உற்றாலும் நெய்யிலாச்
சாதமும் திருத்தியில் லை
பங்கயம் இலாமல்எத் தனைமலர்கள் வாவியில்
பாரித்தும் மேன்மையில் லை
பத்தியில் லாமல்வெகு நியமமாய் அர்ச்சனைகள்
பண்ணினும் பூசையில் லை
மங்கையர் இலாமனைக்(கு) எத்தனை அருஞ்செல்வம்
வரினும்இல் வாழ்க்கையில் லை
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே.

(இ-ள்.) மயிலேறி........குமரேசனே!-, கொங்கை இல்லாதவட்கு எத்தனைப் பணி உடைமை கூடினும் பெண்மையில்லை - கொங்கையில்லாத பெண்ணுக்கு எவ்வளவு அணிகளும் ஆடைகளும் இருந்தாலும் பெண்மை வராது; கூறும் நிறைகல்வி யில்லாமல் எத்தனை கவிதை கூறினும் புலமையில்லை - புகழத்தக்க நிறைந்த கல்வி யில்லாமல் எவ்வளவு செய்யுள் இயற்றினும் புலமையாகாது; சங்கை இல்லாதவர்க்கு எத்தனை விவேகம் தாக்கினும் கனதை இல்லை - நாணம் இல்லாதவர்களுக்கு எத்துணை அறிவிருப்பினும் பெருமையுண்டாகாது; சட்சுவை பதார்த்த வகை உற்றாலும் நெய்யிலாச் சாதமும் திருத்தியில்லை - அறுசுவைக் கறிகளிருந்தாலும் நெய்யில்லாவுண்டி மன நிறைவு தராது; பங்கயம் இலாமல் எத்தனை மலர்கள் வாவியிற் பாரித்தும் மேன்மையில்லை - தாமரைமலர் இல்லாமல் வேறு எத்துணைப் பூக்கள் பொய்கையில் நிறைந்தாலும் உயர்வில்லை; பத்தி இல்லாமல் வெகு நியமமாய் அர்ச்சனைகள் பண்ணினும் பூசையில்லை - அன்பின்றி மிக ஒழுங்காக மலரிட்டு வணங்கினாலும் வழிபாடாகாது; மங்கையர் இலா மனைக்கு எத்தனை அருஞ்செல்வம் வரினும் இல்வாழ்க்கை இல்லை - மனைவியர் இல்லாத இல்லத்திற்கு எவ்வளவு அரிய செல்வம் வந்தாலும் இல்லறம் ஆகாது.

(கருத்து) எப்பொருளும் அதனைச் சிறப்பிக்கக்கூடிய ஒன்று இல்லாவிடின் மேன்மையுறாது. (௯௩)

௯௪. அளக்க இயலாதவை

வாரியா ழத்தையும் புனலெறியும் அலைகளையும்
மானிடர்கள் சனனத்தை யும்
மன்னவர்கள் நினைவையும் புருடர்யோ கங்களையும்
வானின்உயர் நீளத்தை யும்
பாரில்எழு மணலையும் பலபிரா ணிகளையும்
படியாண்ட மன்னவரை யும்
பருப்பதத் தின்நிறையும் ஈசுரச் செயலையும்
பனிமாரி பொழிதுளியை யும்

சீரிய தமிழ்ப்புலவர் வாக்கிலெழு கவியையும்
சித்தர்தம(து) உள்ளத்தை யும்
தெரிவையர்கள் சிந்தையையும் இவ்வள(வு) எனும்
தெரிந்(து) அள(வு)இடக்கூடு மோ [படித்
வாரிச மடந்தைகுடி கொண்டநெடு மாலுக்கு
மருகன்என வந்தமுரு கா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) வாரிசமடந்தை குடிகொண்ட நெடுமாலுக்கு மருகன் எனவந்த முருகா - தாமரைமலரில் இருக்குந் திருமகள் வாழும் மார்பனை திருமாலுக்கு மருகன் என்ற முறையிலே வந்த முருகனே! மயிலேறி........குமரேசனே!-, வாரி ஆழத்தையும் புனல் எறியும் அலைகளையும் - கடலின் ஆழத்தையும் அது வீசும் அலைகளையும், மானிடர்கள் சனனத்தையும் - மக்களின் பிறப்பையும், மன்னவர்கள் நினைவையும் - அரசர்கள் எண்ணத்தையும், புருஷர் யோகங் களையும் - ஆடவர்களுக்குவரும் சிறப்பையும், வானின் உயர் நீளத்தையும் - வானத்தின் உயரத்தையும் நீளத்தையும், பாரில் எழு மணலையும் - உலகில் தோன்றும் மணலையும், பல பிராணிகளையும் - பலவகையான உயிர்களையும், படி ஆண்ட மன்னவரையும் - உலகாண்ட அரசர்களையும், பருப் பதத்தின் நிறையும் - மலையின் நிறையையும், ஈசுரச் செயலை யும் - இறைவன் செய்வதையும், பனிமாரி பொழி துளியை யும் - பனியும் மாரியும் பெய்யும் துளிகளையும், சீரிய தமிழ்ப்புலவர் வாக்கில் எழு கவியையும் - சிறந்த தமிழ்ப் புலவருடைய நாவிலிருந்து விளையும் கவிதைச் சிறப்பையும்' சித்தர் தமது உள்ளத்தையும் - சித்தருடைய நினைவின் உறுதியையும், தெரிவையர்கள் சிந்தையையும் - பெண் களின் உள்ளத்தையும், இவ்வளவு எனும்படித் தெரிந்து அளவிடக்கூடுமோ - இத்தகையவென்று கூறும் முறை யிலே ஆராய்ந்து அறுதியிட்டுக்கூற ஒவ்வுமோ? (ஒவ்வாது.)

(அருஞ்சொற்கள்) வாரி - கடல். வாரிசம் (வட) - தாமரை படி - உலகு. பருப்பதம் (வட) - மலை. தெரிவையர் - பெண்கள்

(கருத்து) இங்குக்கூறப்பட்டவை அளவில் அடங்காதவை.

௬௫. பிறர் மனைவியை நயவாதே

தம்தாரம் அன்றியே பரதார மேல்நினைவு
 தனைவைத்த காமுகர்க் குத்
தயையில்லை நிசமில்லை வெட்கமிலை சமரினில்
 தைரியம் சற்றுமில் லை
அம்தாரம் இல்லைதொடர் முறையில்லை நிலையில்லை
 அறி(வு)இல்லை மரபும்இல் லை
அறம்இல்லை நிதியில்லை இரவினில் தனிவழிக்(கு)
 அச்சமோ மனதில்இல் லை
நந்தாத சனம்இல்லை இனம்இல்லை எவருக்கும்
 நட்(பு)இல்லை கனதையில் லை
நயம்இல்லை இளமைதனில் வலிமையிலை முத்திபெறும்
 ஞானம்இலை என்பர்கண் டாய்
மந்தார பரிமள சுகந்தாதி புனையும்மணி
 மார்பனே அருளா ளனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
 மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மந்தாரம் பரிமள சுகந்தம் ஆதிபுனையும் அணிமார்பனே! - மந்தாரப்பூவையும் வாசனை வீசுகின்ற கலவைச்சந்தனம் முதலியவற்றையும் அணியாகக் கொள் கின்ற அழகிய மார்பை உடையவனே! அருள் ஆளனே! - அருளை உடையவனே! மயிலேறி............குமரேசனே! - , தம்தாரம் அன்றியே பரதாரம்மேல் நினைவுதனைவைத்த காமுகர்க்கு - தம் மனைவியே அல்லாமல் பிறர் மனைவி மேல் நினைவாய் இருக்கின்ற காமிகளுக்கு, தயை இல்லை - இரக்கம் இல்லை; நிசம் இல்லை - உண்மை இல்லை; வெட்கம்

இலே - நாணம் இல்லை; சமரினில் தைரியம் சற்றும் இல்லை - போரிலே அஞ்சாமை சிறிதும் இல்லை; அம்தாரம் இல்லை - அழகிய தன் மனைவி இல்லை; தொடர்முறை இல்லை - மற்றவர்களோடு சம்பந்தம் இல்லை; நிலை இல்லை - உறுதி இல்லை; அறிவு இல்லை - ; மரபும் இல்லை - மரபுநெறியும் இல்லை; அறம் இல்லை - ஒழுக்கம் இல்லை; நிதி இல்லை - செல்வம் இல்லை; இரவினில் தனிவழிக்கு அச்சமோ மனதில் இல்லை - இரவினிலே தனிவழியே செல்வதற்கு மனதில் அச்சம் இல்லை; நந்தாத சனம் இல்லை - கெடாத மக்களுறவு இல்லை; இனம் இல்லை - உறவு இல்லை; எவருக்கும் நட்பு இல்லை - யாரிடத்திலும் நட்பு இல்லை; கனதை இல்லை - மதிப்பு இல்லை; நயம் இல்லை - வாழ்க்கையில் இனிமை இல்லை; இளமைதனில் வலிமை இலே - இளமையில் வலிவு இல்லை; முத்திபெறும் ஞானமிலே - வீட்டை அடையும் அறிவு இல்லை; என்பர் - என்று பெரியோர் கூறுவார்கள்.

(விளக்கவுரை) கண்டாய்: அசைநிலையாகப் பொருள் இல்லாமல் நின்றது.

(அருஞ்சொற்கள்) கனதை (வட) - பெருமை. நந்துதல் - கெடுதல். சில இடங்களில் 'ஆக்கம்' என்றும் பொருள்படும்.

(கருத்து) பிறர் மனைவியை விரும்பிய காமுகர்கட்கு இவையெல்லாம் இல்லை என்று கூறுவார்கள். (௬௫)

௬௬. மானம் காத்தல்

கனபாரம் ஏறினும் பிளந்திடுவ(து) அன்றியே
  கற்றூண் வளைந்திடாது
கருதலர்களால்உடைந் தாலும்உயிர் அளவிலே
  கனசூரன் அமரில்முறியான்
தினம்ஓர் இடுக்கண்வந்(து) உற்றாலும் வேங்கைதோல்
  சீவன்அள வில்கொடாது
திரமான பெரியோர்கள் சீரங்கள் போகினும்
  செப்பும்முறை தவறிடார்கள்

வனம்ஏறு கவரிமான் உயிர்போகும் அளவும்தன்
 மயிரின்ஒன் றும்கொடா து
வாராத ஆபத்து வருகினும் கற்புடைய
 மாதுநிறை தவறிநட வாள்
மனதார உன(து)அடைக் கலமென்ற கிரற்கு
 வன்சிறை தவிர்த்தமுரு கா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
 மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மனது ஆர உனது அடைக்கலம் என்ற கீரற்கு வன்சிறை தவிர்த்த முருகா! - தன்மனம் பொருந்தும்படி உன்னையே அடைக்கலம் என்று கூறிய நக்கீரருக்கு உண்டாகிய கொடிய சிறைவாசத்தைப் போக்கியருளிய முருகனே! மயிலேறி........குமரேசனே! -, கனபாரம் ஏறில் பிளந்திடுவது அன்றியே கல்தூண் வளைந்திடாது - அதிக சுமை ஏறினும் பிளப்பது அல்லாமல் கல்தூண் வளையாது; கருதலர்களால் உடைந்தாலும் உயிர் அளவிலே கன சூரன் அமரில் முறியான் - பகைவர்களால் தோல்வியடைய நேர்ந்தாலும் அதிக வீரம்பொருந்திய ஒருவன் உயிர்விடும் வரையில் போரில் பின்னடையமாட்டான்; தினம் ஓர் இடுக்கண் வந்து உற்றாலும் வேங்கைதோல் சீவன் அளவில் கொடாது - ஒவ்வொருநாளும் ஒவ்வொரு துன்பம் வந்து அடைந்தாலும் புலியானது தன்தோலை உயிர்விடும் வரையில் கொடாது; திரமான பெரியோர்கள் சரீரங்கள் போகினும் செப்புமுறை தவறிடார்கள் - உறுதிவாய்ந்த பெரியோர்கள் உடல் அழிவதானாலும் சொல்லுகின்ற முறையில் தவறிநடவார்கள்; வனம் ஏறு கவரிமான் உயிர்போகும் அளவும் தன்மயிரின் ஒன்றும் கொடாது - காட்டில் உலவுகின்ற கவரிமான் ஆனது உயிர்போகின்ற அளவிலும் தன் மயிரில் ஒன்றையும் இழவாது; வாராத ஆபத்து வருகினும் கற்புடைய மாது நிறைதவறி நடவாள் - வரக்கூடாத துன்பம் வந்தபோதிலும் கற்புடைய பெண் கற்புநெறியிலிருந்து தவறிநடக்கமாட்டாள்.

(அருஞ்சொற்கள்) கருதலர்கள் - பகைவர்கள். இடுக்கண் - துன்பம். நிறை - கற்பு.

(கருத்து) வாராத துன்பம் வந்தாலும் இவர்கள் தங்கள் பெருமையைக் காப்பார்கள். (௯௯)

௯௭. திருவருட் சிறப்பு

திருமகள் கடாட்சம்உண் டானல் எவர்க்கும்
சிறப்புண்டு கனதையுண் டு
சென்றவழி யெல்லாம் பெரும்பாதை ஆய்விடும்
செல்லாத வார்த்தைசெல் லும்
பொருளொடு துரும்புமரி யாதைஆம் செல்வமோ
புகல்பெருக்(கு) ஆறுபோல் ஆம்
புவியில்முன் கண்டுமதி யாதபேர் பழகினவர்
போலவே நேசம்ஆ வார்
பெருமையொடு சாதியில் உயர்ச்சிதரும் அனுதினம்
பேரும்ப்ர திட்டையுண் டாம்
பிரியமொடு பகையாளி கூடவுற(வு) ஆகுவான்
பேச்சினிற் பிழைவரா து
வருமென நினைத்தபொருள் கைகூடி வரும்அதிக
வல்லமைகள் மிகவும்உண் டாம்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மயிலேறி........குமரேசனே! -, எவர்க்கும் திருமகள் கடாட்சம் உண்டானல் சிறப்பு உண்டு - யாவருக்கும் இலக்குமியின் அருள் ஏற்பட்டால் கீர்த்தியுண்டு; கனதை உண்டு - பெருமை உண்டு; சென்றவழி எல்லாம் பெரும்பாதை ஆய்விடும் - போன நெறியாவும் எவரும் பின்பற்றும் பெரிய நெறியாகிவிடும்; செல்லாத வார்த்தை செல்லும் - ஏற்றுக்கொள்ளத்தகாத சொற்களும் (பிறரால்) ஏற்றுக்கொள்ளப்படும்; பொருள் ஒரு துரும்பு - எப்

பொருளும் எளிதிற் கிடைக்கும்; மரியாதைஆம் - பிறர் போற்றுஞ் சிறப்புக்கிடைக்கும்; செல்வமோ புகல் பெருக்கு ஆறுபோல்ஆம் - செல்வமும் (பிறர்) புகழ்ந்துகூறும் (அளவில்) வெள்ளம் மிகுந்த ஆற்றைப்போல் (வடியாது) பெருகும்; புவியில் முன்கண்டு மதியாதபேர் பழகினவர்போலவே நேசம் ஆவர் - உலகில் தாம் வறியராயிருந்தபோது பார்த்து மதிப்புக்கொடாதவர்க ளெல்லோரும் (இப்போது) பழகியவர்போல நட்புக்கொள்வர்; சாதியில் பெருமையொடு உயர்ச்சிதரும் - சாதியிலும் மேன்மையும் உயர்வும் உண்டாகும்; அனுதினமும் பேரும் பிரதிட்டை உண்டாம் - எந்நாளும் புகழும் வரவேற்பும் கிடைக்கும்; பகையாளி கூட பிரியமொடு உறவாகுவான் - பகைவனும் அன்போடு நட்புக்கொண்டாடுவான்; பேச்சினில் பிழைவராது - பேசும்போது பிழையில்லாத பேச்சு வரும்; வரும் என நினைத்த பொருள் கைகூடிவரும் - வரவேண்டுமென்று எண்ணிய பொருள் தவறுமற் கிடைக்கும்; அதிக வல்லமைகள் மிகவும் உண்டாம் - எடுத்த தொழிலை முடிக்கும் பேராற்றல் மிகுதியாக உண்டாகும்.

(அருஞ்சொற்கள்) பிரதிட்டை (வட) - வரவேற்பு. பெருக்கு-வெள்ளம். திரு - செல்வம். செல்வத்தின் தெய்வம் - திருமகள்.

(கருத்து) திருமகளின் அருளால் யாவும் கிடைக்கும். (கூஎ)

கூஅ. நட்புநிலை

கதிரவன் உதிப்ப(து)எங் கேநளினம் எங்கே
　　களித்(து)உளம் மலர்ந்த(து)என் ன
கார்மேகம் எங்கே பசுந்தோகை எங்கே
　　கருத்தில்நட்(பு) ஆன(து)என் ன
மதியம்எங் கேபெருங் குமுதம்எங் கேமுகம்
　　மலர்ந்துமகிழ் கொண்ட(து)என் ன
வல்லிரவு விடிவ(து)எங் கேகோழி எங்கே
　　மகிழ்ந்துகூ விடுதல்என் ன

நிதியரசர் எங்கே யிருந்தாலும் அவர்களொடு
நேசம்ஒன் றாயிருக் கும்
நீதிமிகு நல்லோர்கள் எங்கிருந் தாலும்அவர்
நிறைபட்சம் மறவார்கள் காண்
மதிலுடன் கோபுரமும் வாவியும் புடைசூழ
மருவுசோ ணாட்(டு)அதி பனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மதிலுடன் கோபுரமும் வாவியும் புடைசூழ மருவு சோணாட்டு அதிபனே! - மதிலும் கோபுரமும் பொய்கையும் சூழ்ந்திருக்கும் சோழநாட்டுத் தலைவனே! மயிலேறி..........குமரேசனே! - , கதிரவன் உதிப்பது எங்கே? - ஞாயிறு காணப்படும் இடம் எங்கே? நளினம் எங்கே? - தாமரை யிருக்குமிடம் எங்கே? உளம் களித்து மலர்ந்தது என்ன? - மனமகிழ்ச்சியுடன் தாமரை ஏன் மலர்கிறது? கார்மேகம் எங்கே? - கரியமுகில் எங்கே உள்ளது? பசுந்தோகை எங்கே? - பச்சை மயில் எங்குள்ளது? கருத்தில் நட்பு ஆனது என்ன? - மனமுவந்து நட்புக்கொண்டது ஏன்? மதியம் எங்கே? - திங்கள் எங்கே உள்ளது? பெருங்குமுதம் எங்கே? - பெரிய அல்லி எங்கே உள்ளது? முகம்மலர்ந்து மகிழ்கொண்டது என்ன? - முக மலர்ச்சியுடனே இன்பமடைவது ஏன்? வல்இரவு விடிவது எங்கே? - கொடிய இராப்பொழுது நீங்குவது எப்படி? கோழி எங்கே? - சேவற்கோழியின் நிலைமை எப்படி? மகிழ்ந்து கூவிடுதல் என்ன? - சேவற்கோழி விடிவறிந்து எங்ஙனம் கூவுகிறது? நிதி அரசர் எங்கே இருந்தாலும் அவர்களொடு நேசம் ஒன்றாய் இருக்கும் - செல்வம்மிக்க அரசர்கள் எவ்வளவு தொலைவில் இருந்தாலும் அவர்களுடைய நட்பு மாறாமலேயிருக்கும்; நீதிமிகு நல்லோர்கள் எங்கு இருந்தாலும் அவர் நிறைபட்சம் மறவார்கள் - நெறியறிந்த நல்லோர்கள் எவ்வளவு தொலைவில் இருந்தாலும் அவர்களுக்குள் நிறைந்த அன்பை மறந்துவிடமாட்டார்கள்.

(அருஞ்சொற்கள்) காண் : முன்னிலையசைச்சொல். வாவி - குளம். சோறுடு : மரூஉ. நளினம் - தாமரை. தோகை - சினையாகுபெயர். மதியம் - திங்கள். குமுதம் - அல்லி.

(கருத்து) அன்புக்கு எல்லையில்லை. (௬அ)

௬௯. காலம் அறிதல்

காகம் பகற்காலம் வென்றிடும் கூகையை
 கனகமுடி அரசர்தா மும்
கருதுசய காலமது கண்(டு)அந்த வேளையில்
 காரியம் முடித்துவிடு வார்
மேகமும் பயிர்காலம் அதுகண்டு பயிர்விளைய
 மேன்மேலும் மாரிபொழி யும்
மிக்கான அறிவுளோர் வருதருண காலத்தில்
 மிடியாள ருக்(கு)உதவு வார்
நாகரிகம் உறுகுயில் வசந்தகா லத்திலே
 நலம்என்(று) உகந்துகூ வும்
நல்லோர் குறித்ததைப் பதறுமல் அந்தந்த
 நாளையில் முடிப்பர்கண் டாய்
வாகனைய காலைகல் மாலைபுல் எனும்உலக
 வாடிக்கை நிசம்அல்ல வோ
மயிலேறி விளையாடு குகனே புல் வயல்நீடு
 மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மயிலேறி...........குமரேசனே! -, காகம் கூகையைப் பகற்காலம் வென்றிடும் - காகம் கோட்டானைப் பகற்காலத்திலே வெல்லும்; கனகமுடி அரசர் தாமும் கருது சயகாலமது கண்டு அந்தவேளையில் காரியம் முடித்துவிடுவார் - பொன்முடி புனைந்த மன்னர்களும் அவ்வாறே தங்களுக்கு வெற்றியுண்டாகும் காலத்தை அறிந்து பகையை வென்றிகொள்வர்; மேகமும் கார்காலமது கண்டு பயிர் விளைய மேல்மேலும் மாரி பொழியும் - முகிலும் மழைக்

காலத்திலே பயிர்கள் விளைவதற்குத் தொடர்ச்சியாக மழை பெய்யும்; மிக்கான அறிவுளோர் மிடியாளருக்குத் தருணம் வருகாலத்தில் உதவுவார் - பேரறிவாளர் வறியருக்குக் காலம் அறிந்து பொருளுதவி செய்வார்; நாகரிகம் உறு குயில் வசந்தகாலத்திலே நலம் என்று உகந்து கூவும் - அழகிய குயில் வேனிற்காலமே நல்லதென்று விரும்பிக் கூவும்; நல்லோர் குறித்ததைப் பதறாமல் அந்த அந்த நாளையில் முடிப்பர் - நல்லறிவாளர் தாம் நினைத்ததை அமைதியாக அவ்வக்காலத்திலே நிறைவேற்றிக்கொள்வர்; வாகு அனைய காலை கல் - அழகிய இளமை (அறம்புரிய) உறுதியானதாகும்; மாலைபுல் - முதுமைப்பருவம் (அறம்புரிய) அற்பம் ஆனதாகும்; எனும் உலகவாடிக்கை நிசம் அல்லவோ? - என்று கூறும் உலகியல்மொழி உண்மையானதன்றோ?

(விளக்கவுரை) 'பகல்வெல்லும் கூகையைக் காக்கை; இகல் வெல்லும் - வேந்தர்க்கு வேண்டும்பொழுது' என்னுந் திருக்குறள் கருத்து இங்கே வந்துளது. வசந்தகாலம்: இளவேனில் முதுவேனில் எனப்படும் சித்திரை, வைகாசி, ஆனி, ஆடித்திங்கள்கள். 'காலை கல்; மாலை புல்' என்பது பழமொழி.

(கருத்து) காலமறிந்து தொழில்புரியவேண்டும். (சுக)

எ௦. இடம் அறிதல்

தரையதனில் ஓடுதேர் நீள்கடலில் ஓடுமோ
　　சலதிமிசை ஓடுகப் பல்
　தரைமீதில் ஓடுமோ தண்ணீரில் உறுமுதலை
　　தன்முன்னே கரிநிற் குமோ
விரைமலர் முடிப்பரமர் வேணிஅர விணைவெல்ல
　　மிகுகருட னல்ஆகு மோ
　வேங்கைகள் இருக்கின்ற காடுதனில் அஞ்சாமல்
　　வேறொருவர் செல்லவச மோ

துரைகளைப் பெரியோரை அண்டிவாழ் வோர்தமைத்
துட்டர்பகை என்னசெய் யும்
துணைகண்டு சேரிடம் அறிந்துசேர் என்(று)ஔவை
சொன்னகதை பொய் யல்லவே?
வரைஊதும் மாயனை அடுத்தலாற் பஞ்சவர்கள்
வன்போர் செயித்த(து)அன் றோ
மயிலேறி விளையாடு குகனே புல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மயிலேறி........குமரேசனே ! - , தரையதனில் ஓடுதேர் நீள்கடலில் ஓடுமோ? - நிலத்தில் ஓடும் தேர் நீண்ட கடலில் ஓடுமோ? சலதிமிசை ஓடு கப்பல் தரை மீதில் ஓடுமோ? - கடலில் ஓடும் கப்பல் நிலத்தின்மேல் ஓடுமோ? தண்ணீரில் உறும் முதலைதன் முன்னே கரி நிற்குமோ? - நீரில் வசிக்கும் முதலைக்கெதிராக (நிலத்தில் வசிக்கும்) யானை நிற்குமோ? விரைமலர் முடிப்பரமர் வேணி அரவினை வெல்ல மிகு கருடனால் ஆகுமோ? - மண மிக்க மலரணிந்த சிவனார் திருமுடியிலுள்ள பாம்பினை வெல்ல வலிமைமிக்க கருடனால் இயலுமோ? வேங்கைகள் இருக்கின்ற காடுதனில் வேறொருவர் அஞ்சாமற் செல்ல வசமோ? - வேங்கைகள் வசிக்கும் காட்டிலே எவரேனும் அச்சமின்றிச் செல்லமுடியுமோ? துரைகளைப் பெரியோரை அண்டி வாழ்வோர்தமைத் துஷ்டர்பகை என்ன செய்யும்? - தலைவர்களையும் பெரியோர்களையும் அடைந்து வாழ்கின்றவர்களைக் கொடியவர் பகைமை என்ன செய்து விடும்? வரை ஊதும் மாயனை அடுத்தலால் அன்றோ பஞ்சவர்கள் வன்போர் செயித்தது? - மூங்கிற்குழலை ஊதும் கண்ணபிரானைச் சார்ந்ததால் அல்லவோ பாண்டவர்கள் தங்களுடைய கொடிய போரை வென்றனர்? துணைகண்டு சேர்இடம் அறிந்துசேர் என்று ஔவை சொன்னகதை பொய்யல்லவே? - நல்ல துணையைக் கண்டுபிடித்துச் சேரத் தக்க இடம் அறிந்து நட்புக்கொள் என்று ஔவை கூறிய கதை பொய்யா?

(அருஞ்சொற்கள்) சலதி (வட) - கடல். கரி - யானை. விரை - மணம். வேணி - சடை. வரை - மூங்கில். மூங்கிலாற் குழல் செய்தால் வேய்ங்குழல் எனப்படும்.

(கருத்து) அவரவர்க்கு ஏற்ற இடத்திலிருப்பதே நல்லது. (எ0)

எக. யாக்கை நிலையாமை

மனுநல்மாந் தாதாமுன் ஆனவர்கள் எல்லோரும்
  மண்மேல் இருந்துவாழ்ந் து
மடியா(து) இருந்தபேர் இல்லைஅவர் தேடியதை
  வாரிவைத் தவரும்இல் லை
பணியதனை நம்பியே ஏர்பூட்டு கதையெனப்
  பாழான உடலைநம் பிப்
பார்மீதில் இன்னும்வெகு நாளிருப் போம்என்று
  பல்கோடி நினைவையெண் ணி
அனிதமாய் விருதாவில் மாய்வதே அல்லாமல்
  அன்பாக நின்பதத் தை
அர்ச்சித்து முத்திபெறல் வேண்டுமென்(று) எண்ணூர்
  ஆசைவலை யிற்சுழலு வார் [கள்
வனிதையர்கள் காமவி காரமே பகையாகும்
  மற்றும்ஒரு பகையும்உண் டோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
  மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மயிலேறி........குமரேசனே! - , மனுநல் மாந்தாதா முன் ஆனவர்கள் எல்லாரும் - மனு என்னும் அரசனும் நற்குணமுடைய மாந்தாதா முதலான யாவர்களினும், மண்மேல் இருந்து வாழ்ந்தும் மடியாதிருந்தபேர் இல்லை - மண்ணுலகில் நீண்டநாள் இருந்து வாழ்ந்தாலும் இறவாமல் இருந்தவர்கள் இல்லை; தேடியதை வாரிவைத்தவரும் இல்லை - (சிறிது சிறிதாக) சேர்த்தபொருளைத் (தம்முடன் எடுத்துச்செல்ல) அள்ளிவைத்தவர்களும் இல்லை;

பனியதனை நம்பியே ஏர்பூட்டு கதையென - பனி பெய்த தால் ஈரமிருக்கும் என்று நம்பிக்கைவைத்து ஏரைப்பூட்டும் அறிவின்மைபோல, பாழான உடலை நம்பி - அழியும் உடலை (நிலையானது என்று) நம்பிக்கைகொண்டு, பார்மீதில் இன்னும் வெகுநாள் இருப்போம் என்று - உலகிலே மேலும் நீண்டகாலம் வாழ்வோம் என, பல்கோடி நினைவை எண்ணி - பல கோடிக்கணக்கான நினைவுகொண்டு, அனிதமாய் விருதாவில் மாய்வதே அல்லாமல் - நெறிகெட்டு வீணில் இறப்பதே அன்றி, அன்பாக நின்பதத்தை அர்ச்சித்து - அன்புடன் உன் திருவடியில் மலரிட்டு, முத்தி பெறல்வேண்டும் என்று எண்ணார்கள் - வீடு அடைய வேண்டும் என நினையார்கள்; ஆசைவலையில் சுழலுவார் - ஆசையாகிய வலையில் அகப்பட்டுத் திகைப்பார்கள்; வனிதையர்கள் காமவிகாரமே பகையாகும் - (அவர்களுக்குப்) பெண்களைக் காமநோக்குடன் பார்ப்பதே கெடுதிதரும்; மற்றும் ஒரு பகைமை உண்டோ? - வேறொரு பகை இல்லை.

(விளக்கவுரை) மனு : மனிதர்களின் முதல் தந்தை. மாந்தாதா : ஒரு சிறந்த அரசன்.

(கருத்து) உடலுள்ளபோதே அறம்புரிந்து நன்மையடைய வேண்டும். (எக)

எஉ. வேட்டகநிலை

வேட்டகந் தன்னிலே மருகன்வந் திடுமளவில்
மேன்மேலும் உபசரித் து
விருந்துகள் சமைத்துநெய் பால்தயிர் பதார்த்தவகை
வேண்டுவ எலாமமைப் பார்
ஊட்டம்மிகு வர்க்கவகை செய்திடுவர் தைலம்இட்(டு)
உறுதியாய் முழுகுவிப் பார்
ஓயாது தின்னவே பாக்(கு)இலை கொடுத்திடுவர்
உற்றநாள் நாலாகி லோ

நாட்டம்ஒரு படியிறங் குவதுபோல் மரியாதை
 நாளுக்கு நாள்குறைவு றும்
நகைசெய்வர் மைத்துனர்கள் அலுவல்பார் போஎன்று
 நாணுமல் மாமிசொல் வாள்
வாட்டமனை யாளொரு துரும்பாய் மதிப்பள்அவன்
 மட்டியிலும் மட்டிஅன் றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
 மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மயிலேறி........குமரேசனே! - , வேட்ட அகம் தன்னிலே மருகன் வந்திடும் அளவில் - மனைவியின் தந்தை வீட்டில் மருமகன் வந்தவுடன், மேன்மேலும் உபசரித்து - மேலும் மேலும் ஆதரவுகாட்டி, விருந்துகள் சமைத்து - புதிய உணவுகளைச் சமைத்து, நெய்பால் தயிர் பதார்த்தவகை வேண்டுவ எலாம் அமைப்பார் - நெய்யும் பாலும் தயிரும் கறிவகைகளுமாக விரும்பியவற்றையெல் லாம் செய்துவைப்பார்கள்; ஊட்டம்மிகு வர்க்கவகை செய்து இடுவர் - உடலுக்கு வலிமைதரும் சிற்றுண்டி வகைகளைச் சமைத்துக்கொடுப்பார்கள்; தைலம் இட்டு உறுதியாய் முழுகுவிப்பார் - எண்ணெய் தேய்ப்பித்து நலம் பெற நீராட்டுவார்கள்; ஓயாது தின்னவே பாக்கு இலை கொடுத்திடுவர் - தின்பதற்குத் தொடர்ச்சியாக வெற்றிலை யும் பாக்கும் அளிப்பார்கள்; உற்றநாள் நாலாகிலோ - (அங்குத்) தங்கிய நாட்கள் நான்கு ஆகிவிட்டால், நாட்டம் ஒருபடி இறங்குவதுபோல் நாளுக்குநாள் மரியாதை குறை வுறும் - அவனுக்குச்செய்யும் ஆதரவு ஒவ்வொரு வகையாகக் குறைவது போல மதிப்பும் ஒவ்வொரு நாளாகக் குறைவு அடையும்; மைத்துனர்கள் நகைசெய்வர் - மைத்துனர்க ளெல்லோரும் இகழ்ந்துபேசுவர்; மாமி அலுவல் பார் போ என்று நாணுமல் சொல்வாள் - மனைவியின் தாய் சென்று ஏதாவது வேலைசெய் என்று (முன் இருந்த) வெட்கம் இல்லாமல் விளம்புவாள்; வாட்டம் மனையாள் ஒரு துரும் பாய் மதிப்பள் - வாடிய மனைவியும் அவனை ஒரு துரும்பு

போல நினைப்பள்; அவன் மட்டியிலும் மட்டி அன்றோ-? (ஆகையால்) அவன் பேதையிலும் பேதை அல்லனோ?

(அருஞ்சொற்கள்) வேட்டல் - விரும்புதல்; மணம்புரிதல். உறுதி - நன்மை; திண்மையும்ஆம்.

(கருத்து) 'விருந்தும் மருந்தும் மூன்றுநாள்.' (எ௨)

எ௩. செல்வம் நிலையாமை

ஓடமிடும் இடமது மணல்சுடும் சுடும்இடமும்
ஓடம்மிக வேநடக் கும்
உற்றதோர் ஆற்றின்நடு மேடாகும் மேடெலாம்
உறுபுனல்கொள் மடுவா யிடும்
நாடுகா டாகும்உயர் காடுநா டாகிவிடும்
நவில்சகடு மேல்கீ ழதாய்
நடையுறும் சந்தைபல கூடும்உட னேகலையும்
நல்நிலவும் இருளாய் விடும்
நீடுபகல் போயபின் இரவாகும் இரவுபோய்
நிறைபகற் போதாய் விடும்
நிதியோர் மிடித்திடுவர் மிடியோர் செழித்திடுவர்
நிசமல்ல வாழ்வுகண் டாய்
மாடுமனை பாரிசனம் மக்கள்நிதி பூடணமும்
மருவுகன வாகும்அன் றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மயிலேறி............குமரேசனே! - , ஓடம் இடும் இடமது மணல் சுடும் - ஓடத்தை வைத்திருக்கும் (நீர்நிறைந்த பள்ளமான) இடம் (நீர்வற்றி) மணல் சுடும்படி (மேடாக) மாறும்; சுடும் இடமும் ஓடம் மிக நடக்கும் - (மேடாகிய) மணல் சுடும்படியான இடமும் (பள்ளமாகி நீர் நிறைவாய்) ஓடம் மிகுதியாக ஓடும்; உற்றது ஓர் ஆற்றின் மடு மேடாகும் - நீருள்ள ஓராற்றின் பள்ளம் மேடாக

மாறும்; மேடு எலாம் உறுபுனல்கொள் மடுஆயிடும் - மேடுகள் யாவும் மிகுதியான நீரைக்கொண்ட மடுவாக மாறிவிடும்; நாடு காடாகும் - (மக்களிருக்கும்) நாடு (விலங்குகள் வாழும்) காடாகும்; உயர்காடு நாடு ஆகிவிடும் - (மரங்கள்) உயர்ந்த காடு (மக்களிருக்கும்) நாடாக மாறிவிடும்; நவில் சகடு மேல்கீழதாய் நடையுறும் - சொல்லப்படும் (வண்டியின்) ஆழி மேலுங்கீழுமாக மாறிமாறிச் சுற்றிக்கொண்டு செல்லும்; பலசந்தை கூடும் உடனே கலையும் - பலவகைச் சந்தைகளும் கூடுவதும் கலைவதுமாகவே இருக்கும்; நல் நிலவும் இருளாய்விடும் - நல்ல நிலவின் ஒளியும் (மாறி) இருளாகிவிடும்; நீடுபகல் போயபின் இரவாகும் - பெரிய பகல் கழிந்து இரவுவரும்; இரவுபோய் நிறைபகற் போதாய் விடும் - இரவுநீங்கி ஒளிநிறைந்த பகற்காலம் வந்துவிடும்; நிதியோர் மிடித்திடுவர் - செல்வர் வறியராவர்; மிடியோர் செழித்திடுவர் - வறியோர் செல்வராவர்; வாழ்வு நிசம் அல்ல - (ஆகையால்) வாழ்க்கை நிலையானதன்று; மாடு மனை பாரி சனம் மக்கள் நிதி பூடணமும் மருவுகனவு ஆகும் அன்றோ? - ஆநிரையும், வீடும், மனைவியும், உறவினரும், மக்களும், செல்வமும், அணிகலன்களும் கனவைப்போலவே மாறிவிடும் அன்றோ?

(அருஞ்சொற்கள்) உறுபுனல் - மிகுதியான நீர். மிடி - வறுமை. பாரி (வட) - மனைவி. பூடணம் (வட) - அணிகலன்.

(கருத்து) செல்வம் நிலையற்றது. ஆகையால், அது உள்ள போதே அறம்பல புரிக. (எங)

எச. பிறந்தோர் பெறவேண்டிய பேறு

சடம்ஒன்(று) எடுத்தால் புவிக்குநல் லவனென்று
தன்பேர்வி ளங்கவேண் டும்
சதிருடன் இதல்லாது மெய்ஞ்ஞானி என்றுஅவ
தரிக்கவே வேண்டும்அல் லால்
திடம்இனிய ரணசூர வீரன்இவன் என்னவே
திசைமெச்ச வேண்டும்அல் லால்

தேகியென வருபவர்க்(கு) இல்லையென் னுமலே
செய்யவே வேண்டும்அல் லால்
அடைவுடன் பலகல்வி ஆராய்ந்து வித்துவான்
ஆகவே வேண்டும்அல் லால்
அறிவினுல் துரைமக்கள் ஆகவர வேண்டும்இவர்
அதிகபூ பாலர்ஐ யா
வடகுவடு கிடுகி(டு)என எழுகடலும் அலையெறிய
மணிஉரகன் முடிகள்நெரி ய
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) வடகுவடு கிடுகிடு என - வடக்கிலுள்ள இமயமலை அதிரவும், எழுகடலும் அலையெறிய - எழுகடல்களும் பொங்கி அலைமோதவும், உரகன் மணிமுடிகள் நெரிய - ஆதிசேடனின் மாணிக்கமுடிகள் நெரியவும், மயிலேறி........குமரேசனே ! - , ஐயா - ஐயனே ! சடம் ஒன்று எடுத்தால் - ஒருடல் எடுத்தால், புவிக்கு நல்லவன் என்று தன்பேர் விளங்கல்வேண்டும் - உலகிற்கு நல்லவன் எனத் தன் பெயர் விளக்கமுறுதல் வேண்டும்; இது அல்லாது சதிருடன் மெய்ஞ்ஞானி என்று அவதரிக்க வேண்டும் - இது அன்றேல் திறமையுடன் உண்மையான அறிவாளி என்று தோற்றம் உறல்வேண்டும்; அல்லால் - அன்றேல், திடம் இனிய ரணசூரவீரன் இவன் என்னவே திசைமெச்சவேண்டும் - வலிமைமிக்கவனுகிப் போர்க்களத்திலே அச்சமுண்டாக்குபவனும் அஞ்சாமையுள்ளவனும் இவன் என்னும்படி திக்கெலாம் புகழப்படல்வேண்டும்; அல்லால் - அன்றேல், தேகி என வருபவர்க்கு இல்லையென்னுமலே செய்யவேவேண்டும் - ஈ என்று வந்து இரப்பவர்க்கு இல்லையென்னுமற் கொடுத்திடல்வேண்டும்; அல்லால் - அன்றேல், அடைவுடன் பலகல்வி ஆராய்ந்து வித்துவான் ஆகவே வேண்டும்-ஒழுங்காகப் பல கலைகளையும் ஆராய்ச்சி செய்து புலவனுகவேண்டும்; அல்லால் - அன்றேல், அறிவினுல் துரைமக்கள் ஆகவரவேண்டும் - அறிவின் திறமை

யால் தலைவர்களாக வருதல்வேண்டும்; இவர் அதிக பூபாலர்-இத்தகையோர் சிறந்த உலகமுதல்வர் ஆவர்.

(விளக்கவுரை) உரகன் - பாம்பு; இங்கு ஆதிசேடன் என்னும் பாம்பைக் குறிக்கிறது. ஆதிசேடன் தன் மணிமுடியிலே உலகைத் தாங்குகிறான் என்று கூறுவது புராண வழக்கு. சதிர் - திறமை. இரணம் (வட) - புண்; இங்குப் போர்செய்யும் இடத்தைக் குறிக்கிறது. சூர் - அச்சம். போர் செய்யும்போது கண்டோர் அஞ்சும் நிலையிலே காணப்படுவோன் சூரன். வீரம் - அஞ்சாமை. தேகி (வட) - கொடு. தியாகம் - கொடுத்தல். துரை - தலைவன்.

(கருத்து) உலகிற் புகழ்பெற ஏதாயினும் ஒரு நெறியிலே சிறப்புறுதலே மக்கட்பிறவியின் பயன். (எச)

எரு. வேசையர்

தேடித்தம் வீட்டிற் பணக்காரர் வந்திடின்
தேகசீ வன்போல வே
சிநேகித்த உம்மையொரு பொழுதுகா ணுவிடின்
செல்லுறு(து) அன்னம்என் றே
கூடிச் சுகிப்பர்என் ஆசைஉன் மேல்என்று
கூசாமல் ஆணையிடு வார்
கொங்கையை வெடிக்கப் பிடிக்கக் கொடுத்(து)இதழ்
கொடுப்பர்சும் பனம்உகப் பர்
வேடிக்கை பேசியே கைம்முதல் பறித்தபின்
வேறுபட நிந்தைசெய் து
விடவிடப் பேசுவர் தாய்கலகம் மூட்டியே
விட்டுத் துரத்திவிடு வார்
வாடிக்கை யாய்இந்த வண்டப் பரத்தையர்
மயக்கத்தை நம்பலா மோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மயிலேறி........குமரேசனே! - , தம் வீட்டில் பணக்காரர் தேடிவந்திடின் - தம் வீட்டினைத்தேடிச்

செல்வர்கள் வந்தால், தேகசீவன்போலவே சிநேகித்த உம்மை - உடலும் உயிரும்போல நட்புக்கொண்ட தங்களை, ஒருபொழுது காணுவிடின் அன்னம் செல்லுறுது - ஒரு வேளை பாராவிடின் உணவு ஏற்றுக்கொள்வதில்லை; என்றே - எனவேகூறி, கூடிச்சுகிப்பர் - கலந்து மகிழ்வர்; என் ஆசை உன்மேல் என்று கூசாமல் ஆணையிடுவர் - என் காதல் உனக்கே என்று மனங்கூசாமற் பொய்யாணையிடுவார்கள்; கொங்கையை வெடிக்கப் பிடிக்கக்கொடுத்திடுவர் - மார்பைத்திறந்து பற்றும்படி கொடுப்பார்கள்; இதழ் கொடுப்பர் - இதழ் பருக அளிப்பர்; சும்பனம் உகப்பர் - சும்பனம் என்னும் கரணத்தை விரும்பிச்செய்வர்; வேடிக்கைபேசியே கைமுதல் பறித்தபின் - இனிமையாகப்பேசிக் கையிலுள்ள செல்வத்தைப்பற்றிய பிறகு, வேறுபட நிந்தைசெய்து - மனம்வெறுக்கப் பழித்து, விடவிடப் பேசுவர் - மாறிமாறித் தூற்றுவர்; தாய் கலகம் மூட்டியேவிட்டுத் துரத்திவிடுவார் - தாய்க்கிழவியைக்கொண்டு கலகம் உண்டாக்கி வீட்டை விட்டுத் துரத்துவார்கள்; இந்த வண்டப் பரத்தையர் மயக்கத்தை வாடிக்கையாய் நம்பலாமோ? - இந்த இழிந்த வேசையரின் மயக்கந்தரும் காமச்செயல்களை வழக்கமாக நிலையென நம்பல்கூடுமோ?

(கருத்து) காதலை விரும்பாமற் பணத்தை விரும்பும் வேசையரின் நட்பு வேண்டாம். (எ௫)

எ௬. உறுதி

கைக்குறுதி வேல்வில் மனைக்குறுதி மனையாள்
கவிக்குறுதி பொருளடக் கம்
கன்னியர் தமக்குறுதி கற்புடைமை சொற்குறுதி
கண்டிடில் சத்யவச னம்
மெய்க்குறுதி முன்பின் சபைக்குறுதி வித்வசனம்
வேசையர்க் குறுதிதே டல்
விரகருக் குறுதிபெண் மூப்பினுக் குறுதிஊண்
வீரருக் குறுதிநீ ரம்

செய்க்குறுதி நீர்அரும் பார்க்குறுதி செங்கோல்
செழும்படைக் குறுதிவே ழம்
செல்வந் தனக்குறுதி பிள்ளைகள் நகர்க்குறுதி
சேர்ந்திடும் சர்ச்சனர்க ளாம்
மைக்குறுதி யாகிய விழிக்குற மடந்தைசுர
மங்கைமரு வுந்தலைவ னே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மைக்கு உறுதியாகிய விழி குறமடந்தை, சுரமங்கை மருவும் தலைவனே! - மைக்கு அழகுசெய்யும் விழிகளையுடைய குறமங்கை (வள்ளியம்மை)யும், தேவயானையும் விரும்பும் மணவாளனே! மயிலேறி........குமரேசனே! - , கைக்கு உறுதி வேல் வில் - (வீரன்) கையில் நலந்தருவன வேலும் வில்லும்; மனைக்கு உறுதி மனையாள் - இல்லத்திற்கு நலந்தருபவள் இல்லாள்; கவிக்கு உறுதி பொருள் அடக்கம் - செய்யுளுக்கு நலந்தருவது பொருளிருத்தல்; கன்னியர் தமக்கு உறுதி கற்பு உடைமை - பெண்களுக்கு நன்மை கற்புடன் இருத்தல்; சொற்கு உறுதி கண்டிடில் சத்தியவசனம் - சொல்லுக்கு நன்மையை ஆராய்ந்தால் உண்மை கூறுதல்; மெய்க்கு உறுதி முன்பின் - உடம்புக்கு நலந்தருவோர் தமயனுந் தம்பியும்; சபைக்கு உறுதி வித்வசனம் - அவைக்களத்திற்கு நன்மை புலவர் பெருமக்களிருத்தல்; வேசையர்க்கு உறுதி தேடல் - பரத்தைகளுக்கு நன்மை பொருளீட்டல்; விரகருக்கு உறுதி பெண் - காமுகர்க்கு நலம் பெண்கள்; மூப்பினுக்கு உறுதி ஊண் - முதுமைக்கு நலம் உணவு; வீரருக்கு உறுதி தீரம் - வீரர்க்கு நலம் அஞ்சாமை; செய்க்கு உறுதி நீர் - நிலத்திற்கு நலம் நீர்; அரும்பார்க்கு உறுதி செங்கோல் - அரிய உலகிற்கு நன்மை நல்ல ஆட்சி; செழும் படைக்கு உறுதி வேழம் - வளமிக்க படைக்கு நன்மை யானைப்படை; செல்வம் தனக்கு உறுதி பிள்ளைகள் - செல்வத்திற்கு நன்மை பிள்ளைகள்; நகர்க்கு உறுதி சேர்ந்திடும் சத்சனர்கள் ஆம் - நகரத்திற்கு நன்மை அங்குவாழும் நல்லோர்களாகும்.

(அருஞ்சொற்கள்) சத்தியம் (வட) - உண்மை. வித்வசனம் (வட) - புலவர் பெருமக்கள். உறுதி - நன்மை (உறுவது என்று பொருள்). சத்சனர் (வட) - நல்லோர்.

(கருத்து) வேல் முதலியவைகளாற் கை முதலியவை நன்மையடையும். (எசு)

எஎ. வறுமை

வறுமைதான் வந்திடின் தாய்பழுது சொல்லுவாள்
மனையாட்டி சற்றும்எண் ணாள்
வாக்கிற் பிறக்கின்ற சொல்லெலாம் பொல்லாத
வசனமாய் வந்துவிளை யும்
சிறுமையொடு தொலையா விசாரமே அல்லாது
சிந்தையில் தைரிய மில்லை
செய்யசபை தன்னிலே சென்றுவர வெட்கம்ஆம்
செல்வரைக் காணில்நா ணும்
உறுதிபெறு வீரமும் குன்றிடும் விருந்துவரின்
உயிருடன் செத்தபிண மாம்
உலகம் பழித்திடும் பெருமையோர் முன்புசென்(று)
ஒருவரொடு செய்திசொன் னல்
மறுவசன முஞ்சொலார் துன்பினில் துன்பம்இது
வந்(து)அணுகி டா(து)அருளு வாய்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மயிலேறி........குமரேசனே! - , வறுமைதான் வந்திடில் - (ஒருவனுக்கு) வறுமைவந்தால், தாய் பழுது சொல்லுவாள் - அன்னையும் குற்றங்கூறுவாள்; மனையாட்டி சற்றும் எண்ணாள் - இல்லாளும் சிறிதும் மதியாள்; வாக்கில் பிறக்கின்ற சொல் எலாம் பொல்லாத வசனமாய் வந்து விளையும் - வாயிலிருந்துவரும் மொழிகள் எல்லாம் தீயமொழிகளாக மாறிவிடும்; சிறுமையொடு தொலையா

விசாரமே அல்லாது - இழிவும் நீங்காத கவலையுமே அன்றி, சிந்தையில் தைரியம் இல்லை - உள்ளத்தில் வீரம் இராது; செய்ய சபைதன்னிலே சென்றுவர வெட்கம்ஆம் - நல்ல சபையிலே போய்வர நாணமுண்டாகும்; செல்வரைக் காணில் நாணும் - பணமுடையோரைக் கண்டால் உள்ளம் வெட்கமடையும்; உறுதிபெறு வீரமும் குன்றிடும் - நன்மை தரும் வீரமும் குறைந்துவிடும்; விருந்துவரின் உயிருடன் செத்த பிணம்ஆம் - விருந்தினர் வந்தால் உயிருடன் இறந்த பிணமாகநேரும்; உலகம் பழித்திடும் - உலகத்தார் இகழ்வர்; பெருமையோர் முன்புசென்று ஒருவரொடு செய்தி சொன்னால் மறுவசனமும் சொல்லார் - பெருமையுடையோர் எதிரிற்போய் ஒருவருடைய செய்தியைக்கூறினால் மறுமொழியும் விளம்பார்; துன்பினில் துன்பம் இதுவந்து அணுகிடாது அருளுவாய் - துன்பத்திலே துன்பமான இவ் வறுமை (ஒருவருக்கும்) வந்துசேராமல் அருள்செய்வாய்.

(கருத்து) வறியார் இவ்வுலகில் எவ்வகையினும் இன்பம் அடையார். (எஎ)

எஅ. தீய சார்பு

ஆனைதண் ணீரில்நிழல் பார்த்திடத் தவளைசெ(ன்)று
 அங்கே கலக்கிஉல வும்
ஆயிரம் பேர்கூடி வீடுகட் டிடில்ஏதம்
 அறைகுறளும் உடனே வரும்
ஏனைநற் பெரியோர்கள் போசனம் செயுமளவில்
 ஈக்கிடந்(து) இசைகேட தாம்
இன்பம்மிகு பசுவிலே கன்றுசெ(ன்)று ஊட்டுதற்(கு)
 இனியகோன் அதுதடுக் கும்
சேனைமன் னவர்என்ன கருமம்நிய மிக்கினும்
 சிறியோர்க ளாற்குறை படும்
சிங்கத்தை யும்பெரிய இடபத்தை யும்பகைமை
 செய்த(து)ஒரு நரியல் லவோ

மானையும் திகழ்தெய்வ யானையும் தழுவும்மணி
மார்பனே அருளா ளனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மானையும் திகழ் தெய்வயானையும் தழுவும் மணிமார்பனே! - மான்மகளையும் தெய்வயானையையும் தழுவுகின்ற அழகிய மார்பனே! அருளாளனே! - அருளுடையவனே! மயிலேறி...........குமரேசனே! -, ஆனை தண்ணீரில் நிழல்பார்த்திடத் தவளை சென்று அங்கே கலக்கி உலவும் - யானை தண்ணீரில் தன் நிழலைப் பார்க்கும் போது தவளை அங்கேபோய்க் கலக்கி (நிழலைப் பார்க்கமுடியாமல்) திரியும்; ஆயிரம்பேர்கூடி வீடு கட்டிடில் ஏதம் அறைகுறளும் உடனேவரும் - பலர்கூடி வீடு கட்டினால் அதற்குக் குறைசொல்கின்ற கோளனும் அங்கு விரைந்து வருவான்; ஏனை நல்பெரியோர்கள் போசனம் செயும் அளவில் ஈகிடந்து இசைகேடதுஆம் - மற்றும், நற்குணம் உடைய பெரியோர்கள் அமர்ந்து உணவுகொள்ளும்போது (அவ்வுணவில்) ஈயிறந்துகிடந்து (உணவின்) இனிமையை ஒழித்துவிடும்; இன்பம்மிகு பசுவிலே கன்று சென்று ஊட்டுதற்கு இனியகோன் அது தடுக்கும் - இன்பந்தரும் பசுவினிடத்திலே கன்று சென்று ஊட்டமுடியாமல் (அக் கன்றுக்கு) இனியவனான இடையனே அதனைத் தடுப்பான்; சேனை மன்னவர் என்ன கருமம் நியமிக்கினும் சிறியோர்களால் குறைபடும் - படையையுடைய அரசர்கள் எத் தொழிலைச்செய்ய ஆணையிடினும் அற்பர்களான வேலைக் காரர்களால் அது இழிவடையும்; சிங்கத்தையும் பெரிய இடபத்தையும் பகைமை செய்தது ஒருநரி அல்லவோ? - சிங்கத்திற்கும் பேரெருது ஒன்றிற்கும் பகையை உண்டாக் கியது ஒருசிறு நரிதானே?

(விளக்கவுரை) 'ஆயிரம்பேர்' என்பது எண்ணிக்கை காட்டியதன்று; 'பலர்' என்பதற்குக் காட்டப்பட்ட மொழி. 'கட்டின வீட்டிற்குக் குற்றஞ்சொல்வோரும் ஆக்கின சோற்றுக்குப் பதஞ்சொல்வோரும் பலர்' என்பது உலகியல்.

'சிங்கமும் எருதும் நட்பாக இருந்தன. ஒருநரி சிங்கத்தினிடம் வீண்பழி சொல்லி நட்பைக்கெடுத்து எருதைக் கொன்றுவிடச் செய்தது'—என பஞ்சதந்திரக்கதை கூறும்.

(கருத்து) தீயவர் சேர்க்கையால் எக்காரியமும் கெடும். (எஅ)

எகூ. இடுக்கண் வரினும் பயன்படுபவை

ஆறுதண் ணீர்வற்றி விட்டாலும் ஊற்றுநீர்
அமுதபா னம்கொடுக் கும்
ஆதவனை ஒருபாதி கட்செவி மறைத்தாலும்
அப்போதும் உதவிசெய் வன்
கூறும்மதி தேய்பிறைய தாகவே குறையினும்
குவலயத்(து) இருள்சிதைக் கும்
கொல்லைதான் சாவிபோய் விட்டாலும் அங்குவரு
குருவிக்கு மேய்ச்சலுண் டு
வீறுடன் உதாரிதான் மிடியான போதினிலும்
மிகநாடி வருபவர்க் கு
வேறுவகை இல்லையென்(று) உரையா(து) இயன்றன
வியந்(து)உளம் மகிழ்ந்துதவு வான்
மாறுபடு சூரசங் காரகம் பீரனே
வடிவேல் அணிந்தமுரு கா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மாறுபடு சூரசங்கார கம்பீரனே - பகைத்த சூரனைக்கொன்ற வீரனே! வடிவேல் அணிந்த முருகா - கூரியவேலை யேந்திய முருகனே! மயிலேறி........குமரே சனே! - , தண்ணீர் வற்றிவிட்டாலும் ஆறு ஊற்றுநீர் அமுதபானம் கொடுக்கும் - தண்ணீர் வறண்டுபோயினும் ஆறு தன் ஊற்றினாலே இனிய குடிநீரைத்தரும்; ஆதவனை ஒருபாதி கட்செவி மறைத்தாலும் அப்போதும் உதவி செய்வன் - கதிரவனுடைய அரைப்பகுதியைப் பாம்பு

மறைத்தாலும் அந்நிலையிலும் கதிரவன் ஒளிதருவான்; கூறும் மதி தேய்பிறையதாகவே குறையினும் குவலயத்து இருள் சிதைக்கும் - சொல்லப்பட்ட திங்கள் தேய்பிறையாகக் குறைந்தாலும் உலகிலுள்ள இருளை ஓட்டும்; கொல்லை தான் சாவிபோய்விட்டாலும் அங்குவரு குருவிக்கு மேய்ச்சல் உண்டு - புன்செய்நிலம் விளைவின்றிப் பட்டுப்போனாலும் அந்நிலத்திற்குவரும் குருவிகளுக்குத் தீனி கிடைக்கும்; வீறுடன் உதாரிதான் மிடியானபோதினிலும் - சிறப்புடன் கொடுப்போன் வறுமையுற்றாலும், மிகநாடி வருபவர்க்கு - சாலவுந் தேடிவருவோர்களுக்கு, இல்லையென்று உரையாது வேறுவகை இயன்றன வியந்து உளம்மகிழ்ந்து உதவுவான் - இல்லையென்று கூறாமல் வேறுவகையிலே முடிந்த பொருள்களை வியப்புறும்படி மனங்களித்துக் கொடுப்பான்.

(விளக்கவுரை) ஞாயிற்றை இராகு எனும் பாம்பு மறைப்பதாகக் கூறுவது புராணக்கதை. கட்செவி - பாம்பு (கண்ணே செவியாகவுடையது). கொல்லை என்பது முல்லைநிலம்; இக்காலத்திற் புன்செய் என்கிறோம். காடும் காடுசார்ந்த இடமும் முல்லை. உதாரி (வட) - கொடையாளி. உதாரம் - கொடை. மிடி - வறுமை. 'வியந்து' என்பதற்கு 'வியக்க' எனப் பொருள் கூறல்வேண்டும். கம்பீரம் (வட) - வீரத்தோற்றம். 'இலன் என்னும் எவ்வம் உரையாமை யீதல் - குலனுடையான் கண்ணேயுள'—என்பது குறள்.

(கருத்து) கொடைப்பண்புடையோர் தம் உயிரையும் ஈவரே ஒழிய இல்லையென்று இயம்பார். (எக)

அ0. இவர்க்கு இது இல்லை!

சார்(பு)இலா தவருக்கு நிலையேது முதலிலா
தவருக்(கு) இலாபமே து
தயையிலா தவர்தமக்(கு) உறவேது பணமிலா
தார்க்(கு)ஏது வேசை உறவு
ஊர்இலா தவர்தமக்(கு) அர(சு)ஏது பசிவேளை
உண்டிடார்க்(கு) உறுதிநிலை யே(து)
உண்மையில் லாதவர்க்(கு) அறமேது முயல்
உறுவதொரு செல்வமே து [விலார்க்(கு)

சோர்(வு)இலா தவருக்கு மற்றும்ஒரு பயம்ஏது
 சுகம்இலார்க்(கு) ஆசையே து
துர்க்குணம் இலாதவர்க்(கு) எதிராளி யே(து)இடர்
 துட்டர்க்(கு) இரக்கமே து [செய்
மார்புருவ வாலிமேல் அத்திரம் விடுத்தநெடு
 மால்மருக னுமுரு கா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
 மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) வாலிமேல் மார்பு உருவ அத்திரம் விடுத்த நெடுமால் மருகனுை முருகா - வாலியின் மார்பில் உருவும்படி அம்புவிடுத்த நீண்ட உருவமுடைய திருமாலின் மருகனாகிய முருகனே! மயிலேறி........குமரேசனே! -, சார்பு இலாதவருக்கு நிலை ஏது? - ஆதரவு இல்லாதவர்க்கு நிலையான இடம் இல்லை; முதல் இலாதவருக்கு இலாபம் ஏது - முதற்பொருள் வையாதவர்கட்கு ஊதியம் இல்லை; தயை இலாதவர் தமக்கு உறவு ஏது - இரக்கம் இல்லாதவர்கட்கு உறவினர் இல்லை; பணம் இலாதார்க்கு வேசை உறவு ஏது - பொருள் இல்லாதவர்கட்குப் பரத்தையரின் நட்பு இல்லை; ஊர் இலாதவர் தமக்கு அரசு ஏது - நகரம் இல்லாதவர்கட்கு ஆட்சியில்லை; பசிவேளை உண்டிடார்க்கு உறுதிநிலையேது? - பசித்தகாலத்தில் உண்ணுதவர்கட்கு நல்ல நிலையில்லை; உண்மையில்லாதவர்க்கு அறம் ஏது - உண்மை பேசாதவர்க்கு அறம் இல்லை; முயல்வு இலாதவர்க்கு உறுவது ஒரு செல்வம் ஏது - முயற்சியில்லாதவர்கட்குக் கிடைக்கக்கூடிய செல்வம் இல்லை; சோர்வு இலாதவருக்கு மற்றும் ஒரு பயம் ஏது - களைப்பு இல்லாதவர்கட்கு மேலும் வரக்கூடிய அச்சம் ஏதும் இல்லை; சுகம் இலார்க்கு ஆசை ஏது? - உடல்நலம் அற்றவர்க்கு எப்பொருளினும் விருப்பம் இல்லை; துர்க்குணம் இலாதவர்க்கு எதிராளி ஏது? - நற்பண்பு உடையோர்க்குப் பகைவர் இல்லை; இடர் செய் துட்டர்க்கு இரக்கம் ஏது? - (பிறர்க்குத்) துன்பம் விளைக்கும் கொடியவர்க்கு அருள் இல்லை.

(கருத்து) சார்பு முதலானவை அற்றவர்க்கு நிலை முதலானவை இல்லை. (அ0)

அக. இதனினும் இது நன்று

பஞ்சரித்(து) அருமையறி யார்பொருளை எய்தலின்
பலர்மனைப் பிச்சைநன் று
பரிவாக உபசாரம் இல்லா விருந்தினிற்
பட்டினி யிருக்கைநன் று
தஞ்சம்ஒரு முயலைஅடு வென்றிதனில் யானையொடு
சமர்செய்து தோற்றல்நன் று
சரசகுணம் இல்லாத பெண்களைச் சேர்தலிற்
சன்னியா சித்தல்நன் று
அஞ்சலார் தங்களொடு நட்பாய் இருப்பதனில்
அரவினொடு பழகுவது நன்(று)
அந்தணர்க்(கு) ஆபத்தில் உதவா(து) இருப்பதனில்
ஆருயிர் விடுத்தல்நன் று
வஞ்சக ருடன்கூடி வாழ்தனில் தனியே
வருந்திடுஞ் சிறுமை நன்(று)
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மயிலேறி........குமரேசனே ! - , அருமையறியார் பொருளை பஞ்சரித்து எய்தலின் பலர்மனைப் பிச்சை நன்று - தன் அருமையை உணராதவர் பொருளை யிரந்து பெறுதலினும் பலருடைய வீடுகளுக்குஞ் சென்று பிச்சையெடுத்தல் நன்று; பரிவாக உபசாரம் இல்லா விருந்தினில் பட்டினி இருக்கை நன்று - அன்புடன் உபசரியாத விருந்துண்பதைவிடப் பட்டினியாக இருத்தல் நல்லது; தஞ்சம் ஒருமுயலை அடுவென்றிதனில் யானையொடு சமர் செய்து தோற்றல் நன்று - எளிய ஒரு முயலைக்கொன்ற வெற்றியினும் யானையொடு போர்செய்து தோற்பது

நல்லது; சரசகுணம் இல்லாத பெண்களைச் சேர்தலின் சந்நியாசித்தல் நன்று - இனிய பண்பு இல்லாத பெண்களைக் கூடுவதினும் துறவுபூணுதல் நல்லது; அஞ்சலார் தங்களொடு நட்பாய் இருப்பதனில் அரவினொடு பழகுவது நன்று - பகைவருடன் நட்பாய் இருப்பதினும் பாம்பொடு பழகல் நல்லது; அந்தணர்க்கு ஆபத்தில் உதவாது இருப்பதனில் ஆருயிர் விடுத்தல் நன்று - அருட்பண்புடையாருக்கு ஆதரவு செய்யமுடியாத நிலையினும் இறப்பது நல்லது; வஞ்சகருடன் கூடிவாழ்தலின் தனியே வருந்திடும் சிறுமை நன்று - கரவான எண்ணமுடையோருடன் கூடிவாழ்வதினும் தனியே வருந்தும் இழிநிலை நல்லது.

(அருஞ்சொற்கள்) பஞ்சரித்து - இரந்து; பஞ்சம் என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது. தஞ்சம் - எளிமை. அச்சம் அற்றோர் அஞ்சலார்; பகைவர். அந்தணர் : அருளுடையார். அம் தண்மை உடையார் அந்தணர்; சாதியைக் குறித்ததன்று.

(கருத்து) அருமையறியார் பொருளையிரந்து வாங்குதல் போன்ற செயல்களினும் பிச்சையெடுத்தல் முதலானவை நல்லவை.

அஉ. நிலையற்றவை

கொற்றவர்கள் ராணுவமும் ஆறுநேர் ஆகிய
 குளங்களும் வேசையுறவும்
குணம்இலார் நேசமும் பாம்பொடு பழக்கமும்
 குலவுநீர் விளையாடலும்
பற்றலார் தமதிடை வருந்துவிசு வாசமும்
 பழையதா யாதிநிணறும்
பரதார மாதரது போகமும் பெருகிவரு
 பாங்கான ஆற்றுவரவும்
நற்றும்ஒரு துர்ப்புத்தி கேட்கின்ற பேருறவும்
 நல்லமத யானைநட்பும்
நாவில்நல் லுறவும்ஒரு நாள்போல் இராஇவைகள்
 நம்பப் படாதுகண்டாய்

மற்றும்ஒரு துணையில்லை நீதுணைஎனப் பரவும்
வானவர்கள் சிறைமீட் டவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) 'மற்றும் ஒரு துணையில்லை; நீ துணை' எனப் பரவும் வானவர்கள் சிறை மீட்டவா - 'வேறு துணைவர் இல்லை; நீயே தஞ்சம்' என்று வேண்டித் தாழ்ந்த அமரர்களின் சிறையை நீக்கியவனே! மயிலேறி............குமரேசனே!-, கொற்றவர்கள் ராணுவமும் - அரசர்களின் படையும், ஆறுநேர் ஆகிய குளங்களும் - ஆற்றுக்கெதிர்ப்படும் பொய்கைகளும், வேசை உறவும் - பரத்தையரின் நட்பும், குணம் இலார் நேசமும் - நற்பண்பு இல்லாதவரின் நட்பும், பாம்பொடு பழக்கமும் - அரவுடன் பழகுதலும், குலவுநீர் விளையாடலும் - மிக்கநீரிலே ஆடுதலும், பற்றலார் தமதிடை வருந்து விசுவாசமும் - பகைவரிடம் வருந்திக்கொள்ளும் அன்பும், பழைய தாயாதி நிணறும் - பழைய பங்காளிகளின் உறவும், பரதார மாதர் அநுபோகமும் - பிறர் மனைவியரின் கூட்டுறவும், பெருகிவரு பாங்கான ஆற்று வரவும் - பெருக்கெடுத்துவரும் அழகிய ஆற்று வெள்ளமும், நற்றும் ஒரு தார்ப்புத்தி கேட்கின்றபேர் உறவும் - நயமாகப்பேசும் கெடுமதியைக்கேட்டு நடக்கின்றவரின் நட்பும், நல்ல மதயானை நட்பும் - அழகிய மதயானையின் நேசமும், நாவில் நல்லுறவும் - பேச்சிலே இனிய உறவும், ஒருநாள்போல் இரா - ஒருநாளைப்போல நிலையாதவை; இவைகள் நம்பப்படாது - (ஆகையால்) இவற்றை நம்புதல் கூடாது.

(அருஞ்சொற்கள்) கண்டாய்: முன்னிலை அசைச்சொல். கொற்றம் - வெற்றி. வெற்றியையுடையோர் கொற்றவர்: அரசர். பற்று அலார் - பகைவர் (அன்பற்றவர்). நிணறு - உறவு.

(கருத்து) இங்குக்கூறியவை நிலையற்றவை. (அஉ)

அ௫. நற்புலவர் தீப்புலவர் செயல்

மிக்கான சோலையிற் குயில்சென்று மாங்கனி
விருப்பமொடு தேடிநா டும்
மிடைகருங் காகங்கள் எக்கனி இருந்தாலும்
வேப்பங் கனிக்குநா டும்
எக்காலும் வரிவண்டு பங்கே ருகத்தினில்
இருக்கின்ற தேனைநா டும்
எத்தனை சுகந்தவகை உற்றாலும் உருள்வண்(டு)
இனம்துர் மலத்தைநா டும்
தக்கோர் பொருட்சுவை நயங்கள்எங் கேயென்று
தாம்பார்த்(து) உகந்துகொள் வார்
தாழ்வான வன்கண்ணர் குற்றம்எங் கேயென்று
தமிழில்ஆ ராய்வர்கண் டாய்
மைக்காவி விழிமாது தெய்வானை யும்குறவர்
வள்ளியும் தழுவுதலை வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ-ள்.) மை காவி விழிமாது தெய்வானையும் குறவர் வள்ளியும் தழுவு தலைவா! - மை தீட்டப்பெற்ற குவளை மலர்போன்ற கண்களையுடைய தெய்வயானையாரும், வேடர் மகள் வள்ளியம்மையாரும் தழுவும் தலைவனே! மயிலேறி ....குமரேசனே! - , மிக்கான சோலையிற் குயில் சென்று மாங்கனி விருப்பமொடு தேடிநாடும் - பலவகை மரங்கள் மிகுந்த சோலையிலே மாங்கனியையே குயில் விருப்பத் தோடு தேடியடையும்; மிடை கருங்காகங்கள் எக்கனி யிருந்தாலும் வேப்பங்கனிக்கு நாடும் - கூட்டமான காகங் கள் எந்தப் பழங்கள் இருந்தாலும் வேப்பம்பழத்தையே தேடும்; எக்காலும் வரிவண்டு பங்கேருகத்தினில் இருக் கின்ற தேனை நாடும் - எப்போதும் புள்ளிகளையுடைய வண்டுகள் தாமரை மலரிலுள்ள தேனைத் தேடும்; எத்தனை

சுகந்தவகை உற்றாலும் உருள்வண்டு இனம் துர்மலத்தை நாடும் - எத்துணை நறுமணக் கலவைகள் இருந்தாலும் உருண்டுசெல்லும் வண்டுக்கூட்டம் புன்மணமுடைய மலத்தையே தேடும்; (ஆகையால்), தக்கோர் பொருட்சுவை நயங்கள் எங்கேயென்று தாம் உகந்து பார்த்துக்கொள்வார் - நல்ல புலவர்கள் பொருளின் சுவையும் அழகும் எங்குள்ளன என்று விரும்பித்தேடித் தெரிந்துகொள்வார்கள்; தாழ்வான வன்கண்ணர் குற்றம் எங்கே என்று தமிழில் ஆராய்வர் - இழிந்த கொடும் புலவர்கள் தமிழ்ப்பாக்களிலே குற்றம் எங்கேயென்று தேடுவர்.

(அருஞ்சொற்கள்) பங்கேருகம் (வட) - தாமரை. சுகந்தம் (வட) - நறுமணம். வன்கண்ணர் - கொடியவர். கண்டாய் : முன்னிலை அசைச்சொல்.

(கருத்து) குணத்தைக் கொள்ளவேண்டும்; குற்றத்தை நீக்க வேண்டும். (அ௩)

அ௪. தாழ்வில்லை

வேங்கைகள் பதுங்குதலும் மாமுகில் ஒதுங்குதலும்
விரிசிலை குனிந்திடுத லும்
மேடம(து) அகன்றிடலும் யானைகள் ஒடுங்குதலும்
வெள்விடைகள் துள்ளிவிழ லும்
மூங்கில்கள் வணங்குதலும் மேலவர் இணங்குதலும்
முனிவர்கள் நயந்துகொள லும்
முதிர்படை ஒதுங்குதலும் வினையர்கள் அடங்குதலும்
முதலினர் பயந்திடுத லும்
ஆங்(கு)அரவு சாய்குதலும் மகிழ்மலர் உலர்ந்திடலும்
ஆயர்குழல் சூடுபட லும்
அம்புவியில் இவைகா ரியங்களுக்(கு) அல்லாமல்
அதனால் இளைப்புவரு மோ

மாங்கனிக் காஅரனை வலமது புரிந்துவளர்
மதகரிக்(கு) இளையமுரு கா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மாங்கனிக்கு ஆஅரனை வலமது புரிந்து வளர் மதகரிக்கு இளையமுருகா! - மாம்பழத்தை விரும்பிச் சிவபெருமானை வலம்வந்து வாழும் யானைமுகத்தவருக்குத் தம்பியான முருகனே! மயிலேறி..........குமரேசனே! -, வேங்கைகள் பதுங்குதலும் - புலிகள் பின்வாங்குதலும், மாமுகில் ஒதுங்குதலும் - பெரிய மேகக்கூட்டங்கள் விலகுவதும், விரிசிலை குனிந்திடுதலும் - நீண்ட வில் வளைதலும், மேடமது அகன்றிடலும் - ஆட்டுக்கடாக்கள் பின்செல்லுதலும், யானைகள் ஒடுங்குதலும் - யானைகள் அடங்கலும், வெள்விடைகள் துள்ளிவிழலும் - வெண்மையான காளைகள் துள்ளுதலும், மூங்கில்கள் வணங்குதலும் - மூங்கில்கள் வளைதலும், மேலவர் இணங்குதலும் - பெரியோர்கள் ஒத்துப்போதலும், முனிவர்கள் நயந்துகொளலும் - முனிவர்கள் (வெறுமல்) அன்புகாட்டலும், முதிர்படை ஒதுங்குதலும் - வலிமையில் முற்றிய சேனை விலகிச்செல்லுதலும், வினையர்கள் அடங்குதலும் - இடையூறு செய்வோர் அமைதியாதலும், முதலினர் பயந்திடுதலும் - தலைவர்கள் அஞ்சுதலும், ஆங்கு அரவு சாய்குதலும் - பாம்பு அடங்குதலும், மகிழ்மலர் உலர்ந்திடலும் - மகிழம்பூ வாடுவதும், ஆயர் குழல் சூடுபடலும் - இடையரின் குழல் சுடப்படுவதும், இவை காரியங்களுக்கு அல்லாமல் - இவைகளெல்லாம் (பிற்காலத்திற்) காரியசாதனைக்கேயன்றி, அம்புவியில் அதனல் இளைப்புவருமோ? - உலகில் இச்செயலால் தாழ்வு உண்டாகுமா?

(கருத்து) வேங்கை முதலானவை பின்வாங்குதல் பிறது பலன் அளிக்கவேயென்று நினைத்தல்வேண்டும். (அச)

அரு. தெய்வச்செயல்

சோடாய் மரத்திற் புறுரெண் டிருந்திடத்
துறவுகண் டேவேடு வன்
தோலாமல் அவையெய்ய வேண்டும்என்(று) ஒருகணை
தொடுத்தவில் வாங்கிநிற் க
ஊடாடி மேலே எழும்பிடின் அடிப்பதற்(கு)
உலவுரா சாளிகூ ட
உயரப் பறந்துகொண் டேதிரிய அப்போ(து)
உதைத்தசிலை வேடன்அடி யில்
சேடாக வல்விடம் தீண்டவே அவன்விழச்
சிலையில்தொ டுத்தவா ளி
சென்(று)இரா சாளிமெய் தைத்துவிழ அவ்விரு
சிறைப்புறு வாழ்ந்தஅன் றோ
வாடாமல் இவையெலாம் சிவன்செயல்கள் அல்லாது
மனச்செயலி னாலும்வரு மோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மயிலேறி............குமரேசனே! - மரத்தில் புறு ரெண்டு சோடாய் இருந்திட - ஒரு மரத்தில் இரு புறுக்கள் இணையாக இருக்க, வேடுவன் துறவு கண்டே - ஒரு வேடுவன் அவற்றின் உயிர்துறத்தற்கு வழிதேடி, தோலாமல் அவை எய்யவேண்டும் என்று - தவறாமல் அவற்றை அடித்தல்வேண்டும் என நினைத்து, வில்வாங்கி ஒரு கணை தொடுத்து நிற்க - வில்லை வளைத்து ஓர் அம்பு பூட்டிக்கொண்டு நிற்கும்போது, மேலே எழும்பிடின் அடிப்பதற்கு உலவு ராசாளிகூட ஊடாடி - மேலே எழுந்தால் தாக்கிப் பற்றுவதற்குத்திரியும் இராசாளிப் பறவையும் சுழன்றுகொண்டு, உயரப் பறந்துகொண்டேதிரிய - வானத்திற் பறந்துகொண்டிருக்க, அப்போது - அந்நிலையில், உதைத்த சிலைவேடன் அடியில் - (புற்றினை) மிதித்த வில்

லேந்திய வேடனின் காலில், சேடுஆக வல்விடம் தீண்டவே- நன்முகக் கொடிய நஞ்சையுடைய பாம்பு கடித்தலால், அவன் விழ - வேடன் (உயிர்நீங்கி) விழவும், சிலையில் தொடுத்த வாளி சென்று - வில்லில் பூட்டிய அம்புபோய், இராசாளி மெய் தைத்து விழ - இராசாளியின் உடலில் தைத்ததனால் அதுவும் இறந்துவிழவும், அவ் இரு சிறைப் புறு வாழ்ந்த அன்றே - அந்த இரண்டு சிறகுகளையுடை புறுக்களும் உயிர்தப்பின அல்லவா? இவையெலாம் சிவன் செயல்கள் அல்லாது - இவைகளெல்லாம் சிவபிரானுடைய செயல்களே அன்றி, மனச்செயலினாலும் வாடாமல் வருமோ? -(ஒருவருடைய) உளவலிமையினாலும் தவறாமல் உண்டாகுமோ?

(கருத்து) 'திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை.' (அரு)

அசு. செய்யுளின் இயல்

எழுத்தசைகள் சீர்தளைகள் அடிதொடைகள் சிதை
இருக்கவே வேண்டும்அப் பா [யா(து)
ஈரைம் பொருத்தமொடு மதுரமாய்ப் பளபளப்(பு)
இனியசொற்(கு) அமையவேண் டும்
அழுத்தம்மிகு குறளினுக்(கு) ஒப்பாக வேபொருள்
அடக்கமும் இருக்கவேண் டும்
அன்பான பாவினம் இசைந்துவரல் வேண்டும்முன்
அலங்காரம் உற்றதுறை யில்
பழுத்(து)உளம் உவந்(து)ஓசை உற்றுவரல் வேண்டும்
படிக்கும்இசை கூடல்வேண் டும்
பாங்காக இன்னவை பொருந்திடச் சொற்கவிதை
பாடிற் சிறப்பென்பர் காண்
மழுத்தினம் செங்கைதனில் வைத்தகங் காளன்அருள்
மைந்தன்என வந்தமுரு கா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ-ள்.) தினம் செங்கைகளில் மழுவைத்த கங்காளன் அருள் மைந்தன் எனவந்த முருகா! - எப்போதும் அழகிய கைகளில் மழுவையேந்திய சிவபிரான் அருளிய திருமகன் எனத் தோன்றிய முருகனே! மயிலேறி........ குமரேசனே! - அப்பா, எழுத்து அசைகள் சீர் தளைகள் அடி தொடைகள் சிதையாது இருக்கவே வேண்டும் - (புலவர் அறிந்த) அச்செய்யுள் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை எனும் உறுப்பிலக்கணம் கெடாமல் இருத்தல் வேண்டும்; ஈரைம் பொருத்தமொடு மதுரமாய்ப் பளபளப்பு இனியசொற்கு அமையவேண்டும் - பத்துப் பொருத்தமும் இனிமையும் விளக்கமும் அழகிய சொற்களுமாகப் பொருந்த வேண்டும்; அழுத்தம்மிகு குறளினுக்கு ஒப்பாகவே பொருள் அடக்கமும் இருக்கவேண்டும் - ஆழ்ந்த பொருள்மிகுந்த திருக்குறளைப்போலப் பொருளடங்கியும் இருத்தல்வேண்டும்; அன்பான பாவினம் இசைந்துவரல் வேண்டும் - அன்பு மிக்க பாவும் இனமும் ஒத்திருத்தல்வேண்டும்; முன் அலங்காரம் உற்றதுறையில் பழுத்து - பழைமையான அணி பொருந்திய நெறியிலே முதிர்ந்து, உளம் உவந்த ஓசை உற்றுவரல் வேண்டும் - மனம்மகிழும் ஒலியமைந்து வருதல் வேண்டும்; படிக்கும் இசை கூடல்வேண்டும் - படிப்பதற்கு இனியநடை பொருந்தவேண்டும்; பாங்காக இன்னவை பொருந்திடச் சொல் கவிதைபாடின் சிறப்பு என்பர் - ஒழுங்காக இவைகள் அமையுமாறு சொல்லப்படும் செய்யுள் பாடினல் நன்று என்பர் புலவர்.

(விளக்கவுரை) கங்காளம் (வட) - முதுகெலும்பு. கங்காளன்: எலும்பணிந்த சிவபிரான். இரண்டு + ஐந்து + பொருத்தம். ஈரைம் பொருத்தம். அவை: மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உணா, வருணம், நாள், கதி, கணம் எனப்படும். பா: வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என ஐவகைப்படும். ஒவ்வொரு பாவிற்கும் தாழிசை, துறை, விருத்தம் என மூவகை இனங்களுண்டு. மருட்பாவிற்குமட்டும் இல்லை.

(கருத்து) பாக்கள் இங்குக்கூறியவாறு அமைதல்வேண்டும்.

அஎ. திருநீறு வாங்கும் முறை

பரிதனில் இருந்தும்இயல் சிவிகையில் இருந்தும்உயர்
பலகையில் இருந்தும்மிக வே
பாங்கான அம்பலந் தனிலே இருந்தும்
பருத்ததிண் ணையிலிருந் தும்
தெரிவொடு கொடுப்பவர்கள் கீழ்நிற்க மேல்நின்று
திருநீறு வாங்கியிடி னும்
செங்கையொன் றாலும்விரல் மூன்றாலும் வாங்கினும்
திகழ்தம் பலத்தினோ டும்
அரியதொரு பாதையில் நடக்கின்ற போதினும்
அசுத்தநில மானஅதி னும்
அங்கே தரிக்கினும் தந்திடின் தள்ளினும்
அவர்க்குநர(கு) என்பர்கண் டாய்
வரிவிழி மடந்தைகுற வள்ளிநா யகிதனை
மணந்துமகிழ் சகநா தனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) வரிவிழி மடந்தை குறவள்ளிநாயகிதனை மணந்து மகிழ் சகநாதனே! - செவ்வரி படர்ந்த திருக் கண்களையுடைய குறமடந்தையார் வள்ளியம்மையாரைத் திருமணம்புரிந்து மகிழும் உலகமுதல்வனே! மயிலேறி.... ....குமரேசனே! -, பரிதனில் இருந்தும் - குதிரைமீது அமர்ந்தும், இயல் சிவிகையில் இருந்தும் - அழகிய பல்லக்கில் அமர்ந்தும், உயர் பலகையில் இருந்தும் - உயரமான மணைமீது அமர்ந்தும், பாங்கான அம்பலந்தனிலே மிக இருந்தும் - அழகிய பொதுவிடத்திலே நன்றாக அமர்ந்தும், பருத்த திண்ணையில் இருந்தும் - பெரிய திண்ணைகளில் அமர்ந்தும், கொடுப்பவர்கள் கீழ்நிற்க மேல்நின்று திருநீறு தெரிவொடு வாங்கி இடினும் - திருநீறு அளிப்போர்கள் கீழேயிருக்க (வாங்குவோர்) மேலிடத்திலிருந்து வாங்கி

அணிந்தாலும், செங்கை ஒன்றாலும் விரல் மூன்றாலும் வாங்கினும் - ஒரு கையாலும் மூன்று விரல்களாலும் ஏற்றாலும், திகழ் தம்பலத்தினோடும் - (வாயில்) தரித்த தாம்பூலத்தோடும், அரியது ஒருபாதையில் நடக்கின்றபோதிலும் - அருமையான வழியொன்றிற் செல்லும்பொழுதும், அசுத்த நிலமான அதிலும் - அழுக்கு நிலத்திலும், அங்கே தரிக்கினும் - (ஆகிய) அந்த இடங்களிலே அணிந்தாலும், தந்திடின் தள்ளினும் - அளித்தபோது மறுத்தாலும், அவர்க்கு நரகு என்பர் - அவர்கட்கு நரகம் கிடைக்கும் என்று அறிஞர் கூறுவர்.

(கருத்து) இங்குக்கூறப்பட்ட விதிப்படித் திருநீறு வாங்க வேண்டும். (அஎ)

அஅ. திருநீறு அணியும் முறை

பத்தியொடு சிவசிவா என்றுதிரு நீற்றைப்
பரிந்துகை யாலெடுத் துப்
பாரினில் விழாதபடி அண்ணாந்து செவியொடு
பருத்தபுய மீதுஒழு க
நித்தம்மூ விரல்களால் நெற்றியில் அழுந்தலுற
நினைவாய்த் தரிப்பவர்க் கு
நீடுவினை அணுகாது தேகபரி சுத்தமாம்
நீங்காமல் நிமலன் அங் கே
சத்தியொடு நித்தம்விளை யாடுவன் முகத்திலே
தாண்டவம் செய்யுந் திரு
சஞ்சலம் வராதுபர கதியுதவும் இவரையே
சத்தியும் சிவன்என்ன லாம்
மத்தினிய மேருஎன வைத்(து)அமு தினைக்கடையும்
மால்மருகன் ஆனமுரு கா
மயிலேறி விளையாடு குகனே புல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மேரு இனிய மத்து எனவைத்து அமுதினைக் கடையும் மால்மருகனான முருகா! - மேருமலையை அழகிய மத்தாகக்கொண்டு அமுதைக்கடைந்த திருமாலின் மருகனான முருகனே! மயிலேறி........குமரேசனே! -, பத்தியொடு சிவசிவா என்று பரிவொடு திருநீற்றைக் கையால் எடுத்து - பேரன்புடன் சிவசிவா என்று வழுத்தி விருப்பத்துடன் திருநீற்றைக் கையினால் அள்ளி, பாரினில் விழாதபடி அண்ணாந்து செவியொடு பருத்த புயம்மீது ஒழுக - நிலத்திற் சிந்தாதவாறு மேல்நோக்கியவாறு காதுகளின் மீதும் தோள்களின்மீதும் படியும்வண்ணம், நெற்றியில் அழுந்தலுற மூவிரல்களால் நித்தமும் நினைவாய்த் தரிப்பவர்க்கு - நெற்றியிற் பதியும்படி மூன்று விரல்களால் ஒவ்வொருநாளும் (சிவ) நினைவுடன் அணிபவர்க்கு, நீடுவினை அணுகாது - நீண்டநாளைய பழவினை நெருங்காது; தேக பரிசுத்தம் ஆம் - மெய் தூயது ஆகும்; அங்கே நிமலன் நீங்காமல் சத்தியொடு நித்தம் விளையாடுவன் - அவர்களிடமிருந்து பரம்பொருள் விலகாமல் உமையம்மையாருடன் எப்போதும் விளையாடுவான்; முகத்திலே திரு தாண்டவம் செய்யும் - முகத்திலே திருமகள் நடம்புரிவாள்; சஞ்சலம் வராது - மனக்கலக்கம் உண்டாகாது; பரகதி உதவும் - மேலான வீடுதரும்; இவரையே சத்தியும் சிவன் என்னலாம் - இவர்களையே சத்தியும் சிவனும் என விளம்பலாம்.

(கருத்து) திருநீற்றை அன்புடன் அணிவோர் இம்மை மறுமையின்பங்களை எளிதின் எய்துவார். (அஅ)

அகூ. பயனற்ற உறுப்புக்கள்

தேவா லயஞ்சுற்றி டாதகால் என்னகால்
　　தெரிசியாக் கண்என்ன கண்
தினமுமே நின்கமல பாதத்தை நினையாத
　　சிந்தைதான் என்னசிந் தை
மேவா கமம்சிவ புராணம்அவை கேளாமல்
　　விட்டசெவி என்னசெவி கள்

விமலனே வணங்காத சென்னிஎன் சென்னிபணி
விடைசெயாக் கையென்ன கை
நாவார நினையேத்தி டாதவாய் என்னவாய்
நல்தீர்த்தம் மூழ்கா வுடல்
நானிலத் தென்னவுடல் பாவியா கியசனனம்
நண்ணினுற் பலனேது காண்
மாவாகி வேலைதனில் வருசூரன் மார்(பு)உருவ
வடிவேலை விட்டமுரு கா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) வேலைதனில் மாஆகி வருசூரன் மார்பு உருவ வடிவேலைவிட்ட முருகா ! - கடல் நடுவிலே மாமரமாகிவந்த சூரன் மார்பிற்படும்படி வடிவேலை விடுத்த முருகனே ! மயிலேறி............குமரேசனே ! - , தேவ ஆலயம் சுற்றிடாத கால் என்ன கால்? - (நின்) தெய்வக்கோயிலை வலம்வராத கால் காலன்று; தெரிசியாக் கண் என்ன கண்?- காணாத கண் பயனற்ற கண்; தினமுமே நின்கமல பாதத்தை நினையாத சிந்தைதான் என்ன சிந்தை? - நாடோறும் உன் தாமரைத்தாள்களை எண்ணாத உள்ளம் பயனற்றது; மேவு ஆகமம் சிவபுராணம் அவை கேளாமல் விட்ட செவி என்ன செவிகள் ? - பொருந்திய சைவ ஆகமங்களையும் சிவபுராணங்களையும் கேளாது விலகும் செவிகள் பயனற்றவை; விமலனை வணங்காத சென்னி என் சென்னி? - குற்றமற்ற சிவபரம்பொருளை வணங்காத தலை பயனுடையது அன்று; பணிவிடை செயாக் கை என்ன கை? - தொண்டுசெய்யாத கைகள் பயனற்றவை; நாவுஆர நினை ஏத்திடாத வாய் என்ன வாய்? - நாநிறைய உன்னை வாழ்த்தாத வாய் பயனற்றது; நானிலத்து நல்தீர்த்தம் மூழ்கா உடல் என்ன உடல்? - உலகிலே தூய சிவதீர்த்தங்களில் மூழ்காத மெய்யாற் பயனில்லை; பாவி ஆகிய சனனம் நண்ணினல் பலன் ஏது? - பாவத்தன்மை பொருந்திய இத்தகைய பிறவி எடுத்ததனாலே எப்பயனும் இல்லை.

(விளக்கவுரை) தேவ + ஆலயம் : தேவாலயம். சிவபுராணம் என்றதனால் ஆகமமும், கோயிலும் பிறவும் சிவத்தொடர்பு ஆயின. முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என நால்வகைப்படும். ஆகையால் நிலம் நானிலம் ஆயிற்று. நான்கு + நிலம் : நானிலம்.

(கருத்து) சிவபிரானை வழிபடாத பிறவி பயனற்றது. (அகூ)

கூ௦. நற்பொருளுடன் தீயபொருள்

கோகனக மங்கையுடன் மூத்தவள் பிறந்தென்ன
குலவும்ஆட் டின்கண் அதர் தான்
கூடப் பிறந்தென்ன தண்ணீரி னுடனே
கொடும்பாசி உற்றும்என் ன
மாகர்உணும் அமுதினொடு நஞ்சம் பிறந்தென்ன
வல்இரும் பில்துருத் தான்
வந்தே பிறந்தென்ன நெடுமரந் தனில்மொக்குள்
வளமொடு பிறந்தென்ன உண்
பாகமிகு செந்நெலொடு பதர்தான் பிறந்தென்ன
பன்னுமொரு தாய்வயிற் றில்
பண்புறு விவேகியொடு கயவர்கள் பிறந்தென்ன
பலன்ஏதும் இல்லைஅன் றோ
மாகனக மேருவைச் சிலையென வளைத்தசிவன்
மைந்தனென வந்தமுரு கா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மாகனக மேருவைச் சிலையென வளைத்த சிவன் மைந்தன் எனவந்த முருகா! - பெரிய பொன்மயமான மேருமலையை வில்லாக வளைத்த சிவபிரானுக்குத் திருமகவாகத்தோன்றிய முருகனே! மயிலேறி........குமரேசனே! - கோகனகம் மங்கையுடன் மூத்தவள் பிறந்து என்ன? - தாமரையாளுடன் (இலக்குமியுடன்) மூதேவி பிறந்ததனால் (மூதேவிக்கு) யாது நலம்? குலவும் ஆட்டின்

கண் அதர்தான் கூடப்பிறந்து என்ன? - விளங்கும் ஆட்டினிடத்தில் (கழுத்தில் நீண்டு தொங்கும்) அலைதாடி உடன் பிறந்து யாது பயன்? தண்ணீரினுடனே கொடும்பாசி உற்றும் என்ன? - தண்ணீரில் கொடிய பாசி தோன்றிப் பயன் யாது? மாகர் உணும் அமுதினொடு நஞ்சம் பிறந்து என்ன?- வானவர் உண்ணும் அமுதத்தோடு நஞ்சு தோன்றி யாது பயன்? வல் இரும்பில் துருத்தான் வந்தே பிறந்து என்ன - உறுதியான இரும்புடன் துருவந்து தோன்றி யாது பயன்? நெடுமரந்தனில் மொக்குள் வளமொடு பிறந்து என்ன - நீண்ட மரத்தினிலே (குமிழிபோன்ற) முடிச்சு செழிப்புடன் உண்டாகி யாது பயன்? உண் பாகம்மிகு செந்நெலொடு பதர்தான் பிறந்து என்ன - உண்ணும் பதம் மிகுந்த செந்நெல்லுடன் பதர் தோன்றி யாது பயன்? பன்னும் ஒரு தாய்வயிற்றில் பண்புஉறு விவேகியொடு கயவர்கள் பிறந்து என்ன - சிறப்பாகச் சொல்லப்படும் ஒரு தாயின் வயிற்றிலே நற்குணமுடைய அறிவாளியுடன் கொடியவர்கள் தோன்றி யாது பயன்? பலன் ஏதும் இல்லை அன்றோ - எவ்வகை நலனும் இல்லையன்றோ?

(அருஞ்சொற்கள்) கனகம் (வட) - பொன். கோகனகம்(வட) - தாமரை. மாகர் (வட) - வானவர். அதர் - அலைதாடி (ஆட்டின் கழுத்தில் தொங்குவது). மொக்குள் : மொக்குள் போன்ற முடிச்சு.

(கருத்து) நல்லதுடன் தீயது தோன்றினும் நற்பொருளாகாது. (௬௦)

௬௧. கோடரிக்காம்பு

குலமான சம்மட்டி குறடுகைக்(கு) உதவியாய்க்
கூர்இரும் புகளைவெல் லும்
கோடாலி தன்னுளே மரமது நுழைந்துதன்
கோத்திரம் எலாம்அழிக் கும்
நலமான பார்வைசேர் குருவியா னதுவந்து
நண்ணுபற வைகளைஆர்க் கும்
நட்புடன் வளர்த்தகலை மானென்று சென்றுதன்
நவில்சாதி தனையிழுக் கும்

உலவுநல் குடிதனிற் கோளர்கள் இருந்துகொண்(டு)
உற்றுரை யீடழிப் பர்
உளவன்இல் லாமல்ஊர் அழியா(து)எனச் சொல்லும்
உலகமொழி நிசம்அல்ல வோ
வலமாக வந்(து)அர னிடத்தினிற் கனிகொண்ட
மதயானை தன்சோ தரா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) வலமாகவந்து அரனிடத்தினிற் கனி கொண்ட மதயானைதன் சோதரா - (அரனை) வலமாகச் சுற்றிவந்து அவரிடம் மாங்கனிபெற்ற விநாயகரின் தம்பியே! மயிலேறி........குமரேசனே! -, குலமான சம்மட்டி குறடு கைக்கு உதவியாய்க் கூர் இரும்புகளை வெல்லும் - (இரும்பின்) குலமான சம்மட்டியும் குறடும் (கொல்லன்) கைக்குத் துணைபுரிந்து மிகுதியான இரும்புகளை அடக்கும்; கோடாலி தன்னுளே மரமது நுழைந்துதன் கோத்திரம் எலாம் அழிக்கும் - கோடரியின் உள்ளே மரம் (காம்பாக) சேர்ந்துகொண்டு தன் மரபான மரங்களை ஒழிக்கும்; நலமான பார்வைசேர் குருவியானதுவந்து நண்ணு பறவைகளை ஆர்க்கும் - அழகான பார்வைக்குருவி (தன்னைப் பார்த்து) வந்து அருகில் அமரும் பறவைகளைக் கட்டுப் படுத்தும்; நட்புடன் வளர்த்த கலைமான் ஒன்று சென்று நவில்தன் சாதிதனை யிழுக்கும் - அன்புடன் வளர்க்கப் பட்ட கலைமான் (காட்டில்) சென்று சொல்லப்படும் தன் இனத்தை அகப்படுத்தும்; உலவும் நல்குடிதனில் கோளர்கள் இருந்துகொண்டு உற்றுரை யீடழிப்பார் - (பலருடனும்) பழகும் நல்ல குடியிலே கோளுரைப்போர் சேர்ந்து கொண்டு உறவினரின் மதிப்பைக் கெடுப்பர்; ‘உளவன் இல்லாமல் ஊர் அழியாது’ எனச்சொல்லும் உலகமொழி நிசம் அல்லவோ - ‘உளவுகூறுவோன் இல்லாவிட்டால் ஊர் கெடாது’ என்று கூறும் உலகச்சொல் உண்மை யன்றோ?

(விளக்கவுரை) 'பார்வை மிருகம்' 'பார்வைப் பறவை' என்பவை மனிதர்களாற் பழக்கப்பட்டு, அவற்றின் இனத்தைப் பிடிக்கப் பயன்படும். குறடு - பற்றுக்கோடு. 'உளவன் இன்றி ஊர் பாழாகாது' என்பது பழமொழி. 'கோடரி' என்ற சொல்லே 'கோடாலி' என மருவியது.

(கருத்து) 'உளவன் இல்லாமல் ஊர் பாழாகாது.' (௬௧)

௬௨. வீணுக்கு உழைத்தல்

குயில்முட்டை தனதென்று காக்கைஅடை காக்கும்
குணம்போலும் ஈக்கள்எல் லாம்
கூடியே தாம்உண்ண வேண்டும்என் றேதினம்
கூடுய்த்த நறவுபோ லும்
பயில் சோரருக்குப் பிறந்திடத் தாம்பெற்ற
பாலன்என்(று) உட்கருதி யே
பாராட்டி முத்தம்இட்(டு) அன்பாய் வளர்த்திடும்
பண்(பு)இலாப் புருடர்போ லும்
துயிலின்றி நிதிகளைத் தேடியே ஒருவர்பால்
தொட்டுத் தெரித்திடா மல்
தொகைபண்ணி வைத்திடுவர் கைக்கொண்டு போக
சொந்தமா னவர்வேறு காண் [வரு
வயிரமொடு சூரனைச் சங்கார மேசெய்து
வானவர்க்(கு) உதவுதலை வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ-ள்.) சூரனை வயிரமொடு சங்காரமே செய்து வானவர்க்கு உதவு தலைவா - சூரனைச் சினந்து வீழ்த்தித் தேவர்களுக்குத் துணைபுரிந்த முதல்வனே! மயிலேறி........ குமரேசனே! - , குயில்முட்டை தனது என்று காக்கை அடைகாக்கும் குணம்போலும் - குயிலின் முட்டையைத் தன்னுடையது என்று நினைத்துக் காகம் அடைகாக்கும் தன்மையைப்போலும், ஈக்கள் எல்லாம் கூடியே தாம்

உண்ணவேண்டும் என்றே தினம் கூடுஉய்த்த நறவு போலும் - எல்லா ஈக்களும் சேர்ந்து தாங்கள் பருக வேண்டும் என்று நினைத்து நாள்தோறும் கூட்டிற்கொண்டு வைத்த தேனைப்போலவும், பயில் சோரருக்குப் பிறந்திடத் தாம்பெற்ற பாலன் என்று உள் கருதியே - (தம் மனைவியருடன்) கலந்த கள்ளக்காதலருக்குப் பிறந்து தாங்கள் பெற்ற மகன் என்று மனத்தில் எண்ணி, பாராட்டி முத்தம் இட்டு அன்பாய் வளர்த்திடும் பண்புஇலா புருடர்போலும் - கொண்டாடி முத்தம்கொடுத்து அன்புடன் வளர்க்கின்ற மனித இயல்பு இல்லாத ஆடவர்களைப்போலும், துயில் இன்றி நிதிகளைத்தேடியே ஒருவர்பால் தொட்டுத் தெரித்திடாமல் - தூக்கம் இல்லாமற் செல்வத்தை ஈட்டி ஒருவர்க்கும் அணுவளவும் கொடுக்காமல், தொகைபண்ணி வைத்திடுவர் - தொகைதொகையாக எண்ணிவைத்திடுவர் (சிலர்), கைக்கொண்டு போகவரு சொந்தமானவர் வேறு - (அப்பொருளை) எடுத்துக்கொண்டுபோக வருகின்ற உரிமையாளர் வேறுவார்.

காண் : முன்னிலை அசைச்சொல்.

(கருத்து) பிறருக்குக்கொடுத்துத் தாமும் உண்ணுமற் சேர்த்து வைப்பவர் பொருளை மற்றவரே அனுபவிப்பார். (கூஉ)

கூங. வீணவன

அழலுக்கு ளேவிட்ட நெய்யும் பெருக்கான
ஆற்றிற்க ரைத்தபுளி யும்
அரிதான கமரிற் கவிழ்த்திட்ட பாலும்வரும்
அலகைகட்(கு) இடுபூசை யும்
சுழல்பெருங் காற்றினில் வெடித்தபஞ் சும்மணல்
சொரிநறும் பனிநீரும் நீள்
சொல்லரிய காட்டுக்(கு) எரித்தநில வும்கடற்
சுழிக்குளே விடுகப் பலும்

விழலுக் கிறைத்திட்ட தண்ணீரும் முகம்மாய
வேசைக்(கு) அளித்தபொரு ளும்
வீணருக் கேசெய்த நன்றியும் பலனில்லை
விருதாஇ(து) என்பர்கண் டாய்
மழலைப் பசுங்கிள்ளை முன்கைமலை மங்கைதரு
வண்ணக் குழந்தைமுரு கா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ-ள்.) மழலைப் பசுங்கிள்ளை முன்கை மலைமங்கை தருவண்ணம் குழந்தை முருகா - திருந்தா மொழிகளை யுடைய பச்சைக்கிளியை முன்கையில் வைத்துக் களிக்கும் பார்வதி பெற்ற அழகிய குழந்தையான முருகனே! மயிலேறி............குமரேசனே! -, அழலுக்குளே விட்ட நெய்யும் - நெருப்பில் வார்த்த நெய்யும், பெருக்கு ஆன ஆற்றில் கரைத்த புளியும் - வெள்ளமான ஆற்றிலே கரைத் திட்ட புளியும், அரிது ஆன கமரில் கவிழ்த்திட்ட பாலும் - அருமையான நிலவெடிப்பிலே கவிழ்த்த பாலும், வரும் அலகைகட்கு இடுபூசையும் - வருகின்ற பேய்களுக்குச் செய் யும் வழிபாடும், சுழல் பெருங்காற்றினில் வெடித்த பஞ்சும் - சுழன்று வீசும் பெரியகாற்றிலே வெடித்திருக்கும் பஞ்சும், மணல்சொரி நறும்பனி நீரும் - மணலிலே வார்த்த மண மிக்க பனிநீரும், சொல்லரிய நீள்காட்டுக்கு எரித்த நிலவும் - கூறுதற்கரிய பெரிய காட்டிலே பொழிந்த நிலவின் ஒளி யும், கடல் சுழிக்குளேவிடு கப்பலும் - கடலிற் சுழித்து நிற்கும் பகுதியிலே செலுத்தப்பட்ட கப்பலும், விழலுக்கு இறைத்திட்ட தண்ணீரும் - விழலுக்குப் பாய்ச்சிய குளிர்ந்த நீரும், முகம் மாயவேசைக்கு அளித்த பொருளும் - முகப் பார்வையினால் மயக்கும் பரத்தைக்குக்கொடுத்த செல்வ மும், வீணருக்கே செய்த நன்றியும் - பயனற்றவர்களுக்குச் செய்யும் நலமும், பலன் இல்லை - பயன்தராதவை; இது விருதா என்பர் - இவ்வகைச்செய்கை வீண் என்று கூறுவர்.

கண்டாய் : முன்னிலை அசைச்சொல்.

(கருத்து) இங்குக்கூறியவை பயனற்ற செய்கைகள். (கூஉ)

௧௪௪. கைவிடத்தகாதவர்

அன்னைசுற் றங்களையும் அற்றைநாள் முதலா
அடுத்துவரு பழையோரை யும்
அடுபகைவ ரில்தப்பி வந்தவொரு வேந்தனையும்
அன்பான பெரியோரை யும்
தன்னைநம் பினவரையும் ஏழையா னவரையும்
சார்ந்தமறை யோர்தம்மை யும்
தருணம்இது என்றுநல் லாபத்து வேளையிற்
சரணம்பு குந்தோரை யும்
நன்னயம தாகமுன் உதவிசெய் தோரையும்
நாளும்த னக்(கு)உறுதி யாய்
நத்துசே வகனையும் காப்பதல் லாதுகை
நழுவவிடல் ஆகாது காண்
மன்னயிலும் இனியசெஞ் சேவலும் செங்கைமலர்
வைத்தசர வணபூ பனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மன் அயிலும் இனிய செஞ்சேவலும் செங்கைமலர் வைத்த சரவண பூபனே - பொருத்தமான வேலையும் அழகிய சிவந்த சேவற்கொடியையும் சிவந்த மலர்க்கைகளில் வைத்திருக்கும் சரவணனே! உலகமுதல்வனே! மயிலேறி........குமரேசனே! -, அன்னை சுற்றங்களையும் - தாயையும் உறவினரையும், அற்றைநாள் முதலாக அடுத்துவரு பழையோரையும் - (நாம் அறிவுபெற்ற) அந்தக் காலத்திலிருந்து நம்மைச்சார்ந்துவரும் பழைமையானவர்களையும், அடுபகைவரில் தப்பிவந்த ஒரு வேந்தனையும் - போர்புரியும் பகைவர் கூட்டத்திலிருந்து பிரிந்து (அடைக்கலமென்று) வந்த ஓரரசனையும், அன்பான பெரியோரையும் - அன்புடைய பெரியோர்களையும், தன்னை நம்பினவரையும் - தன்னிடம் நம்பிக்கையுடையவர்களையும், ஏழையான

வரையும் - ஏழைகளையும், சார்ந்த மறையோர்தம்மையும் - அடுத்த மறையவர்களையும், தருணம் இது என்று நல் ஆபத்துவேளையில் சரணம் புகுந்தோரையும் - (ஆதரிக்க வேண்டிய) சமயம் இது எனக்கூறி இடருற்றபோது அடைக்கலம் புகுந்தவர்களையும், நல்நயமதாக முன் உதவி செய்தோரையும் - மிக நன்றாக முதலில் துணைபுரிந்தவர்களையும், நாளும் தனக்கு உறுதியாய் நத்து சேவகனையும் - எப்போதும் தனக்கு நன்மையாய்வந்த பணியாளனையும், காப்பது அல்லாது கைநழுவவிடல் ஆகாது - ஆதரிக்க வேண்டுமே அன்றிக் கைசோரவிடக்கூடாது.

காண் : முன்னிலை அசைச்சொல்.

(விளக்கவுரை) அன்று என்பது அற்றை என வழங்குகிறது. அன்று + ஐ : அற்றை : ஐ : சாரியை. மன்னுதல் - நிலைபெறுதல். நத்துதல் - நலமடைதல்.

(கருத்து) அன்னை முதலானோர் கைவிடத்தகாதவர். (கூ௬)

௬௫. தகாத செயல்கள்

அண்டிவரும் உற்றார் பசித்திருக்கவே
 அன்னியர்க்(கு) உதவுவோ ரும்
ஆசுதபு பெரியோர்செய் நேசத்தை விட்டுப்பின்
 அற்பரை அடுத்தபே ரும்
கொண்டஒரு மனையாள் இருக்கப் பரத்தையைக்
 கொண்டாடி மருவுவோ ரும்
கூறுசற் பாத்திரம் இருக்கமிகு தானமது
 குணம்இலார்க்(கு) ஈந்தபே ரும்
கண்டுவரு புதியோரை நம்பியே பழையோரைக்
 கைவிட்(டு) இருந்தபே ரும்
கரிவாலை விட்டுநரி வால்பற்றி நதிநீர்
 கடக்கின்ற மரியாதை காண்

வண்டடர் கடப்பமலர் மாலிகா பரணம்அணி
மார்பனே அருளா ளனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) வண்டு அடர் கடப்பமலர் மாலிக ஆபரணம் அணி மார்பனே அருளாளனே - வண்டுகள் நெருங்கும் கடப்பமலரால் ஆன மாலையையும் அணிகலனையும் அணிந்த மார்பினனே! அருளையுடையவனே! மயிலேறி........குமரே சனே! - , அண்டிவரும் உற்றார் பசித்து அங்கு இருக்கவே அன்னியர்க்கு உதவுவோரும் - நெருங்கிப்பழகும் உறவினர் பசியுடன் இருக்கும்போதும் பிறர்க்குதவும் தன்மையின ரும், ஆசுதபு பெரியோர்செய் நேசத்தை விட்டுப்பின் அற் பரை அடுத்தபேரும் - குற்றம் அற்ற நல்லோரிடங் கொண்ட நட்பைவிடுத்துக் கீழோரை நட்புக்கொண்ட வரும், கொண்ட ஒரு மனையாள் இருக்கப் பரத்தையைக் கொண்டாடி மருவுவோரும் - மணம்புரிந்துகொண்ட இல் லாள் ஒருத்தியிருக்கவும் வேசையைப் பாராட்டிக் கலப் போரும், கூறுசற் பாத்திரம் இருக்கக் குணம் இலார்க்கு மிகுதானமது ஈந்தபேரும் - கூறப்பட்ட தகுதியோர் இருக் கவும் தகாதவர்களுக்கு மிகுந்த பொருளை வழங்கியவரும், கண்டுவரு புதியோரை நம்பியே பழையோரைக் கைவிட்டு இருந்தபேரும் - (அப்போதுதான்) பார்க்கப்பட்ட புதிய வர்களை நம்பி முன்னிருந்தவரை நீக்கிவிட்டவர்களும், கரி வாலைவிட்டு நரிவால் பற்றி நதிநீர் கடக்கின்ற மரியாதை - யானையின் வாலை விட்டுவிட்டு நரியின் வாலைப் பிடித்துக் கொண்டு ஆற்றுநீரைக் கடக்கும் தன்மையாகும்.

காண் : முன்னிலை அசைச்சொல்.

(விளக்கவுரை) மாலிகை (வட) - மாலை. ஆசு - குற்றம். தபுதல் - கெடுதல். சற்பாத்திரம் : தாமே பொருளீட்டி வாழமுடி யாத கூன், குருடு, முடம் முதலான உறுப்புக்குறையினரும் முதிய வரும் சிறு குழந்தைகளும் பெண்களும் ஆவர். கரிவாலைவிட்டு நரிவால் பிடித்தல் : மரபுத்தொடர். 'செல்வர்க்கழகு செழுங்கிளை

தாங்குதல்' 'பெரியாரைத் துணைக்கொள்' 'பாத்திரம் அறிந்து பிச்சையிடு' என்பவை இங்கே கருதத்தக்கவை.

(கருத்து) உறவினர் முதலானோரையே ஆதரிக்கவேண்டும்.

கூசுா. நல்லோர் முறை

கூடியே சோதரர்கள் வாழ்தலா லும்தகு
குழந்தைபல பெறுதலா லும்
குணமாக வேபிச்சை யிட்டுண்கை யாலும்
கொளும்பிதிர்க்(கு) இடுதலா லும்
தேடியே தெய்வங்க ளுக்கீத லாலும்
தியாகம் கொடுத்தலா லும்
சிறியோர்கள் செய்திடும் பிழையைப் பொறுத்துச்
சினத்தைத் தவிர்த்தலா லும்
நாடியே தாழ்வாய் வணங்கிடுத லாலும்மிக
நல்வார்த்தை சொல்லலா லும்
நன்மையே தருமலால் தாழ்ச்சிகள் வரா இவை
நல்லோர்கள் செயும்முறைமை காண்
வாடிமனம் நொந்துதமிழ் சொன்னநக் கீரன்முன்
வந்துதவி செய்தமுரு கா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மனம் வாடிநொந்து தமிழ் சொன்ன நக்கீரன்முன்வந்து உதவிசெய்த முருகா - உளம் சோர்ந்து (திருமுருகாற்றுப்படையெனும்) தமிழ்ப்பாவைப் பாடிய நக்கீரன்முன் எழுந்தருளி அருள்புரிந்த முருகனே! மயிலேறி..........குமரேசனே! -, சோதரர்கள் கூடியே வாழ்தலாலும் - உடன்பிறந்தோர் ஒன்றாகக் குடிநடத்துவதாலும், பல தகு குழந்தை பெறுதலாலும் - பல நல்ல மக்களைப் பெறுவதாலும், குணமாகவே பிச்சை இட்டு உண்கையாலும் - நற்பண்புடன் ஈந்து சாப்பிடுவதாலும்

கொளும் பிதிர்க்கு இடுகையாலும் - ஏற்றுக்கொள்ளும் தென்புலத்தார்க்குக் கொடுப்பதாலும், தெய்வங்களுக்குத் தேடியே ஈதலாலும் - தெய்வங்களைநாடி வழிபாட்டுப் பொருள் கொடுப்பதாலும், தியாகம் கொடுத்தலாலும் - வறியோர்க்கு வழங்குவதாலும், சிறியோர்கள் செய்திடும் பிழையைப்பொறுத்துச் சினத்தைத் தவிர்த்தலாலும் - (அறிவிற்) சிறியோர்புரியும் தப்புகளை மன்னித்துச் சீற்றத்தை விடுதலாலும், நாடியே தாழ்வாய் வணங்கிடுதலாலும் -(பெரியோரைத்) தேடித் தாழ்ந்து வணங்குவதாலும், மிக நல்வார்த்தை சொல்லலாலும் - சாலவும் இனியமொழி இயம்பலாலும், நன்மையே தரும்அலால் தாழ்ச்சிகள் தரா- நன்மையே உண்டாகுமன்றிக் குறைவுகள் உண்டாக மாட்டா; இவை நல்லோர்கள் செயும் முறைமை - இவைகள் நல்லோர்களின் இயல்புகள்.

காண் : முன்னிலை அசைச்சொல்.

(விளக்கவுரை) தென்புலத்தார் (பிதிரர்) : நம் முன்னோர்களில் இறந்தவர்கள். அவர்களுக்கு இடுதலாவது அவர்களுடைய ஆன்மா அமைதியடைய வறியோருக்குக் கொடுத்தல். 'தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு—ஐம்புலத்தாறோம்பல் தலை' என்றார் வள்ளுவர்.

நக்கீரனுக்கு அருளிய கதை :

திருத்தல யாத்திரை சென்ற நக்கீரர் ஒரு பொய்கைக்கரைமீது சிவபூசை செய்துகொண்டிருந்தார். அப்போது அப்பொய்கையில் ஓரிலை ஆலமரத்திலிருந்து விழுந்தது. அது தண்ணீருக்குள் மறைந்த பகுதி மீனாகவும் மறையாத பாகம் பறவையாகவும் மாறியது. அவ் வியப்பினாலே சிவபூசையில் வழுவிய நக்கீரரைக் குதிரை முகமுடைய பெண்பூதம் ஒன்று தூக்கிச்சென்று குகையில் வைத்துச் சென்றது. அதற்குமுன் பலர் அவ்வாறு அங்கு அகப்பட்டிருந்தனர். எல்லோரையும் பூதம் கொல்லும் என்று அறிந்த நக்கீரர் மனம்நொந்து திருமுருகாற்றுப்படை பாடினார். முருகன் வேலையேவி அப்பூதத்தைக் கொன்றார். இவ்வாறுள்ள புராணக்கதை இங்குக் குறிப்பிடப்படுகிறது.

(கருத்து) ஒற்றுமையாக வாழ்வது முதலாக இங்குக்கூறப்பட்டவை நல்லோருடைய பண்புகள். (கக)

௯௭. அடைக்கலம் காத்தல்

அஞ்சல்என நாயினுடல் தருமன் சுமந்துமுன்
 ஆற்றைக் கடத்துவித் தான்
அடைக்கலம் எனும்கயற்(கு) ஆகநெடு மாலுடன்
 அருச்சுனன் சமர்புரிந் தான்
தஞ்சம்என வந்திடு புறுவுக்கு முன்சிபி
 சரீரம் தனைக்கொடுத் தான்
தடமலைச் சிறகரிந் தவனைமுன் காக்கத்
 ததீசிமுது(கு) என்(பு)அளித் தான்
இன்சொலுட னேபூத தயவுடையர் ஆயினோர்
 எவருக்கும் ஆபத்தி லே
இனியதம் சீவனை விடுத்தாகி லும்காத்(து)
 இரங்கிரட் சிப்பர்அன் றோ
வஞ்சகிர வுஞ்சமொடு தாருகன் சிங்கமுகன்
 வளர்சூரன் உடல்கீண்ட வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
 மலைமேவு குமரே சனே.

(இ-ள்.) வஞ்ச கிரவுஞ்சமொடு தாருகன் சிங்கமுகன் வளர்சூரன் உடல் கீண்டவா - வஞ்சகச்செயலுடைய கிரவுஞ்சமலையையும் தாரகனையும் சிங்கமுகனையும் சூரனையும் உடலைப்பிளந்த வீரனே! மயிலேறி........குமரேசனே! -, முன் அஞ்சலென நாயின் உடல் தருமன் சுமந்து ஆற்றைக் கடத்துவித்தான் - முற்காலத்தில் அஞ்சாதே என்று ஒரு நாயைத் தருமபுத்திரன் சுமந்துசென்று ஆற்றைக் கடப்பித்தான்; அடைக்கலம் எனும் கயற்குஆக நெடுமாலுடன் அருச்சுனன் சமர்புரிந்தான் - அடைக்கலம் எனவந்த கயன் என்னுங் கந்தருவனைக் காப்பாற்றத் (தன் ஆருயிர் நண்பனும் தலைவனுமான) திருமாலுடன் அருச்சுனன் போரிட்டான்; முன் தஞ்சம் எனவந்திடு புறுவுக்குச் சிபி சரீரந் தனைக் கொடுத்தான் - முற்காலத்தில் அடைக்கலம் என்று

வந்த புறாவைக் காப்பாற்றச் சிபிச்சக்கரவர்த்தி தன் மெய்யையே அதற்கு ஈடாகத்தந்தான்; முன் தடமலேச்சிறகு அரிந்தவனைக் காக்கத் ததீசி முதுகுஎன்பு அளித்தான் - முன்னாளில் பெரிய மலைகளின் சிறகை வெட்டிய இந்திரனைக் காப்பாற்றத் ததீசிமுனிவன் தன் முதுகெலும்பை (வச்சிராயுதமாக்க) அளித்தான்; இன்சொலுடனே பூததயவு உடையர் ஆயினோர் - இனியமொழியும் உயிர்களிடம் இரக்கமும் கொண்டோர், ஆபத்திலே எவருக்கும் தம் இனிய சீவனை விடுத்தாகிலும் காத்து இரங்கி ரட்சிப்பர் அன்றோ? - இடையூறு எவர்க்கு நேர்ந்தாலும் தம் இனிய உயிரைவிட்டாவது இரக்கத்துடன் காப்பாற்றியருளுவர் அல்லவா?

தருமன் கதை :

தருமன் சுவர்க்கத்தை நாடிப்போகையில், ஒருநாய் இழிந்த நாற்றத்துடன் பின்தொடர்ந்தது. அங்குக் குறுக்கிட்ட ஆற்றைக் கடக்கமுடியாமல் அது வருந்த, நாயைத் தருமன் தன் தோளிலே சுமந்து அக்கரையிற் கொண்டுசேர்த்தான்.

அருச்சுனன் கதை :

தன்னைக் கொல்லவேண்டிச் சக்கரத்தை ஏவிய கண்ணனுக்கு அஞ்சிய கயன் என்னும் கந்தருவன் அருச்சுனனைச் சரணடைந்தான். அவனைக் காப்பதற்காகக் கண்ணனோடு அருச்சுனன் போர் செய்யநேர்ந்தது. முடிவில் இருவரும் சமாதானம் அடைந்து கந்தருவனை விடுவித்தனர்.

சிபிச்சக்கரவர்த்தி கதை :

ஒரு வேடன் புறா ஒன்றைத் துரத்திவந்தான். அப்புறா சிபிச் சக்கரவர்த்தியின் மடியில்வந்து விழுந்துவிட்டது. அதனைக் காப்பதற்காக வேடன் விரும்பியவாறு தன் மெய்யிலிருந்து ஊனை அரிந்து புறாவின் எடைக்கு ஈடாகும்படித் தராசில் வைத்தான். புறா தெய்வத்தன்மையுடையதாகையால், அவனுடைய மெய்யிலுள்ள ஊனைவிடக் கனத்தது. இறுதியில் அவனே தராசில் நின்றான். அவனுடைய பண்பை ஆராயவந்த வேடனாகிய இந்திரனும் புறாவாகிய அக்கினியும் மகிழ்ந்தனர்.

ததீசியின் கதை :

இந்திரனுடைய வச்சிராயுதம் மிகவும் பழையதாகி முறிந்துவிட்டது. அவனுக்குப் புதிய வச்சிராயுதம் வேண்டும் என்று

அறிந்த ததீசிமுனிவர் தம் முதுகெலும்பை யெடுத்துச் செய்து கொள்ளக் கூறிவிட்டு யோகப்பயிற்சியினாலே உயிரைவிட்டார். அவனும் அவ்வாறே செய்து வெற்றியுற்றான்.

மலைகளின் சிறகரிந்த கதை:

ஒருகாலத்தில் மலைகளுக்குச் சிறகுகள் இருந்தனவாம். அவை பறந்துசென்று நாடுநகரங்களின்மேல் விழுந்து அவற்றை அழித்து வந்தனவாம். இந்திரன் அவற்றின் கொடுமையை அழிக்க எண்ணிச் சிறகுகளை அரிந்தனனாம்.

(**கருத்து**) அடைக்கலப்பொருளை ஆதரித்தல்வேண்டும். (கஎ)

கஅ. தக்கவையும் தகாதவையும்

பாலினொடு தேன்வந்து சேரில்ருசி அதிகமாம்
பருகுநீர் சேரின்என் னாம்
பவளத்தினிடை முத்தை வைத்திடிற் சோபிதம்
படிகமணி கோக்கின்என் னாம்
மேலினிய மன்னர்பால் யானைசேர் வதுகனதை
மேடமது சேரின்என் னாம்
மிக்கான தங்கத்தில் நவமணி உறின்பெருமை
வெண்கல் அழுத்தின்என் னாம்
வாலிப மினார்களுடன் இளையோர்கள் சேரின்நலம்
வளைகிழவர் சேரின்என் னாம்
மருவுநல் லோரிடம் பெரியோர் வரின்பிரியம்
வருகயவர் சேரின்என் னாம்
மாலிகை தரித்தமணி மார்பனே தெய்வானை
வள்ளிக்கு வாய்த்தகண வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) மணிமாலிகைதரித்த மார்பனே தெய்வானை வள்ளிக்குவாய்த்த கணவா - மணிமாலையணிந்த

மார்பனே தெய்வயானைக்கும் வள்ளிக்குங் கணவனான வனே, மயிலேறி........குமரேசனே! - , பாலினொடு தேன் வந்துசேரின் ருசி அதிகம்ஆம் - பாலுடன் தேன் கலந்தால் இனிமை மிகும்; பருகும்நீர் சேரில் என்ஆம் - குடிக்கும் நீர் பாலுடன் கலந்தால் இனிமை தருமா? பவளத்தின் இடைமுத்தை வைத்திடின் சோபிதம் - பவளத்தின் இடையிலே முத்தை அமைத்தால் விளக்கமாகும்; படிகமணி கோக்கின் என்ஆம் - படிகமணியைத் தொடுத்தால் விளக்கமுறுமா? மேல் இனிய மன்னர்பால் யானை சேர்வது கனதை - மேன்மையுடைய நல்ல அரசரிடம் யானைவருவது பெருமை; மேடமதுசேரின் என்ஆம் - ஆடு வருவது பெருமையா? மிக்கான தங்கத்தில் நவமணி உறின் பெருமை - உயர்ந்த பொன்னில் ஒன்பதுவகை மணிகள் பதிப்பது சிறப்பு; வெண்கல் அழுத்தின் என்ஆம் - வெள்ளைக்கல்லைப் பதிப்பது சிறப்பாகுமா? வாலிப மினார்களுடன் இளையோர்கள்சேரின் நலம் - பருவமங்கையருடன் இளைஞர்கள் கூடுவது நன்மை; வளைகிழவர் சேரின் என்ஆம் - முதுகு கூனிய முதியவர்கள் கூடுவது நன்மையா? மருவும் நல்லோரிடம் பெரியோர் வரின் பிரியம் - நற்பண்புடையோரிடம் நல்லோர் சேர்வதே விருப்பமாகும்; வருகயவர் சேரின் என்ஆம் - தீயவர் கலப்பது விரும்பத்தக்கதா?

(கருத்து) ஒத்தபண்புடைய பொருள்களுக்கே பொருத்தம் உண்டாகும். (கூஅ)

௯௯. சான்றோர் தன்மை

அன்னதா னஞ்செய்தல் பெரியோர்சொல் வழிநிற்றல்
ஆபத்தில் வந்தபேர்க் கு
அபயம் கொடுத்திடுதல் நல்லினம் சேர்ந்திடுதல்
ஆசிரியன் வழிநின்(று) அவன்
சொன்னமொழி தவறாது செய்திடுதல் தாய்தந்தை
துணையடி அருச்சனை செயல்
சோம்பலில் லாமல்உயிர் போகினும் வாய்மைமொழி
தொல்புவியில் நாட்டியிடு தல்

மன்னரைச் சேர்ந்தொழுகல் கற்புடைய மனைவியொடு
வைகினும் தாமரை யிலை
மருவுநீர் எனவுறுதல் இவையெலாம் மேலவர்தம்
மாண்(பு)என்(று) உரைப்பர்அன் றோ
வன்னமயில் மேலிவர்ந்(து) இவ்வுலகை ஒருநொடியில்
வலமாக வந்தமுரு கா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே.

(இ - ள்.) வன்ன மயில்மேல் இவர்ந்து இவ்வுலகை ஒருநொடியில் வலமாகவந்த முருகா - அழகிய மயில்மேல் அமர்ந்து இந்த வுலகத்தை ஒரு விநாடியிற் சுற்றிவந்த முருகனே! மயிலேறி........குமரேசனே! -, அன்னதானம் செய்தல் - (பசித்தவருக்கு) உணவுகொடுத்தல், பெரியோர் சொல்வழிநிற்றல் - பெரியோர் கூறிய நெறியிலே செல்லுதல், ஆபத்தில் வந்தபேர்க்கு அபயம் கொடுத்திடுதல் - இடையூறென வந்தவர்களுக்குப் புகல் அளித்தல், நல் இனம் சேர்ந்திடுதல் - நல்லோருடன் நட்புக்கொள்ளுதல், ஆசிரியன் வழிநின்று அவன் சொன்னமொழி தவறாது செய்திடுதல் - ஆசிரியன் போக்கிலே தானும் சென்று அவன் ஆணைப்படி நடத்தல், தாய்தந்தை துணைஅடி அருச்சனை செயல் - பெற்றோரின் இருதாள்களிலும் மலரிட்டு வணங்குதல், உயிர்போகினும் சோம்பல் இல்லாமல் வாய்மைமொழி தொல்புவியில் நாட்டியிடுதல் - உயிர்போனாலும் சோர்வு இன்றி உண்மைமொழியை (இப்) பழைய வுலகிலே நிலைநிறுத்தல், மன்னரைச் சேர்ந்தொழுகல் - அரசரின் ஆதரவிலே வாழ்க்கையை நடத்துதல், கற்புடைய மனைவியொடு மருவினும் - கற்பிற்சிறந்த இல்லாளுடன் வாழ்ந்தாலும், தாமரைஇலை மருவுநீர் என உறுதல் - தாமரையிலையிலே கலந்த நீரைப்போல (பற்றின்றி) இருத்தல், இவையெலாம் - இவையாவும், மேலவர்தம் மாண்பு என்று உரைப்பர் அன்றோ - பெரியோருடைய தகுதியென்று கூறுவர் அல்லவா?

(கருத்து) உண்டியளித்தல் முதலான இவையாவும் பெரியோரின் பண்புகள் என்று பெரியோர் கூறுவர். (௯௯)

௧00. நூலின் பயன்

வன்னமயில் ஏறிவரு வேலாயு தக்கடவுள்
 மலைமேல் உகந்தமுரு கன்
வள்ளிக் கொடிக்கினிய வேங்கைமரம் ஆகினோன்
 வானவர்கள் சேனா பதி
கன்னல்மொழி உமையாள் திருப்புதல்வன் அரன்மகன்
 கங்கைபெற் றருள்புத் திரன்
கணபதிக்(கு) இளையஒரு மெய்ஞ்ஞான தேசிகக்
 கடவுள்ஆ விநன்குடியி னான்
பன்னரிய புல்வயலில் வாலகும ரேசன்மேல்
 பரிந்துகுரு பாததா சன்
பாங்கான தமிழாசி ரியவிருத் தத்தின்அறை
 பாடலொடு நூறும்நா டி
நன்னயம தாகப் படித்தபேர் கேட்டபேர்
 நாள்தொறும் கற்றபேர் கள்
ஞானயோ கம்பெறுவர் பதவியா வும்பெறுவர்
 நன்முத்தி யும்பெறுவ ரே.

(இ - ள்.) வன்னமயில் ஏறிவரு வேலாயுதக் கடவுள் - அழகிய மயிலின்மேல் எழுந்தருளும் வேலாயுதம் ஏந்திய பெருமான், மலைமேல் உகந்த முருகன் - மலைகளில் வாழ்வதை விரும்பிய முருகன், வள்ளிக்கொடிக்கு இனிய வேங்கைமரம் ஆகினோன் - பூங்கொடிபோன்ற வள்ளியம்மையாரை மணக்க அழகிய வேங்கைமரம் ஆகினின்றவன், வானவர்கள் சேனபதி - அமரர் படைத்தலைவன், கன்னல் மொழி உமையாள் திருப்புதல்வன் - கரும்பைப்போன்ற மொழியை உடைய உமையம்மையாரின் திருமகன், அரன் மகன் - அரனார் திருமகன், கங்கை பெற்றருள் புத்திரன் -

கங்கையின் திருப்புதல்வன், கணபதிக்கு இளையஒரு மெய்ஞ் ஞான தேசிகன் - விநாயகருக்குப்பின் பிறந்த ஒப்பற்ற மெய்ஞ்ஞான குரு, ஆவினன் குடியினன்-ஆவினன் குடியில் வாழ்வோன், பன்னரிய புல்வயலில் வாலகுமரேசன்மேல் - (ஆகிய) புகழ்தற்கடங்காத திருப்புல்வயலில் வாழும் பால குமரக்கடவுள் திருவடிக்கு, பரிந்து - விரும்பி, பாங்கான தமிழ் ஆசிரிய விருத்தத்தின் - அழகிய தமிழில் ஆசிரிய விருத்தமென்னும் பாவினத்தால், குருபாததாசன் அறை பாடல் ஒருநூறும் - குருபாததாசன் என்னும் அடியேன் பகர்ந்த நூறு செய்யுளையும், நாடி நன்னயமதாகப் படித்த பேர் - ஆராய்ந்து விருப்பத்துடன் படித்தவர்களும், கேட்ட பேர் - கேட்டவர்களும், நாள்தொறும் கற்றபேர்கள் - ஒவ் வொருநாளும் பிழையறப் படித்தறிந்தவர்களும், ஞான யோகம் பெறுவர் - ஞானநெறியிலே யோகத்தை அடை வார்கள்; பதவியாவும் பெறுவர் - எல்லாப் பதவிகளையும் அடைவார்கள்; நன்முத்தியும் பெறுவர் - நல்ல வீட்டையும் (இறுதியில்) அடைவார்கள்.

(கருத்து) குமரேசசதகத்தைப் படித்தவர் முருகனருளால் எல்லா நன்மைகளையும் இனிதே பெறுவர். (௧00)

குமரேசசதகம் மூலமும் உரையும்

முற்றும்.

செய்யுள் முதற்குறிப்பு

விலை ரூ. 2.